பக்கங்கள் : பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 26 வியாழக்கிழமை (09.06.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :195

## பதுங்கித் தாக்குதலில் 2 போராளிகள் பலி!

### அம்பாறை கோமாரிக் காட்டுக்குள் சம்பவம்

அம்பாறை.ஜீன்9

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கோமாரிக் காட்டுப் பகுதியில் நேற்றுப் பகல் பதுங்கியிருந்து நடத்தப்பட்ட தாக்குதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப்படையினரும், கருணா குழுவினரும் இணைந்தே இந்தத் தாக்குதலை நடத்தினர் என்று விடுதலைப் புலிகளின் மட்டு.-அம்பாறை மாவட்ட அரசியல்துறை குற்றஞ்சாட்டியது.

போராளிகளான சுகனரஞ்சன் மற்றும் நிவேகரன் ஆகிய இருவமே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(18ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகள் இருவர் உட்பட 8 பேர் கடற்படையால் கைது

### சாலை, சாம்பல்தீவுக் கடலில் சம்பவம்

திருகோணமலை.ஜீன்9

திருகோணமலை, சாலை, சாம்பல்தீவுக் கடற்பகுதியில் படகில் சென்றுகொண்டிருந்த போராளிகள் இருவர் உட்பட 8 பேர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை 8 மணியளவில் இவர்கள் கைதுசெய்ய்ப்பட்டனர் என்று கடற்படையினர் தெரிவித்தனர். தமது போராளிகள் இருவர் உட்படச் சிலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்பதைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறை உறுதிப்படுத்தியது.

இது குறித்துப் புலிகளின் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பில் இன்னும் முழு இணக்கம் வரவேயில்லை!

## தீர்க்கப்படாத முக்கிய விடயங்கள் இழுபறி நிலையில் இருக்கின்றனவாம்

கொழும்பு,ஜீன்9

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானத்துக்கான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதில் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் முழு இணக்கம் ஏற்பட்டிருப்பது போலவும், அது தொடர்பான உடன்பாட்டில் ஒப்பமிடுவது மாத்திரமே இப்போது மிச்சம் என்பது போலவும் செய்திகள் வெளியாகிவருகின்றன. ஆனால், இவ்விடயத்தில் தீர்க்கப்படாத - தீர்வுகாணப்படாத - அடிப்படை அம்சங்கள் சில இன்னும் இழுபறி நிலையில் இருக்கின்றன என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

அவற்றுக்கு இணக்கத் தீர்வுகாணபட்டாலேயே உடன்பாடு கைச்சாத்தாவதற்கான சூழ்நிலை உருவாகும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தத் திட்டத்துக்கு 'பொதுக்கட்டமைப்பு' என்ற பெயர் நீடிப்பதை அரசு விரும்பவில்லை. 'பொதுக்கட்டமைப்பு' என்ற சொல் தென்னிலங்கையில் பெரும் 'அலர்ஜி'யை ஏற்படுத்தியிருப்பதால் ஆழிப்பேரலைக்குப் பின்னரான செயற்பாட்டுமுகாமைத்துவக் கட்டமைப்பு என்ற பெயரை இத்திட்டத்துக்குச் சூட்ட அரசுத் தரப்பு விரும்புகிறது எனப் புலிகளின் தலைமைக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாக அறியவருகின்றது.

ஆனால், இந்தப் பெயர்மாற்றத்துக்குப் புலிகள் தலைமை இணங்கும் போல் தகவல் இல்லை.

அதேநேரத்தில் இந்தக் கட்டமைப்பை மத்திய அரசின் ஏதேனும் ஒன்று அல்லது பல அமைச்சுக்களின் கீழ் இயங்க வைப்பதன்மூலம் அது

(18ஆம் பக்கம் பார்க்க)

## ஜப்பானிய துணை அமைச்சர் இலங்கை விஜயம்

கொழும்பு.ஜீன்9

ஜப்பானியத் துணை வெளிவிவகார அமைச்சர் இசிரோ ஐசவா நேற்று கொழும்புக்கு விஜயம் செய்யவிருந்தார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னரான புனர்வாழ்வுப் பணிகள் தொடர்பாகவே அவர் இலங்கைக்கு இரு தினங்கள் விஜயம் மேற்கொள்கிறார் என்று ஜப்பானியத் தூதரகம் தெரிவித்தது.

இரு தினங்கள் கொழும்பில் தங்கவுள்ள அவர், வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரையும் சந்தித்துப் பேசுவார்.

இந்த விஜயத்தின்போது அவர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குச் செல்வாரா என்பது பற்றி ஜப்பானியத் தூதரகம் தகவல் எதனையும் வெளியிடவில்லை. (ஐ-12)

## முத்தலிப் கொல்லப்பட்டதாலேயே புலிகளுக்கு ஹெலி வசதி மறுப்பு!

கொழும்பு.ஜீன்9

இராணுவப் புலனாய்வு அதிகாரி லெப்ரினன்ட் கேணல் துவான் நிஸாம் முத்தலிப் கொழும்பில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டதன் காரணமாகவே விடுதலைப் புலிகளின் தளபதிகளுக்கான ஹெலிகொப்டர் போக்குவரத்து வசதி மறுக்கப்பட்டது என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்திப்பதற்காக திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் இருந்து ஹெலிகொப்டர் மூலம் வன்னிக்குக் கூட்டிவரப்பட்ட புலிகளின் தளபதிகள் தத்தமக்குப் பொறுப்பான மாவட்டங்

(18ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்புத் திட்டத்தை எதிர்த்து ஏழு பிக்குகள் நேற்றுமுதல் சாகும்வரை உண்ணாவிரதம்

### கொழும்பு கோட்டை ரயில் நிலைய முன்றிலில்

பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து தேசிய பிக்குமார் முன்னணியின் ஏழு பிக்குமார் நேற்றுமுதல் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக நேற்றுக்காலை இந்தப் போராட்டம் ஆரம்பமானது. வண.அஸ்ஸங்கனே ரத்னபால தேரர் தலைமையிலான தேரர்கள் இந்த சாகும்வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கின்றனர். சுமார் இருபத்தி ஐந்து பிக்குகள் சூழ இருக்க இவர்கள் தமது போராட்டத்தை ஆரம்பித்தனர்.

பொதுக்கட்டமைப்பு யோசனையைக் கைவிடுவதாக அரசு அறிவிக்கும்வரை இந்த உண்ணாவிரதப் போராட்டம் தொடருமென தேசிய பிக்குமார் முன்னணி அறிவித்திருக்கிறது. (ஐ-க)

## வழமைநிலை திரும்புகையில் திருமலையில் படை வாபஸ்!

### நாடாளுமன்றில் ஜனாதிபதி உறுதி!

நாட்டின் எந்த ஒரு பகுதிக்கும் படையினரை அனுப்பி மக்களின் இயல்பு நிலையைக் குழப்புவதற்கு அரசு இடமளிக்காது. திருகோணமலையில் நிலைமைகள் வழமைக்குத் திரும்பும் போது அங்கே மேலதிகமாகக் குவிக்கப்பட்டிருக்கும் அரசபடையினர் படிப்படியாக வெளியேற்றப் படுவர் என்று உறுதியளித்துள்ளார் ஜனாதிபதி.

திருகோணமலை அசம்பாவிதங்கள் தொடர்பாகத் தமிழ்க்கூட்டமைப்பு உறுப்பினர்கள் உட்பட மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளுடன் நேரடியாகப் பேசவும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்தச் செய்தியை துறை

(18ஆம் பக்கம் பார்க்க)

## நயினை அம்மன் பெருந்திருவிழா நேற்று பக்தி பூர்வமாக ஆரம்பம்

யாழ்ப்பாணம்.ஜீன்9

சரித்திரப் பிரசித்தி பெற்ற நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் மிகவும் பக்திபூர்வமாக ஆரம்பமாகியது.

குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் இருந்து கொடியேற்றம் காண வந்த பக்தர்கள் ஆலயப் பகுதியில் திரண்டிருந்தனர்.

விசேட பூஜைவழிபாடுகளைத் தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றம் இடம் பெற்றது. ஆலயத்தின் உட்சுற்றுப்பிரகாரத்திலும் வெளியிலும் பக்தர்கள் திரண்டு காணப்பட்டனர்.

உற்சவத்தையொட்டி விசேட போக்குவரத்துச்

(18ஆம் பக்கம் பார்க்க)



நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற கொடியேற்றத்தையடுத்து, அன்னை பூரணியின் திருவுருவப்படம் வீதி வழியாக எடுத்துவரப்பட்ட காட்சி.(படம்: பகீரதன்)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



நயினாதீவு ஸ்ரீநாகபூசணி அம்பாள் ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற கொடியேற்ற வைபவத்தின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. படகுகளில் தொண்டர் அமைப்பினர் சேவையில் ஈடுபட்டிருப்பதையும், ஆலயத்தின் முகப்புத் தோற்றத்தையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம். கொடித்தம்பத்தில் கொடி ஏற்றப்பட்டிருப்பதையும் அடியார்கள் தரிசிப்பதையும் மூன்றாவது படத்தில் காணலாம்.

(படங்கள்: பகீரதன்)

# பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையும் நாடாளுமன்றக் கலைப்பும் ஒரேசமயத்தில்!

## தேர்தல் ஆணையாளரை அழைத்து ஜனாதிபதி மந்திராலோசனை

கொழும்பு.ஜூன்9

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானத்துக்கான பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் செய்துகொள்ளும் உடன்படிக்கையில் அரசுத்தரப்பின் சார்பில் கையெழுத்திடும் அதேசமயத்தில், நாடாளுமன்றத்தையும் கலைப்பதற்கு ஜனாதிபதி தீர்மானித்திருக்கிறார் என அறியவருகின்றது.

நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தல் நடத்துவது உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கவை ஜனாதிபதி சந்திரிகா அழைத்து அவருடன் கலந்தாலோசனை நடத்தியிருக்கின்றார்.

இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் இரவு கண்டியில் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் கண்டியில் பொது நிகழ்வு ஒன்றில் பங்குபற்ற ஜனாதிபதி சென்றிருந்தார். அச்சமயம் தனிப்பட்ட நிகழ்வொன்றில் பங்குபற்றுவதற்காக மாத்தளைக்குச் சென்றிருந்த தேர்தல் ஆணையாளர், ஜனாதிபதியின் விசேட அழைப்பின்பேரில் கண்டிக்கு விரைந்தார். அங்கு ஜனாதிபதியை அவர் சந்தித்தார்.

உடனடியாக நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் தேர்தலொன்றை நடத்துவதற்கான தயார்நிலை, தேவைப்பட்டால் இந்த ஆண்டு இறுதியிலேயே ஜனாதிபதித் தேர்தலை நடத்த வாய்ப்புண்டா என்பவை குறித்தெல்லாம் தேர்தல் ஆணையாளரோடு ஜனாதிபதி விரிவாகப் பேசினார் என அறியவந்தது.

தமது பொதுக்கட்டமைப்பு ஏற்பாட்டுத் திட்டத்துக்குத் தமது அரசுக் கூட்டமைப்புக்குள்ளேயே எதிர்ப்பு வலுவடைந்து வருவதால் எரிச்சலுற்றுள்ள ஜனாதிபதி குமாரதுங்க, பொதுக்கட்டமைப்பு உடன்பாடு கைச்சாத்தான கையோடு, தமது அரசுக் கூட்டமைப்பிலிருந்து பிரதான பங்காளிக்கட்சியான ஜே.வி.பி.வெளியேற தமது அரசு கவிழும் என்ற யதார்த்தத்தையும் உணர்ந்திருக்கிறார்.

எப்படியாயினும், பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதில் மிக உறுதியாக இருக்கும் ஜனாதிபதி, பொதுக்கட்டமைப்பு ஏற்பட்டதைக் காட்டி பிறர் தமது அரசைக் கவிழ்க்க முன்னர் தாமாகவே அரசைக் கலைத்துவிட்டு பொதுத் தேர்தலை நடத்தவும், அதன்மூலம் தமது அரசைக் கவிழ்க்க முயற்சித்தவர்களுக்கு பொதுத் தேர்தலில் நல்லபாடத்தைப் படிப்பிக்கவும் திட்டமிட்டிருக்கின்றார் எனக் கூறப்படுகின்றது.

இதற்காகவே பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் கைச்சாத்திடுவதையும், நாடாளுமன்றக் கலைப்பையும் ஒரே சமயத்தில் செய்ய அவர் தீர்மானித்திருக்கின்றார் என்று கூறப்படுகின்றது. (ஐ-க)

# நட்வர் சிங் இன்று வருகை

கொழும்பு.ஜூன்9

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் கே.நட்வர் சிங் இன்று கொழும்பு வருகின்றார்.

இந்த விஜயத்தின்போது இலங்கை - இந்திய நாடுகளுக்கிடையிலான பரஸ்பர விடயங்கள் பற்றி வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையிலான குழுவினருடன் நட்வர் சிங் தலைமையிலான குழுவினர் பேச்சு நடத்துவர்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இணை ஆணைக்குழுவின் 6 ஆவது கூட்டத்தொடர் இதுவாகும். வர்த்தகம், கலாசாரம், அரசியல் உட்படப் பல்வேறு விடயங்கள் குறித்தும் இந்த ஆணைக்குழு ஆராயும்.

இந்த விஜயத்தின் போது ஜனாதிபதி சந்திரிகா, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரையும் ஏனைய அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார் என்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகக் குறிப்பு ஒன்று தெரிவித்தது. (ஐ-க)

# புலிகளுடன் பேசிய விடயங்கள் குறித்து அரசுக்கு நோர்வேத் தூதர் விளக்கம்

கொழும்பு.ஜூன்9

அரச சமாதானச் செயலகப் பணிப்பாளர் ஜயந்த தனபாலவிற்கும், கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் ப்ரட்ஸ்கருக்குமிடையிலான முக்கிய பேச்சொன்று நேற்றுக் காலை நடைபெற்றது.

அரச சமாதான செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது, செவ்வாயன்று தாம் மேற்கொண்ட கிளிநொச்சி விஜயம் குறித்தும் அங்கு புலிகளின் தலைவர்களோடு தாம் நடத்திய பேச்சுகளின் பெறுபேறுகள் குறித்தும் நோர்வேத் தூதுவர் அரச சமாதானச் செயலகப் பணிப்பாளருக்கு விளக்கிக் கூறியுள்ளார் எனத் தெரியவந்தது.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பாகப் புலிகளுடன் ஆராயப்பட்ட முக்கிய விடயங்களை நோர்வேத் தூதுவர் இந்தச் சந்திப்பின்போது எடுத்துக் கூறினார் எனக் கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

சமாதான முயற்சிகளுடன் தொடர்புடைய விடயங்கள் இந்தச் சந்திப்பின்போது பேசப்பட்டதாக சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால தெரிவித்தார்.

(ஐ-க)

# முஸ்லிம் காங்கிரஸிலிருந்து பைலாவை நீக்கியது தவறு

## உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

கொழும்பு.ஜூன்9

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் எம்.பியாகி, பின்னர் அரசுப் பக்கம் தாவிய ஹுசைன் பைலாவை அதற்காகக் கட்சியிலிருந்து நீக்குவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எடுத்த தீர்மானம் சட்டவிரோதமானது.

- இவ்வாறு பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தலைமையிலான ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கின்றது.

கட்சி மாறியதால் எம்.பி. பதவியை இழக்கும் ஆபத்திலிருந்து இத்தீர்ப்புக் காரணமாக பிரதி அமைச்சர் ஹுசைன் பைலா தப்பியுள்ளார்.

பொதுத்தேர்தலுக்கு முன்னரே - 2003 ஆம் ஆண்டே - தாம் கட்சியிலிருந்து இராஜினாமாச் செய்துவிட்டதால் அதற்குப் பின்னர் தம்மை கட்சியிலிருந்து வெளியேற்ற முடியாது என்று பைலா தரப்பில் முன்வைக்கப்பட்ட வாதத்தை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

(ஐ-க)

# குருநகர் இளைஞர்களின் இறுதிச்சடங்கு சனியன்று

## பெரும் எண்ணிக்கையானோர் உடல்களுக்கு அஞ்சலி

குருநகர், ஜூன்9

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் வைத்துக் கடந்த ஞாயிறு அதிகாலை சுட்டுக்கொல்லப்பட்ட குருநகர் இளைஞர்கள் இருவரினதும் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ளன. அன்றைய தினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்க குருநகர்ப் பொது அமைப்புக்கள் தீர்மானித்துள்ளன.

இருவரது சடலங்களும் அவர்களது உறவினர்களால் கொழும்பில் இருந்து நேற்றுமுன்தினம் இங்கு எடுத்துவரப்பட்டன.

சடலங்கள் அவரவர் இல்லங்களில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கின்றன. இவர்களது உடல்கள் சனிக்கிழமை யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும்.

நேற்றுப் பெரும் எண்ணிக்கையான குருநகர் மக்கள் இருவரது உடல்களுக்கும் அஞ்சலி செலுத்தினர்.

குருநகர்ப் பகுதி எங்கும் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டுச் சோககீதம் இசைக்கவிடப்பட்டுள்ளது. இளைஞர்கள் இருவரினதும் உருவப்படங்கள் பொறித்த அஞ்சலிச் சுவர் ஒட்டிகளும் பரவலாக எங்கும் ஒட்டப்பட்டிருக்கின்றன.

(ஐ-51-7-190)

# அரசைக் காப்பாற்ற தன் வழியில் முயற்சி எடுக்கின்றார் பிரதமர்

## கட்சித் தலைவர்களுடன் அவர் ஆலோசனை

கொழும்பு.ஜூன்9

அரசுக் கூட்டமைப்புக்குள் எழுந்துள்ள நெருக்கடியால் அரசு கவிழலாம் அல்லது கலைக்கப்படலாம் என்று கருத்துக்கள் கூறப்படும் நிலையில் -

அரசைப் பாதுகாக்கும் முயற்சியாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுடன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று முக்கிய பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டுமா? அல்லது இப்போதுள்ள நெருக்கடி சூழ்நிலைக்கு வேறு வழியில் இணக்கத் தீர்வு காணமுடியுமா? என்பவை பற்றி எல்லாம் ஜனாதிபதியுடன் பிரதமர் இந்தச் சந்திப்பின்போது பேச்சு நடத்தவுள்ளார்.

முன்னதாக நேற்றுமாலை அலரிமாளிகையில் கட்சித் தலைவர்களை அழைத்து நீண்ட கலந்துரையாடலொன்றை நடத்தியிருந்த பிரதமர் மஹிந்த, தற்போதைய அரசியல் சூழ்நிலை தொடர்பில் அவர்களின் அபிப்பிராயத்தைக் கேட்டறிந்தார்.

அமைச்சர்களான அநுர பண்டாரநாயக்க, தினேஷ் குணவர்த்தன, பேரியல் அஷ்ரப், டியூ குணசேகர, திஸ்ஸ விதாரண, டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர். இந்தச் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் இன்று ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது அவருக்குப் பிரதமர் விளக்கவுள்ளார் எனப் பிரதமருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறின. (ஐ-க)

# 'பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்' நாடகம் மேடையேற்றம்

யாழ்ப்பாணம்.ஜூன்9

செயற்திறன் அரங்க இயக்கத்தினால் தயாரிக்கப்பட்ட தே.தேவானந்தின் "பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்" எனும் நாடகம் சமூக அபிவிருத்தி மன்றத்தினால் இன்று மேடையேற்றப்படவுள்ளது.

சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் தலைமையில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆசிரிய பயிற்சிக்கலாசாலை அதிபரும் சிறப்பு விருந்தினராகக் கோப்பாய்ப் பிரதேச செயலரும் கலந்துகொள்வர்.

(ஐ-12)

# கொடிகாமத்தில் இன்று சங்கம நிகழ்வு

தென்மராட்சி.ஜூன்9

கொடிகாமம் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்ச்சி இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

கொடிகாமம் பிரதேசத்தைச் சேர்ந்த தேசிய எழுச்சிப் பேரவை, ஊரகக் கிளை பொது அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரை சங்கம நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு தென்மராட்சிக் கோட்ட எழுச்சிப் பேரவை செயலாளர் க.சந்திரசேகரா கேட்டுள்ளார்.

(ஐ-117)

# நோர்வே அரசுக் குழுவினர் நாளை வடமராட்சிக்கு வருகை

வடமராட்சி.ஜூன்9

நோர்வே அரசின் பிரதிநிதிகள் குழு ஒன்று நாளை வெள்ளிக்கிழமை குடாநாட்டுக்கு விஜயம் செய்யவுள்ளது.

வடமராட்சிப் பிரதேசத்திற்குச் செல்லும் இக்குழுவினர் ஆழிப்பேரலையால் அப்பகுதியில் ஏற்பட்ட கடற்தொழில் உபகரணங்களின் இழப்புக் குறித்து ஆராய்வர். தொடர்ந்து பருத்தித்துறை முனை, வல்வெட்டித்துறை, பொலிகண்டி, ஆதிகோயிலடி ஆகிய இடங்களில் உள்ள படகுகள் திருத்தும் நிலையங்களையும் பார்வையிடுவர்.

அன்றையதினம் பிற்பகல் 'போரூட்' நிறுவனத்தின் யாழ். பிரதிநிதிகளுடன் குழுவினர் கலந்துரையாடுவர். பின்னர் அன்றையதினமே கொழும்பு திரும்புவர். (ஐ-173-202)

# ஆபிரிக்காவிலுள்ள வறிய நாடுகளுக்கு கடன் வழங்கும் ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தில்

## அமெ.ஜனாதிபதி, பிரிட்டிஷ் பிரதமர் தெரிவிப்பு

வாஷிங்டன்,ஜூன்9

ஆபிரிக்காவின் வறிய நாடுகளுக்கு கடன் சலுகை வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட ஒப்பந்தம் இறுதிக்கட்டத்தை அண்மித்துள்ளது.




அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ், பிரிட்டிஷ் பிரதமர் டொனிபிளேயர் ஆகியோர் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இதேபோன்று முன்மொழியப் திட்டத்தில் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் ஊழல் மோசடிகளை கட்டுப்படுத்திய 32 ஆபிரிக்க நாடுகள் அவை பெற்ற கடன்களை மீளச் செலுத்த வேண்டியதில்லை என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜி.8 நாடுகளின் மாநாட்டின் போது இந்தத் திட்டத்திற்கு ஏனைய செல்வந்த நாடுகளிலிருந்து ஒத்துழைப்பு பெற புஷ் மற்றும் பிளேயர் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவித்தனர்.

இதேவேளை, ஆபிரிக்காவுக்கு அதிகளவு நிதியுதவி வழங்கப்போவதாக அமெரிக்கா உறுதயளித்துள்ளது.

இதன்போது ஆபிரிக்காவின் வறுமையை ஒழிப்பதற்கு 60 கோடியே 74 லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்க தான் தயாராக இருப்பதாகப் புஷ் தெரிவித்தார். இதில் 40 கோடியே 14 லட்சம் அமெரிக்க டொலர்கள் எதியோப்பியா, எரித்திரியா ஆகிய நாடுகளின் மனிதாபிமான அவசர உதவிகளுக்காக பட்டினியை ஒழிக்கும் வகையில் செலவிடப்படவுள்ளது எனப் புஷ் தெரிவித்தார்.

இந்த முழுத்தொகையை அமெரிக்காவின் ஆண்டுத் தேசிய வருமானத்தில் 0.7 வீதம் என்றும் இதனை ஆபிரிக்க நாடுகளின் அபிவிருத்திக்கு செலவிட ஐக்கிய நாடுகளின் சர்வதேச உதவிப் பிரிவு சிபாரிசு செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இருந்தபோதிலும் அமெரிக்கா இன்னும் மிகச் சரியான முடிவுகளை எடுக்கத் தவறி வருவதாக கொலம்பியப் பல்கலைக்கழக பேராசிரியர் ஜெப்ரிச் செங் கூறியுள்ளார்.

நேற்றுமுன்தினம் அமெரிக்காவுக்கு விஜயம் செய்த பிரிட்டன் பிரதமர் டொனிபிளேயா ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ்ஷை சந்தித்த பின்னர் இருவரும் இணைந்து இந்த ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தினர். (க-8)

## ஜயேந்திரர் - விஜயேந்திரர் காஞ்சிபுரம் திரும்பினர்



காஞ்சிபுரம்,ஜூன்9

சங்கராச்சாரியார்கள் ஜயேந்திரர், விஜயேந்திரர் நேற்றுக்காலை காஞ்சிபுரம் சங்கர மடத்திற்குத் திரும்பினர்.

கலவை சங்கர மடத்தில் இருந்து நேற்றுக் காலை 5 மணிக்குப் புறப்பட்ட சங்கராச்சாரியார்கள் காஞ்சிபுரத்திற்கு 6.20 மணிக்கு வந்து சேர்ந்தனர். சங்கர மடத்தின் வாசலில் அவர்களுக்குப் பக்தர்கள் பூரண கும்ப மரியாதை அளித்தனர். காஞ்சி மடத்தின் மேலாளர் மகாதேவன், காமாட்சியம்மன் கோயில் செயலாளர் செல்லப்பா ஆகியோர் அவர்களை வரவேற்றனர்.

மடத்தினுள் சென்றதும் அவர்கள் ஆதி சங்கரர் சிலைக்குத் தீப ஆராதனை செய்து வழிபட்டனர். பின்னர் அங்கு மண்டபத்தில் திரண்டிருந்த பக்தர்களுக்கு ஆசிவழங்கினர்.

வரதராஜப் பெருமாள் கோயில் மேலாளர் சங்கரராமன் கொலைசெய்யப்பட்ட வழக்கில் கைதான சங்கராச்சாரியார்கள் கலவை மடத்தில் 6 மாத காலமாகத் தங்கியிருந்தனர். (8)

# பதவி விலகல் முடிவை திரும்பப் பெறப்போவதில்லை

## அத்வானி உறுதிபடத் தெரிவிப்பு

புதுடில்லி,ஜூன்9

பதவி விலகலைத் திரும்பப் பெறமாட்டேன் என்று அத்வானி மீண்டும் உறுதியாகத் தெரிவித்துள்ளார்.

டில்லியில் பிரதமர் மன்மோகன்சிங்கை நேற்றுச் சந்தித்துப் பேசிய பிறகு நிருபர்களிடம் அவர் கூறியதாவது:-

பா.ஜ.க. தலைவர் பதவியிலிருந்து நான் விலகியதைத் திரும்பப் பெறவேண்டும் என்று முன்னாள் பிரதமர் வாஜ்பாய் உட்பட மூத்த தலைவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். என் மீது அவர்கள் காட்டிய அன்புக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். பதவி விலகலைத் திரும்பப் பெறுவதில்லை என்பதில் உறுதியாகவுள்ளேன்.

பாகிஸ்தான் தலைவர்களுடன் பேச்சு நடத்தியது குறித்துப் பிரதமரிடம் எடுத்துக் கூறினேன்.

பாகிஸ்தானில் இப்போதைய நிலைமை முழுவதுமாக மாறியுள்ளது. அரசியல்வாதிகள் முதல் சாமான்ய மக்கள் வரை இந்தியாவுடன் நல்லுறவு கொள்ளவே விரும்புகின்றனர்.

இந்தியா, பாகிஸ்தான் அமைதிப்பேச்சு வெற்றிபெற காங்கிரஸ் கூட்டணி அரசுக்கு பா.ஜ.க. முழு ஒத்துழைப்பு அளிக்கத் தயாராக இருக்கிறது என்றார் அத்வானி.

அதே நேரத்தில், அத்வானிக்கு ஆதரவாக பா.ஜ.க. மூத்த தலைவர்கள் அணிதிரண்டு வருகின்றனர். அவர்கள், தொகாடியா மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று வலியுறுத்தினர்.

சங்கப் பரிவார அமைப்புகளின் தலைவர்கள் சிலர் என்னைத் துரோகி என்று வர்ணித்துளனர். அது என் மனத்தைப் புண்படுத்திவிட்டது. அதை பா.ஜ.க. தலைவர்கள் கண்டிக்காதது என் வேதனையை அதிகரித்துவிட்டது - என்று தம்மைச் சந்தித்த தலைவர்களிடம் அத்வானி கூறி வருத்தப்பட்டிருக்கிறார்.

அவரைச் சந்தித்துவிட்டு வந்த மூத்ததலைவரான சுமித்ரா மகாஜன், அத்வானிதான் எங்கள் தலைவர். பிரவீண் தொகாடியா அல்ல. அவரது ராஜினாமாவை ஏற்றுக்கொள்ள விடமாட்டோம். ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் விமர்சனம் செய்யுமுன் அத்வானியின் உரையை முழுமையாகப் படித்துவிட்டுப் பேசவேண்டும் - என்று குறிப்பிட்டார். (8)

# வனவிலங்கு வேட்டை; பட்டோடிக்கு அழைப்பாணை

ஜாஜர்,ஜூன்9

வன விலங்குகள் பாதுகாப்புச் சட்டத்தை மீறியதாக புகாரில் சிக்கியுள்ள இந்திய அணியின் முன்னாள் கப்டன் நவாப் அலிகான் பட்டோடி மற்றும் 6 பேருக்கு பொலீஸார் அனுப்பிய அந்த அழைப்பாணையில் கூறப்பட்டுள்ளது.

அப்படி வரத் தவறினால் அவர்களைக் கைதுசெய்து அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜாஜர் அருகே வனவிலங்கு சரணாலயம் உள்ளது. பட்டோடியும் அவரது சாகாக்களும் அப்பகுதியில் வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது பொலீஸார் நிறுத்தி சோதனை செய்தனர். வாகனத்தில் துப்பாக்கி, துப்பாக்கி ரவை, விலங்குகளின் உடல்கள், தோல்கள் சிக்கின.

இதையடுத்து வன விலங்குப் பாதுகாப்புச் சட்டத்தை மீறி விலங்குகளை வேட்டையாடியதாக புகாரின்பேரில் அவர்கள் மீது வழக்குப் பதிவுசெய்யப்பட்டது. இதற்கிடையில் பட்டோடியுடன் சென்றவர்களில் மதன் சிங் என்பவர் திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டார்.

பட்டோடியின் வாகனத்தில் இருந்த விலங்குகளின் உடல்கள், ஜாஜர் கால்நடை மருத்துவமனை அருகே மயானத்தில் புதைக்கப்பட்டது.(8)

உலக அரங்கில்

# ஈரானிலிருந்து குழாய்மூலம் எரிவாயு; திட்டத்திற்கு பாக். ஜனாதிபதி அனுமதி

## இந்திய அமைச்சர் மணிசங்கர் ஐயர் தகவல்

இஸ்லாமபாத்,ஜூன் 9

ஈரானிலிருந்து குழாய் மூலம் பாகிஸ்தான் மற்றும் இந்தியாவுக்கு எரிவாயு இறக்குமதி செய்யும் திட்டத்தை விரைந்து செயற்படுத்த பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் அனுமதியளித்துள்ளார் என இந்திய மத்திய பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் மணிசங்கர் ஐயர் தெரிவித்தார்.

இஸ்லாமபாத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய மத்திய பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத்துறை அமைச்சர் மணிசங்கர் அய்யர் பாக்.ஜனாதிபதி முஷாரப்புடன் நேற்று முன்தினம் ஒரு மணிநேரம் பேச்சு நடத்தினார். அதன்பின்னர் செய்தியாளர்களுக்கு வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்தும் கூறியதாவது:-

எனது பாகிஸ்தான் பயணம் நான் எதிர்பார்த்ததைவிட வெற்றியளித்திருக்கிறது. இரு நாடுகளுக்கிடையிலான உறவைப் பலப்படுத்தும் முயற்சியில், குழாய் எரிவாயுத்திட்டமும் முக்கிய பங்காற்றும்.

கடந்த இரண்டு நாள்கள் நடந்தகுழாய் எரிவாயுத்திட்டப் பேச்சுகள் தொடர்பாக முஷாரப்பிடம் விவரித்தேன். கூட்டு நடவடிக்கைக்குழு அமைத்தது, பாகிஸ்தான் பெற்றோலிய அமைச்சர் அமானுல்லா கான்ஜடுனின் இந்தியப் பயணம், பாகிஸ்தானுக்கு எனது இரண்டாவது பயணம் ஆகியவற்றுக்கு அவர் அனுமதியளித்தார்.

ஈரானில் இருந்து குழாய் மூலம் எரிவாயு கொண்டுவரும் திட்டம் வெற்றிபெற வாழ்த்துத் தெரிவித்த அவர், இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் நடவடிக்கைகளை விரைவுபடுத்த ஒப்புதல் அளித்துள்ளார். - என்றார் அவர்.

இதற்கிடையில் இந்தியா - பாகிஸ்தான் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில், ஈரான் மற்றும் துருக்மேனிஸ்தான் குழாய் எரிவாயுத்திட்டத்துடன், கட்டாரிலிருந்து எரிவாயு கொண்டுவரும் திட்டத்திலும் பங்கேற்க இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளது. (க-8)

# வி.எச்.பி - பா.ஜ.க.மோதல் குஜராத்தில் 50 பேர் கைது!

அகமதாபாத்,ஜூன் 9

பா.ஜ.க.தலைவர் அத்வானி ராஜினாமாச் செய்ததை வி.எச்.பி.பஜ்ரங்தள் தொண்டர்கள் கொண்டாடினர். அதை பா.ஜ.க.தொண்டர்கள் தடுக்கும் போது மோதல் ஏற்பட்டது.

அத்வானி ராஜினாமாச் செய்ததை குஜராத் மாநிலம், அகமதாபாத் கட்லோதியா பகுதியில் நேற்றுமுன்தினம் விஸ்வ இந்து பரிஷக், பஜ்ரங்தள் தொண்டர்கள் ஆடிப் பாடிக கொண்டாடினர். அத்வானிக்கு எதிராக கோஷங்கள் போட்டனர். பட்டாசுகள் வெடித்து மகிழ்ந்தனர். அதற்கு பா.ஜ.க. தொண்டர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இரு தரபபுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது. மோதல் உச்சக்கட்டத்தை அடையும் முன் பொலீஸார் அந்த இடத்தில் குவிக்கப்பட்டனர்.

இது தொடர்பாக வி.எச்.பி., பஜ்ரங்தள் தொண்டர்கள் 50 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். பிரச்சினை இவ்வளவு பெரிதான நிலையிலும், குஜராத் பா.ஜ.க.தலைவர்கள் மௌனம் காத்துவருகின்றனர்.

இதேபோல், காந்தி நகரிலும் அத்வானி ராஜினாமாவை வரவேற்று வி.எச்.பி., தொண்டர்கள் விழா நடத்தினர். (8)




# பா.ஜ.கவின் புதிய தலைவராகும் வாய்ப்பு ராஜ்நாத் சிங்குக்கு



புதுடில்லி,ஜூன்9

பா.ஜ.க. தலைவர் பதவியை ராஜினாமாச் செய்த முடிவைத் திரும்பப் பெறப்போதில்லை என்று எல்.கே. அத்வானி உறுதியுடன் இருப்பதால் அடுத்து அப்பதவிக்குச் சரியானவர் யார் என்ற கேள்வி கட்சியில் எழுந்துள்ளது.

பலருடைய பெயர்கள் கூறப்பட்டாலும் உத்தரப் பிரதேச முன்னாள் முதல்வரும் கட்சியின் பொதுச் செயலருமான ராஜ்நாத் சிங் புதிய தலைவராவார் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது.

தாகுர் இனத்தைச் சேர்ந்த ராஜ்நாத் சிங், சங்கப் பரிவார அமைப்புகளுக்கு ஆதரவாளர் மிக முக்கியமான மாநிலமான உத்தரப் பிரதேசத்தில் பிரபலமானவர். மேலும், அடுத்த தலைமுறைத் தலைவராக இருப்பதால் கட்சி தலைமைக்கு உகந்தவராகக் கூறப்படுகிறது.

கட்சியின் முன்னாள் தலைவர்கள் எம். வெங்கையநாயுடு, முரளி மனோகர் ஜோஷி, கட்சியின் மாநிலங்களவைத் துணைத் தலைவர் சுஷ்மா ஸ்வராஜ், முன்னாள் மத்திய அமைச்சர்கள் அருண் ஜேட்லி, பிரமோத் மகாஜன் ஆகியோரின் பெயர்களும் கட்சித் தலைவர் பதவிக்குப் பரிசீலிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

இருப்பினும், ராஜ்நாத் சிங்குக்குத்தான் அதிக வாய்ப்புகள் இருப்பதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (8)



உ

ஊர்காவற்றுறை – புளியங்கூடல் – செருத்தனைப்பதி

ஸ்ரீ மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்

வருடாந்த மஹோற்சவம் - 2005

10.06.2005 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றம்
17.06.2005 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு புதிய சப்பைரத வெள்ளோட்டம். இரவு 7மணிக்கு புதிய சப்பைரத உற்சவம்.
18.06.2005 சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழா
19.06.2005 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவம்

அடியார்கள் வருக! திருவருள் பெறுக!

செருத்தனைப்பதி,
புளியங்கூடல், ஊர்காவற்றுறை.


# ஐந்து மாதங்களில் 1045 நாய்கள் அழிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்,9

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் கடந்த ஐந்து மாதங்களில் மட்டும் ஆயிரத்து 45 கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப் பட்டுள்ளன என்று யாழ்மாநகர சபையின் பொதுச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் 160 நாய்களும் பெப்ரவரி மாதம் 195 நாய்களும் மார்ச மாதம் 120 நாய்களும் ஏப்ரல் மாதம் 212 நாய்களும் மே மாதம் 358 நாய்களும் பிடித்து அழிக்கப்பட்டுள்ளன.

(ஓ-7)

# முதியோருக்கு சஞ்சிகை

வலி.மேற்கு,ஜூன்,9

இந்த ஆண்டுக்கான முதியோர் தினத்தையொட்டி முதியோர்கள் தொடர்பான கட்டுரைகள் அடங்கிய சஞ்சிகை ஒன்று வெளியிடப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை வயதுவந்தோர்களுக்கான தேசிய செயலகம் மேற்கொண்டுள்ளது.

இது தொடர்பான அறிவுறுத்தலை வயது வந்தோர்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் கீத்தலமணி கருணாரட்ன சகல பிரதேச செயலர்களுக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

முதியோர்கள் தொடர்பான தரமான கட்டுரைகள் தெரிவு செய்யப்பட்டு சஞ்சிகையில் பிரசுரிக்கப்படவுள்ளன.

கட்டுரைகளை அனுப்பவிரும்புகின்றவர்கள் பிரதேச செயலகங்களிலுள்ள சமூக சேவை உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-175)


சிவமயம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது ஆலயத்தில் பல வருடங்களாக நித்திய. நைமித்திய பூஜைகளில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்ற தாவடியைச் சேர்ந்த

**பிரம்மஸ்ரீ சிவகடாக்ஷக் குருக்கள் விவஸ்வத மூர்த்தி சர்மா**

அவர்களுக்கு இன்று (09.06.2005) வியாழக்கிழமை சிவாச்சார்யாபிசேக பட்டமளிப்பு விழாவை மனமகிழ்வுடன் ஏற்று அவரது சிவாச்சார்ய பணி எமது ஆலயத்திற்கும் சைவப் பெருமக்களுக்கும் என்றும் கிடைக்க வேண்டும் என்றும் எல்லா நலன்களும் அவருக்கு அருளவேண்டுமென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிவாச்சார்ய பெருந்தகையின்
ஆசியை இறைஞ்சி நிற்கும்

தாவடி அருள்மிகு புளியடி ஞானவைரவர் ஆலயத்தினர்.

(36338) (42-14-17)



## யாழ் மக்களுக்கு இதோ ஓர் அரியவாய்ப்பு!

ஐஸ்கிறீம் தயாரிக்கும் இயந்திரங்கள் விற்பனைக்கு வந்துள்ளன!



* அமெரிக்கத் தொழில்நுட்பம்
* தன்னியக்கமானது
* இருவகை சுவை
* வெள்ளையிரும்பினாலானவை
* விற்பனைக்குப் பிந்திய சேவை

ஹோட்டல், பாடசாலை, சுப்பமாக்கற், கூல்ஸ்பொட், அகியவற்றுக்கு உகந்தது.
மற்றும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இனிப்புவகைகள் விற்பனைக்கு
யாழ்ப்பாணம் – கிளிநெச்சி முகவர் தேவை
தொடர்புகளுக்கு: ☎071 4151323



## மனமுவந்து வாழ்த்துகின்றோம்



எமது ஊர் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி தேவஸ்தான பிரதம குரு "சிவாச்சார்ய இளஞ் சுடர்" பூரண கீதச்சந்திரக் குருக்கள் தம்பதியாின் புத்திரனும், எமது ஊர் அந்தண குலப் பெரியார், ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி தேவஸ்தான முன்னாள் பிரதம குரு "டாக்டர்" சோ.சுப்பிரமணியக் குருக்கள் அவர்களின் பௌத்திரன் (புதல்வரும்) ஆகிய

செல்வன்

**பூரணகீத சுயனஸ்ரீசர்மா**

அவர்கள்

இன்று (09.06.2005) வியாழக்கிழமை பிரம்மோபதேசம் பெறுவதையொட்டி, நாம் மனமுவந்து அன்னாரை வாழ்த்தி மகிழ்கின்றோம். அவர்கள் பார்புகழும் வண்ணம் நீடு வாழ்ந்து, தெய்வீகப் பணிகளில் சிறந்தோங்கிப் பெருமை பெற்று, அதனால் எம்பதியும் சிறப்புற்று விளங்கும் வண்ணம் அருள் பாலிக்க, எல்லாம் வல்ல ஸ்ரீ சித்திர வேலவன் திருவடிகளைப் பணிந்து, மகிழ்வோடு நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

கோப்பாய் வடக்கு சனசமூக நிலையம்,
கோப்பாய் விளையாட்டுக் கழகம்,
கோப்பாய் ஞானபண்டித சைவ விருத்திச் சங்கம்,
கோப்பாய்.

(சி-43273)(39-14-17-42)



## கண்ணீர் அஞ்சலி

முன்னாள் மருத்துவபீட பீடாதிபதியும்
சமுதாய மருத்துவத்துறைத் தலைவரும்
எமது மதிப்பிற்குரிய ஆசானுமாகிய

பேராசிரியர்

**செல்லத்துரை சிவஞானசுந்தரம் (நந்தி)**

அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர்ப்பூக்களைக் காணிக்கையாக்குவதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அன்னாரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மருத்துவ சங்கம்,
கிளிநொச்சி.

(சி-43276) (42-14-17)





உ

சிவமயம்

## யாழ். வண்ணை குளங்கரை மருதடி ஸ்ரீ காமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம் (நாச்சிமார் கோயில்)

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

**அம்பிகை அடியார்களே !**

நிகழும் பார்த்திப வருடம் வைகாசி மாதம் 27 ஆம் நாள் (10.06.2005)வெள்ளிக்கிழமை காலை 8.15 மணிமுதல் 9.15 மணி வரையுள்ள கடகலக்கின சுப வேளையில் அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெற காமாட்சி அம்பாள் திருவருள் பாலித்துள்ளமையால் அடியார்கள் யாவரும் வந்து தரிசித்து இஷ்டசித்திகளைப் பெறும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

வைகாசி 26 ஆம் நாள் இன்று (09.06.2005) வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு அனுஞ்கை முதலிய பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகும்.

கிரியைகள் யாவும் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ. ச. மஹேஸ்வரக்குருக்கள் (நயினை, சுதுமலை) தலைமையில் நடைபெறும்.

தர்மகர்த்தா சபை , வண்ணை ஸ்ரீகாமாக்ஷி அம்பாள் தேவஸ்தானம்.



## விளம்பர அனுசரணை:

அசல் 22 கரட் தங்க நகைகளை குறித்த தவணையில் சிறந்த முறையில்உங்கள் எண்ணம் போல் செய்து பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**சாருஜன் ஜூவல்ஸ் சிற்றி**

620, கே.கே.எஸ்.வீதி,
நாச்சிமார் கோயிலடி.
T.P.077 6027654

திருமணம், பூப்புனித நீராட்டுவிழா, பிறந்த நாள் விழா, புதுமனைப் புகுவிழா போன்ற அனைத்து வைபவங்களுக்கும் சிறந்தமுறையில் அழைப்பிதழ்களை அச்சிட்டுக் கொள்ளவும்

**யாகினி பிறிண்டேர்ஸ்**

620, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி.
CD றைற்றிங், ஸ்கானிங், ரைப் செற்றிங் முதலியனவும் டிஜிற்றல் முறையிலான அல்பங்களின் கவர் பேச் ஆகியவற்றையும் சிறந்த முறையில் செய்து கொள்ளலாம்.

**லயம் நுண்கலை பயிலகம்**

*மிருதங்கம் பயிலவிரும்பும் மாணவர்கள் இங்கு நடைபெறுகின்ற மிருதங்க வகுப்பில் இணைந்து மிருதங்கம் பயின்று கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு:
620, கே.கே.எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி.
T.P. 077 3068983

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# தென்னிலங்கைக்கு இன்று திடமான தலைமை தேவை

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் நோர்வேத் தூதுவரையும் கண்காணிப்புக்குழுவின் பதில் தலைவரையும் சந்தித்த பின்னர், செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்டபோது தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் வெளியிட்ட கருத்துக்களில் இரண்டு அம்சங்கள் முக்கியமானவை.

ஒன்று - ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள் கட்டுமானப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதில் உள்ள சிக்கல் நிலைக்கான காரணம் பற்றியது.

மற்றது -சீர்கெட்டுவரும் அரசியல் நிலைவரம் சம்பந்தமானது.

*"பொதுக்கட்டமைப்பு விடயத்தை இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேலும் மேலும் இழுத்தடித்து அதனைப் பெரும் சிக்கலுக்குள் சிக்கவைத்துள்ளார். இவ்விடயம் ஆபத்தான சூழ்நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது"* எனச் சுட்டிக்காட்டியிருக்கின்றார் தமிழ்சசெல்வன்.

*"ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண உதவிகள் அனைத்துத் தரப்பினருக்கும் பாதிப்பின்றி நீதியாக -நியாயமாக - கிடைப்பதை உறுதிப்படுத்தும் வகையில்தான் இந்தப் பொதுக்கட்டமைப்பில் எங்களது (புலிகளது) ஆலோசனைகளும் பரிந்துரைகளும் செய்யப்பட்டுள்ளன. ஆனால், ஜனாதிபதி இவற்றை எல்லாம் மூடிமறைத்து, இழுத்தடித்து, இதை மர்மப்பொருளாக்கிச் சர்ச்சைக்குரிய விவகாரமாக்கி, காலத்தை கரைத்துக் கொண்டிருக்கின்றார். இதனால், எல்லா மக்களும் குழம்பும் சூழல் இப்போது உருவாகிக்கொண்டிருக்கிறது"* -என்று குறிப்பிட்டு ஜனாதிபதியின் போக்குக் குறித்து விசனம் தெரிவிக்கின்றார் தமிழ்ச்செல்வன்.

நாம் இப்பத்தியில் ஏற்கனவே சுட்டிக்காட்டிய விடயம் இதுவென்றாலும், தமிழ்ச்செல்வனின் கருத்தாக இது வெளிவரும்போது அதன் ஆழமும் அர்த்தமும் அதிகமல்லாவா?

ஆழிப்பேரலை தாக்கி ஐந்தரை மாதங்களாகிவிட்டன. அது ஏற்பட்ட சூடு தணிய முன்னரே அரசு - புலிகள் ஆகிய இரு தரப்பினரதும் சமாதானச் செயலகங்கள் மூலம் காதும் காதும் வைத்தால் போல் பேச்சு நடத்தி, 'சட்டுப்புட்டென்று' இந்த விடயத்தை ஒப்பேற்றியிருந்தால் இவ்வளவு சிக்கல் நிலைமை ஏற்பட்டிருக்காது என்பதை ஏற்கனவே இதே பத்தியில் தெளிவுபடுத்தியிருந்தோம்.

ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்ககூட தமது அரசு பதவியேற்று இரண்டரை மாதங்களுக்குள் - இரண்டு தசாப்தகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் புரிந்துணர்வு உடன்பாட்டை இப்படித்தான் அதிரடியாக ஒப்பேற்றி முடித்தார். அதுதொடர்பான ஒப்பந்தத்தில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழர் தலைவர் பிரபாகரனும் ஒப்பமிட்டு முடித்த பின்னர்தான், அப்படி ஓர் ஒப்பந்தம் இறுதியாக்கப்பட்டதும் கைச்சாத்தானதும் இந்த நாட்டின் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியும் முப்படைகளின் பிரதம தளபதியுமான சந்திரிகா குமாரதுங்கவுக்கே தெரியவந்தது.

சரியோ, பிழையோ, அன்று அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செய்த அந்த உடன்பாட்டை இன்று வரை ஜனாதிபதி குமாரதுங்கவும் அவரது அணியினரும் கடுமையாக - மோசமாக -விமர்சித்தாலும் அந்த உடன்பாட்டு ஏற்பாடுகளையும், விடயங்களையும் அப்படியே பின்பற்ற வேண்டியவர்களாகவே இருக்கின்றார்கள் என்பதுதான் உண்மை. அன்று ரணில் செய்த உடன்பாடு ஆட்சி மாறி ஒருவருடம் தாண்டியும் நின்று, நிலைத்துத் தாக்குப் பிடிக்கிறது; ஆயிரக்கணக்கான உயிரழிவுகளையும், பல்லாயிரக்கணக்கான கோடி ரூபா மதிப்புடைய உடைமை நாசங்களையும் தவிர்த்திருக்கின்றது.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணத்துக்கான பொதுக் கட்டமைப்பு விடயத்தை ஜனாதிபதி சந்திரிகாவும், அவரது அணியினரும் இப்போது இழுத்தடிப்பது போல, அப்போது பிரதமர் ரணிலும் புரிந்துணர்வு ஒப்பந்த ஏற்பாடுகள் தொடர்பான விடயத்தை இழுத்தடித்து, பகிரங்க விவாதத்துக்கு விட்டிருப்பாரேயானால் அத்தகைய ஒப்பந்தமோ, யுத்த நிறுத்தமோ இன்றுவரை சாத்தியப்பட்டிருக்கவேமாட்டாது.

ரணில் அதிரடி அரசியல் முடிவுகளை எடுக்கத் திராணியற்றவர் என்பது போலவும், ஜனாதிபதி சந்திரிகா துணிச்சல்மிக்க அரசியல்வாதி என்பது போலவும் ஒரு பாவனை தென்னிலங்கை அரசியலில் பரப்பப்பட்டு, நன்கு ஊறி, வேரூன்றியுள்ளது.

ஆனால், இரண்டு தசாப்தகால யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை, அது தென்னிலங்கையில் பெரும் அரசியல் சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தபோதும் விரைந்து - தட்டுத்தடுமாற்றமின்றி - தற்றுணிவோடு - ஆகத் தம்மிடமிருந்த ஒரு சிறிய நாடாளுமன்றப் பெரும்பான்மையை மட்டும் வைத்துக்கொண்டு ரணில் செய்த விதமும் -

ஒன்றுமேயில்லாத - வெறும் சிபாரிசுப் பணியை மட்டும் மேற்கொள்ளும் - ஓர் ஏற்பாடே பொதுக்கட்டமைப்பு என்று தாமே திரும்பத்திரும்பக் கூறிக்கொண்டு, அதைக் கூடத் தமது நிறைவேற்று அதிகார ஜனாதிபதிப் பதவியையும், படைகள் மீதான முழுக் கட்டுப்பாட்டையும் தம்வசம் வைத்துக்கொண்டு செய்யமுடியாமல், இழுத்தடித்து சிக்கித் தவித்துத் தடுமாறும் ஜனாதிபதி சந்திரிகாவின் போக்கும் -

இந்த இரு தலைவர்களில் யார் வெளிவேஷ வாய்ச்சவடால் வீரர், யார் காரியம் சாதிக்கக்கூடிய தொலைநோக்கு உடையவர் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

ஒட்டுமொத்தத்தில், தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டுவது போல நிலைமை சீர்கெட்டு மோசமாகிக் கொண்டிருக்கின்றது. ஜனாதிபதியும், அவரது அரசும் நிலைமையைச் சீராக்க விரைந்து நடவடிக்கை எடுக்காமல், இழுத்தடிப்புப் போக்கைத் தொடர்ந்தால் மீளத் திருத்தமுடியாத மோசமான விளைவுகளை நாடு எதிர்கொள்வது தவிர்க்க முடியாததாகிவிடும்.

மொத்தத்தில் சுய அரசியல் லாபங்களைக் கருதாது நாட்டுக்காகத் திடமாக முடிவெடுத்துச், செயலாற்றக்கூடிய ஓர் அரசியல் தலைமை இன்று தென்னிலங்கைக்குத் தேவைப்படுகிறது.

# புற்றுநோய் மருத்துவமனையை பரீட்சார்த்தமாக இயக்க ஏற்பாடு

குருநகர்,ஜூன்9

தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவை அடுத்த வாரம் முதல் பரீட்சார்த்தமாக இயக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனையில் 'கோபால்ற்' சிகிச்சைக்கான இயந்திரத்தை நிறுவும் பணி கடந்த மூன்று தினங்களாகத் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த இயந்திரத்தால் கதிர் வீச்சு ஏற்படுவது குறித்துக் கண்காணிப்பதற்கு கொழும்பு அணுசக்தி அதிகார சபை உறுப்பினர்கள் வருகைதந்துள்ளார்கள். அணுசக்தி அதிகாரசபையின் அனுமதி கிடைத்ததும் தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனையை முழுதாக இயக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது இந்த மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவை அடுத்த வாரத்திலிருந்து பரீட்சார்த்த ரீதியில் இயக்க ஏற்பாடாகியுள்ளது. நோயாளர்களைப் பரிசோதிப்பதற்காக பேராசிரியர் சுந்தரலிங்கம் அமெரிக்காவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்து தங்கியுள்ளார் என்றார் அவர்.

(ஒ-51)



யாழ். தேசியக் கல்வியியல் கல்லூரியில் இலங்கை வங்கி நடத்திய நடமாடும் சேவையை வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கின்றார். கல்வியியல் கல்லூரிப் பீடாதிபதி தி.கமலநாதன், வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் அருமைநாயகம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

## இளம் கலைஞர்களுக்கு!

யாழ்ப்பாணம்,ஜூன்9

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத் துறையின் கலைவட்டம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 'முகிழ் - 2005' என்னும் சமகால இளம் கலைஞர்களின் காண்பியக் கலைக்காட்சியை நடத்தவுள்ளது.

இந்தக் கண்காட்சியில் பங்குபற்ற விரும்பும் 25-35 வயதுக்கு இடைப்பட்ட படைப்பாளிகள் தமது சுயவிவரக் கோவையுடன் தம்மால் அண்மைக் காலத்தில் உருவாக்கப்பட்ட காண்பியப் படைப்புகளின் (ஓவியம், சிற்பம், தாபனக் கலை) புகைப்படங்களையும் இணைத்து செயலாளர், கலைவட்டம், நுண்கலைத்துறை, யாழ். பல்கலைக் கழகம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் 30ஆம் திகதி என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-202)

# தனிச்சிங்களத்தில் சுற்றறிக்கை; நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்

அச்சுவேலி,ஜூன்9

திருத்தி அமைக்கப்பட்ட ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்புச் சுற்றறிக்கை தனிச்சிங்கள மொழியில் மட்டும் வெளிவந்திருப்பதால் வடக்கு - கிழக்கு பகுதியில் ஆசிரியர் பதவி உயர்வுகள் மற்றும் சம்பளத் திட்டங்களை மாற்றி அமைக்கும் வேலைகள் தாமதம் அடைந்துள்ளன என்று கூறப்படுகிறது.

திருத்தி அமைக்கப்பட்ட ஆசிரியர் சேவை பிரமாணக்குறிப்பு 19.05.2005 இல் தனிச்சிங்கள மொழியில் மட்டும் வெளியாகியுள்ளது. ஐந்து பக்கங்களைக் கொண்ட இந்தச் சுற்றறிக்கையைத் தமிழ் மொழியில் இதுவரை வெளியிடப்படவில்லை எனக் கூறப்படுகின்றது.

சிங்கள மொழியில் உள்ள சுற்றறிக்கையின் அடிப்படையில் தமிழ்ப் பிரதேசங்களில் கருமமாற்றுவதில் சிக்கல் இருப்பதாகவும் -

சுற்றறிக்கை வெளியாகி சுமார் ஒரு மாத காலமாகும் நிலையில் வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள கல்வி வலயங்களில சிங்களச் சுற்றறிக்கையின் அடிப்படையில செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் -

கூறப்படுகின்றது.

(ஒ-11)

# காலாவதியான உணவுப்பொருள் குறித்து பொதுமக்கள் தகவல்தர வேண்டுகோள்

குருநகர்,ஜூன்9

பாவனைத் திகதி முடிவடைந்த அல்லது பழுதடைந்த உணவுப் பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையங்கள் மற்றும் உணவகங்கள் குறித்து யாழ். மாவட்டத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களுக்குத் தகவல் தந்து உதவுமாறு யாழ்.பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் பொதுமக்களைக் கோரியுள்ளார்.

சுகாதாரப் பரிசோதகர்கள் நடத்தும் திடீர்ப் பரிசோதனைகளில் காலாவதியான உணவுப் பொருள்கள் விற்கப்படுவது சமீபகாலத்தில் அதிகளவில் கண்டுபிடித்துள்ளனர் என்றும் -

இதில் சம்பந்தப்பட்ட வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும்-

அவர் மேலும் தெரிவித்தார்.

இதேசமயம், காலாவதியான உணவுப் பொருள்கள் விற்பனையைத் தடுப்பதில் பொதுமக்கள் மேலும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

காலாவதியான உணவுப்பொருள்களை விற்பனைசெய்யும் கடைகுறித்து அந்தக் கடை அமைந்துள்ள பகுதிக்கான சுகாதார வைத்திய அதிகாரிக்குப் பொதுமக்கள் தகவல் தரவேண்டும் என்றும்-

இதன்மூலம் காலாவதியான உணவுப் பொருள் விற்பனையைக் கட்டுப்படுத்துவது இலகுவாகும் என்றும் - பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-51)

# வடிசாலை ஊழியர்களை பணிநீக்கம் செய்தமை தவறு!

## மனித உரிமைக்குழு தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்9

திக்கம் வடிசாலை ஊழியர்களைப் பணி நீக்கம் செய்வதை இயற்கை நீதிச் சட்டத்தின் கீழ் எந்தவிதத்திலும் ஏற்கமுடியாது.

- இவ்வாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் தெரிவித்துள்ளது.

மேற்படி ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு உடனடியாகத் தீர்வுகாணும்படியும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் வடமாகாண பனை அபிவிருத்திச் சபையின் சமாசத்தைக் கேட்டுள்ளது.

திக்கம் வடிசாலை ஊழியர்கள் கடந்த மாதம் 27 ஆம் திகதி தொடக்கம் அறிவிக்கப்பட்ட சம்பளவுயர்வைத் தமக்கு வழங்கக் கோரி வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். இப்போராட்டத்தையடுத்து இவர்களைப் பணி நீக்கம் செய்யும் பணிப்புரைக் கடிதம் ஊழியர்களின் முகவரிக்கு வடிசாலைப் பணிப்பாளர் சபையினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் முறையிட்டிருந்தனர்.

இதுதொடர்பான விசாரணைகளை நடத்திய மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகம் -

வர்த்தமானி அறிவித்தலின்படி திக்கம் வடிசாலை ஊழியர்களுக்குச் சம்பளத்தை வழங்கும்படியும் -

வேலைநீக்கக் கடிதத்தை ஊழியர்களிடமிருந்து மீளப் பெற்றுக்கொள்ளும்படியும் -

ஊழியர் நம்பிக்கை நிதியம் மற்றும் சேமலாப நிதியத்தை அவர்களுக்கு வழங்கும்படியும் வடிசாலைப் பணிப்பாளர் சபைக்கு சிபாரிசு செய்துள்ளது.

இதுதொடர்பாக வடமாகாண பனை அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தின் பொது முகாமையாளர் மற்றும் தலைவருக்குக் கடிதம் ஒன்றினை ஆணைக்குழு அனுப்பிவைத்துள்ளது.

(ஒ-7)

## மண்ணெண்ணெயின் விலை ரூ.33.55 ஆக உயர்வு

யாழ்ப்பாணம்,ஜூன்9

கடந்த 5 ஆம் திகதி முதல் எரிபொருள்களின் விலை அதிகரிப்பால் குடாநாட்டில் ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலை 31 ரூபா 55சதத்திலிருந்து 33 ரூபா 55 சதமாக அதிகரித்துள்ளது.

இந்த விலை உயர்வு 32 ரூபா 50 சதம் என்று முன்னர் தவறுதலாகத் தெரிவிக்கப்பட்டதாக பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ்மாவட்ட அலுவலகம் தெரிவித்துள்ளது.

(ஒ-202-17)

## நாளை

*வைகாசி 27*
*வெள்ளிக்கிழமை*
*10.06.2005*
*திதி : திருதியை*
*காலை 08.07 வரை*
*நட்சத்திரம் : புனர்பூசம்*
*பிற்பகல் 12.09 வரை*
*சதுர்த்தி விரதம்*
*சுபநேரம் : 05.52 - 07.22*
*ராகுகாலம்: 10.22 - 11.52*
*(யாவும் பழைய நேரப்படி)*

# கோப்பாய் ஆலயத்தில் இருந்து வெள்ளி அங்கிகள் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜூன்9

கோப்பாய் கண்ணகை அம்மன் ஆலயத்தில் இருந்து இரண்டு வெள்ளி அங்கிகள் திருடப்பட்டுள்ளன.

இவற்றை விற்பனை செய்வதையோ யாராவது வைத்திருப்பதையோ அறியும் பொதுமக்கள் உடனடியாக அது பற்றி கோப்பாய் பொலீஸாருக்கு அறியத்தருமாறு கோப்பாய் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஸ்ரீசெல்வம் கேட்டுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கோப்பாய் கண்ணகை அம்மன் ஆலயத்தின் கதவுகள் உடைக்கப்பட்டு அம்மன், பிள்ளையார் சிலைகளுடைய அங்கிகள் திருடப்பட்டுள்ளன.

இவை தலா 75 ஆயிரம் ரூபா பெறுமதியான வெள்ளி அங்கிகள் என்று மதிப்பிடப்பட்டுள்ளன.

(ஐ-202)

## உதயவாக்கு

நேற்று அசாத்தியமாய் இருந்தது. இன்று சாத்தியமாகும். அற்புதம் ஒவ்வொரு நாளும் இடம்பெறும்.

-மகாத்மா காந்தி.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல இன பசு விற்பனைக்குண்டு. கன்று ஈன்று 20நாள் (கன்னி நாகு). தொடர்பு: P.V. சூரியர் 'செல்வவேல்' கல்லூரி வீதி, கொக்குவில். (36316)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் 2ஆம் குறுக்குத் தெரு. 115ஆம் இலக்க வீடு விற்பனைக் குண்டு. இந்த வீடு பிரபல பாடசாலைகள், நீதி மன்றம், அரச திணைக்களங்களுக்கு அண்மை யில் அமைந்துள்ளது. வாங்க விரும்புவோர். இல. 38, சப்பல் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரி யில் தொடர்புகொள்ளவும். (36147)

கோண்டாவில் கிழக்கு, நாகபூசணி அம்மன் வீதியில் காளி கோவிலடிக்கு அருகில் 2 1/2 பரப்பு காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 0777 111389 (36301)

## காணி விற்பனைக்கு

எனக்கு மட்டும் சொந்தமான இல.69, கண்டி வீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியி லுள்ள சட்டத்தரணி காரியாலயம் மூன்று பக்க மதில், மலசலகூடம், கடை அத்திபாரம், வீடு கட்டக்கூடிய இடத்துடன் மூன்று (03) பரப்புக் காணி விற்பனைக்குண்டு. கூடிய விலைக்கு முன்னுரிமை. கடிதமூலம் மட்டும் தொடர்பு கொள்ளவும். விலையைக் கடிதத்தில் குறிப்பிட வும். ச.சிவரூபன் சட்டத்தரணி, இலங்கை வங்கி ஒழுங்கை, சுன்னாகம். (36341)

## திருமண சேவை

சீதனம் இல்லாமல் திருமணம் செய்யா திருப்பவர்கள், கொடுத்துச் செய்யக்கூடியவர்கள், வசதியில்லாது திருமணஞ் செய்யாதிருக்கும் பெண்களை மனம் விரும்பி ஏற்கும் ஆண்கள், எங்களிடம் வெளிநாட்டு ஜாதகங்கள் உள்ளன. புகைப்படம், ஜாதகத்துடன் நேரிலோ, தபால் மூலமோ தொடர்பு கொள்ளவும். ஸ்ரீ நாகபூசணி அம்மன் திருமணமாலை, இல.289 A, பட்டா ணிச்சூர், மன்னார் றோட், வவுனியா, T.P.:024 4588410, 0776 630207. (45057)

## கடை வாடகைக்கு

கண்டி வீதி, சாவகச்சேரியில் நவீன சந்தைக்கு அண்மையில் கடை வாடகைக்குண்டு. தொடர்பு: 077 3164505. (36236)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், வயது 29 + B.sc. Engineer (Civil) உயரம் 5'7" இலக்கினத் தில் செவ்வாய் உள்ள மகனுக்கு சிவந்த, அழ கிய தோற்றமுள்ள மணமகள் தேவை. பட்டதாரி கள் விரும்பப்படுவர். ஏனையோரும் விண் ணப்பிக்கலாம். தொடர்பு: முழுவிவரங்களு டன் T.P. 026 222 3040. (சி-43274)

# நீதியரசர்களின் சம்பளம் அதிகரிப்பு

பிரதம நீதியரசர்களின் வருடாந்த சம்பளம் 5 லட்சத்து 56 ஆயிரத்து 800 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. அதிகரிக்கப்பட்ட இந்தச் சம்பளம் 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் வழங்கப்படும். இதற்கான அங்கீகாரத்தை நாடாளுமன்றம் வழங்கியுள்ளது.

பிரதமரும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷவி னால் இந்த சம்பள உயர்வுக்கு வழிசெய்யும் திருத்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டிருந்தது.

பிரதமரின் சார்பில் நீதி, சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் டபிள்யூ. டி.ஜோன் செனவிரத்ன நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இதனைச் சமர்ப்பித்தார்.

உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைமை நீதியரசர் ஆகியோருக்கு 5 லட்சத்து ஆயிரத்து 600 ரூபாவும் -

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களுக்கு 4 லட்சத்து 87 ஆயிரத்து 500 ரூபாவும் வருடாந்தச் சம்பளமாக அகதிகரிக்கப்பட்டுள்ளது.

அதிகரிக்கப்பட்டுள்ள இந்தச் சம்பளம் 2004 ஆம் ஆண்டு டிசெம்பர் முதலாம் திகதி முதல் நிலுவையுடன் வழங்கப்படும்.

இவ்விடயம் தொடர்பாக நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது எதிர்க்கட்சியினரும் அதனை ஆதரித்தனர். இதனால் வாக்கெடுப்பின்றியே இந்தத் திருத்தச் சட்ட வரைவு ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது. (க-8)

# சமூக வலுவூட்டாளர் பணிநிலைகளுக்கான ஆளணி வேண்டுகை

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் சமூக வலுவூட்டாளர் பணிநிலைகளுக்கான ஆளணி கள் வடகிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலிருந்தும் தேவைப்படுகின்றனர்.

க.பொ.த. உயர்தரம் வரை கல்வி கற்று தொழில்வாய்ப புக்களின்றி உள்ளவர்களும், க.பொ.த. சாதாரண தரத் தில் தேர்ச்சிபெற்று சமூகமட்டத்தில் சேவையாற்றுவதற் கான அனுபவம் வாய்ந்தவர்களும் தகுந்த ஆவணங்களு டன் எதிர்வரும் 13.06.2005 அன்று முற்பகல் 10.00 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக நடுவப் பணியகத்திற்குச் சமுகம் தருமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

**சமூக ஆற்றுப்படுத்தல் பிரிவு,**
**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்,**
**நடுவப்பணியகம்,**
**கிளிநொச்சி.** (சி-43257)(38-14-12)

# சூழல் பாதுகாப்புக் கருத்தரங்கு

யாழ்.மாநகரசபை, அபிவிருத்தி நடவடிக்கைகளில் மக்களையும் பங்கேற்புச் செய்வதற்கான செயற்றிட்டங்களை மேற் கொண்டு வருகின்றது. இதன் அடிப்படையில் 'சுற்றாடல் பாதுகாப்பு அபிவிருத்தி திண்மக்கழிவு முகாமைத்துவம்' என்ற தலைப்பில் நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் இன்று பிற்பகல் 3மணியளவில் கருத்தரங்கு இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் துறைசார்ந்த உத்தி யோகத்தர்கள் கருத்துரை வழங்கவுள்ளனர். (ஒ-12)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

இலங்கையில் முதல் தடவையாக சித்த மருத்துவத்துறையில் PhD பட்டம் அளிக்கப் பெற்றமைக்காக யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளராகக் கடமையாற்றும் உள்நாட்டு மருத்துவ நிறுவன (கொழும்பு) பட்டதாரியும் MD (காமராஜர் பல்கலைக்கழகம்) பட்டதாரியுமான

**டாக்டர் பொன்னம்பலம் (பரமு) இராமநாதன்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
உத்தேச சுதுமலை வைத்தியர் பசுபதிப்பிள்ளை ஞாபகார்த்த நம்பிக்கை நிதியம்.
(சி-43268) (21-14-15)

# மரண அறிவித்தல்

## சிவசம்பு நடராஜா

(முன்னாள் றீகல் தியேட்டர் ஒப்பரேற்றர்)



சண்டிலிப்பாய் ஐயனார் கோயிலடியைப் பிறப பிடமாகவும் வட்டு. மேற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு நடராஜா அவர்கள் 05-06-2005 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசம்பு-தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான முத்துத்தம்பி - இலட்சுமிப் பிள்ளை தம்பதியினரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும் தயாபரன் (கனடா), அமரர் சிவபரன், திருபரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தை யும் இராஜேஸ்வரி (கனடா), விக்கினேஸ்வரதேவி (சங்கானை), ஜெயராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் தனபால சிங்கம், நவரத்தினம், குலமணி, நல்லம்மா, அமரர் குணரத்தினம் மற்றும் இராசரத்தினம், செல்வரத்தினம், கண்மணி ஆகியோரின் சகோதரரும் தாரணி, தயானி (கனடா), திருமதி தாட்ஷாயினி, நிரஞ்சன் (சங்கானை), துஷ்யந்தினி (கனடா), ஹரிஷாந, ஹரிபிரஷாந (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2005) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தேவாலய வீதி, சங்கானையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் சங்கானை கரைச்சி மயானத்தில் தகனஞ்செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

**தேவாலய வீதி,**
**சங்கானை.** (36294)(21-14-15)



மென்பந்து கிரிக்கெட்

# பிடாரி அம்பாள் வி.கழகம் வெற்றிபெற்று சம்பியனானது



பிடாரி அம்பாள் விளையாட்டுக்கழக அணித்தலைவர் இ.சயந்தன் வெற்றிக்கேடயத்தைப் பெறுவதைப் படத்தில் காணலாம்.

யாழ்ப்பாணம்,ஜூன்9

திருநெல்வேலி ராஜா விளையாட்டுக் கழகத்தினால் யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்ட ஆறு பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் பிடாரி அம்பாள் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.

லெவன் ஸ்ரார் அணியும் பிடாரி அம்பாள் விளையாட்டுக்கழக அணியும இந்த ஆட்டத்தில் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பிடாரி அம்பாள் விளையாட்டுக் கழக அணி லெவன் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியைத் துடுப்பெடுத்தாட பணித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய லெவன் ஸ்ரார் அணி, முதலாவது ஓவர் முடிவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 33 ஓட்டங்களை எடுத்தது.

34 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய பிடாரி அம்பாள் விளையாட்டுக் கழக அணி நான்காவது ஓவரில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்து வெற்றிக்கேடயத்தை சுவீகரித்துக் கொண்டது. (3-ரி)

# இமையாணன்,சாவல்கட்டு அணிகள் கரபந்தாட்டப் போட்டியில் வெற்றி

ஆனைக்கோட்டை,ஜூன்9

ஆனைக்கோட்டை, சாவல்கட்டு மகாத்மா விளையாட்டுக்கழகத்தினால் யாழ்.மாவட்டக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட கரபந்தாட்ச் சுற்றுப்போட்டியில் இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகமும் சாவல்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகமும் சம்பியனாகின.

இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டங்கள் மகாத்மா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன.

முதலில் நடைபெற்ற 6 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான இறுதியாட்டத்தில் இமையாணன் மத்தி வி.கவும் சாவல்கட்டு மகாத்மா வி.கவும் மோதின. இதில் இமையாணன் வி.க. 3-2, 3-1 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்றது.

அடுத்து நடந்த 4 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான இறுதியாட்டத்தில் சாவல்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழகமும், சங்கானை ஞானவைரவர் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் மகாத்மா 36-24 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்றது.

இதைத்தொடர்ந்து கழகத் தலைவர் ரி. ராஜ்குமார் தலைமையில் நடந்த பரிசளிப்பு விழாவில் ரி.விஜயகுமார், எஸ்.ஞானசேகரம் ஆகியோர் பரிசில்களை வழங்கினர். (3-18)

# விசுவமடுவில் முன்பள்ளிப் போட்டிகள்

விசுவமடு,ஜூன்9

விசுவமடு மத்திய முன்பள்ளிச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை விசுவமடு மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொதுச் சுடரை முல்லை மாவட்ட தமிழ் புனர்வாழ்வுக்கழக திட்டப் பணிப்பாளர் பாலசுப்பிரமணியம் ஏற்றினார். தேசியக் கொடியை விசுவமடுப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சோழநிலவன் ஏற்றினார்.

தொடர்ந்து சிறார்களின் விளையாட்டுக்களும் பரிசளிப்பும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில், ரீ.டோ நிறுவனத் திட்டப் பொறுப்பாளர்கள், இப்பிரதேச ஆசிரியர்கள், அயல் கிராம முன்பள்ளி ஆசிரியர்கள், பொதுமக்கள் எனபலரும் கலந்து கொண்டனர்.(3-402-204)

★ ★ ★

முரசுமோட்டை தென்னிந்திய திருச்சபைப் பாலர் பாடசாலை மெய்வன்மைப் போட்டி கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை நவஜீவன ஆண்கள் இல்ல பாதுகாவலர் ஏற்றினார். தேசியக் கொடியினை கிளிநொச்சி முருகானந்தா மகாவித்தியாலய முதல்வர் க.மருதநாயகம் ஏற்றினார். தொடர்ந்து சிறார்களின் விளையாட்டு நிகழ்வும் பரிசளிப்பும் நடைபெற்றன. (3-402-204)

# விளையாட்டு வீரர்கள் கௌரவிக்கப்பட்டனர்

கைதடி, ஜூன்9

தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட 2005 ஆம் ஆண்டுக்கான தடகளப் போட்டிகளிலே அதிகூடிய புள்ளிகளைப் பெற்றுப் பிரதேச சம்பியனாகிய மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டு வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு ஒன்று கடந்த வாரம் மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத் தலைவர் ச.கிருஷ்ணன் தலைமையில் நிலையக் கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

வாழ்த்துரைகளை மட்டுவில், கைதடி நுணாவில் கிராம அலுவலர்களான கி.துரைசிங்கம், வே.கந்தையா, க.வாமதேவன் மற்றும் ஓய்வு பெற்ற அதிபர் வே.அப்புத்துரை ஆகியோர் வழங்கினார்கள்.

போட்டிகளில் வெற்றிபெற்ற வளர்மதி விளையாட்டுக்கழக வீரர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். அத்துடன், குண்டெறிதல் போட்டியில் மாகாண மட்டத்தில் முதலிடத்தையும் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தையும் பெற்ற மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக வீரர் மா.பிரதீஸ்குமாரும் மரதன் ஓட்டப்போட்டியில் மாகாண மட்டத்தில் முதல் இடத்தைப் பெற்ற கைதடி வளர்மதி விளையாட்டுக்கழக வீரர் ஏ.ஜெயரூபனும் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.

தடகளப் போட்டிகளிலே ஆண்களுக்கான எல்லே, பெண்களுக்கான எல்லே, உதைபந்தாட்டம் உட்படப் பல போட்டிகளிலே மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம் முதலிடங்களைப் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இவ்வருடத்திற்கான தென்மராட்சிப் பிரதேச சிறந்த விளையாட்டு வீரனாக வளர்மதி விளையாட்டுக்கழக வீரன் எஸ். லோஜிதன் தெரிவு செய்யப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். (3-75)

# தடகளப்போட்டி

யாழ்ப்பாணம்,ஜூன்9

யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கம் 10, 12, 14 வயதுப்பிரிவினருக்கு இடையில் நடத்தும் தடகளப்போட்டி நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் சிறந்த பெறுபேறுகளினைப் பெறும் போட்டியாளர்கள் அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய கனிஷ்ட பிரிவுப் போட்டிகளில் பங்கேற்பர் என யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கச் செயலாளர் செ.ரமணன் தெரிவித்தார். (ஒ-190)

# விண்ணப்பம் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூன்9

எதிர்வரும் ஜூலை மாதம் 15, 16, 17 ஆகிய திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ள தேசிய கனிஷ்ட பிரிவினருக்கு இடையிலான தடகளப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் வீரர்கள் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் யாழ். பொது விளையாட்டு மைதானத்தில் யாழ். மாவட்ட மெய்வன்மைச் சங்கச் செயலாளரிடம் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ்.மாவட்ட மெய்வன்மைச் சங்கம் தெரிவித்துள்ளது. (ஒ-190)



தமிழர் புனர்வாழ்வுக் கழக அனுசரணையுடன் ஊரக வளர்ச்சிப்பணி நிர்வகிக்கும் சொக்கலிங்கம் சிறுவர் பூங்கா சிறார்களின் மெய்வன்மைப் போட்டி அண்மையில் நடைபெற்றது. பூங்கா சிறார்கள் இசையும் அசைவும் நிகழ்வில் பங்குகொள்வதைப் படத்தில் காணலாம்.

*(படம்: வெள்ளாங்குளம் செய்தியாளர்)*

# மாகாணப் போட்டிகளுக்கு தெரிவான வடமராட்சி வலய வீர, வீராங்கனைகள்

கரவெட்டி,ஜூன்9

யாழ். மாவட்டப் பாடசாலைகளிடையே நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இருந்து வடக்கு - கிழக்கு மாகாணப் போட்டிகளுக்கு தெரிவாகியுள்ளவர்களின் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

அவர்களின் விவரம் வருமாறு:-

### 11வயதுப் பிரிவு - ஆண்கள்

**75மீற்றர்** - கு.கஸ்ரின் (புலோலி கிழக்கு அ.த.க.பாடசாலை).

**100 மீற்றர்** - கு.கஸ்ரின் (புலோலிகிழக்கு அ.த.க.பாடசாலை).

**நீளம் பாய்தல்** எ.ஜெயப்பிரியன் (தொண்டைமானாறு ம.வித்தி).

### பெண்கள்

**உயரம் பாய்தல்** - எ.மேரிஜனனி (அல்வாய் வடக்கு றோ.க).

### 13வயதுப்பிரிவு - ஆண்கள்

**100மீற்றர்** - எஸ்.ஜெனகன் (ஹாட்லிக் கல்லூரி).

**200 மீற்றர்** - எ.அரிகரன் (நெல்லியடி ம.ம.வித்தி).

**உயரம்பாய்தல்** - இ.தர்சிகன் (உடுப்பிட்டி அ.மி.க)

**நீளம் பாய்தல்** - எ. அரிகரன் (நெல்லியடி ம.ம.வித்தி),

**400X100 அஞ்சல்** - நெல்லியடி ம.ம.வித்தி.

### பெண்கள்

**உயரம் பாய்தல்** - இ.சகானா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி),

**நீளம்பாய்தல்** - எம்.மாதுலாணி (வல்வை சிவகுரு வித்தி).

### 15வயதுப்பிரிவு ஆண்கள்

**200 மீற்றர்** - ரி.சகிலன் (ஞானசாரியார் கல்லூரி),

**400மீற்றர்** - ஜீ.கஜமுகுந்தன் (உடுப்பிட்டி அ.மி.க)

**ஈட்டியெறிதல்** - ஜெ.சிந்துஜன் (ஹாட்லிக் கல்லூரி),

**குண்டுபோடல்** - வி.கரிகரன் (ஹாட்லிக் கல்லூரி), ரி.மனோராஜ் (ஹாட்லிக்கல்லூரி).

**தட்டெறிதல்** - வி.கரிகரன் (ஹாட்லிக்கல்லூரி).

**நீளம் பாய்தல்** - எம்.கஜனராஜ் (விக்னேஸ்வரா கல்லூரி), ரி.சகிலன் (ஞானசாரியார் கல்லூரி).

### பெண்கள்

**100மீற்றர்** - எஸ்.பகீரதி (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**நீளம்பாய்தல்** - வை.தீமிகா (வட.இந்து மகளிர் கல்லூரி).

**குண்டெறிதல்** - ரி.தர்மினி (சிதம்பராக் கல்லூரி).

**தட்டெறிதல்** - சி.பகீரதி (வட.இந்து மகளிர் கல்லூரி).

**4X100 அஞ்சல்** - மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

**100மீற்றர் தடைதாண்டல்** - சி.ஜென்சி (வட. இந்து மகளிர் கல்லூரி).

**உயரம் பாய்தல்** - சி.சுகன்யா (சிதம்பராக் கல்லூரி).

### 17வயதுப்பிரிவு ஆண்கள்

**100மீற்றர்** - இ.நிருஷாந் (நெல்லியடி ம.ம. வித்தி).

**200 மீற்றர்** - இ.நிருஷாந் (நெல்லியடி ம.ம வித்தி).

**கோல்ஊன்றிப்பாய்தல்** - ரி.சுகந்தன் (தும்பளை சிவப்பிரகாச ம.வித்தி.).

**ஈட்டியெறிதல்** - கே.விஜிதன் (கொற்றாவத்தை அ.மி.த.க.), ரி.முகுந்தன் (ஹாட்லிக் கல்லூரி).

### பெண்கள்

**1,500 மீற்றர்** - இ.றொசானி (வட.இந்து மகளிர் கல்லூரி).

**தட்டெறிதல்** - இ.திரிசா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

### 19வயதுப்பிரிவு ஆண்கள்

**100மீற்றர்** - கே.முரளிதரன் (நெல்லியடி ம.ம.வித்தி.).

**200மீற்றர்** - கே.முரளிதரன் (நெல்லியடி ம.ம.வித்தி.)

**400மீற்றர்** - எஸ்.சிவசுகிர்தன் (நெல்லியடி ம.ம.வித்தி.)

**800மீற்றர்** - எஸ்.சிவசுகிர்தன் (நெல்லியடி ம.ம.வித்தி.).

**நீளம் பாய்தல்** - எ.சுமிந்தன் (ஹாட்லிக் கல்லூரி).

**முப்பாய்ச்சல்** - என்.கஜேந்திரன் (இமையாணன் அ.த.க.பாடசாலை).

**கோல் ஊன்றிப்பாய்தல்** - எம்.கிருஷாந் தேவரையாளி இந்துக்கல்லூரி).

**4X100 அஞ்சல்** - ஹாட்லிக் கல்லூரி.

### பெண்கள்

**400 மீற்றர்** - எஸ்.குமுதினி (வட.இந்து மகளிர் கல்லூரி).

**உயரம்பாய்தல்** - எஸ்.குமுதினி (வட. இந்து மகளிர் கல்லூரி).

**400 மீற்றர் தடைதாண்டல்** - இ.அகல்யா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

### 21வயதுப் பிரிவு ஆண்கள்

**100 மீற்றர்** - ஜி.குலராஜ் (நெல்லியடி ம.ம.வித்தி.).

**800 மீற்றர்** - ரி.ஜெயந்தன் (நெல்லியடி ம.ம.வித்தி.).

**1,500 மீற்றர்** - ரி.ஜெயந்தன் (நெல்லியடி ம.ம.வித்தி.).

**5,000 மீற்றர்** - இ.சிறிதரன் (வேலாயுதம் ம.ம.வித்தி.).

**110 மீற்றர் தடைதாண்டல்** - இ.விஷ்ணுகாந்தன் (நெல்லியடி ம.வித்தி), கே.கபிலன் (ஹாட்லிக் கல்லூரி).

**குண்டுபோடல்** - கே.சிவகணேசன் (ஹாட்லிக் கல்லூரி), ரி.கிருபாகரன் (ஹாட்லிக் கல்லூரி).

**தட்டெறிதல்** - ரி.கிருபாகரன் (ஹாட்லிக் கல்லூரி),

**ஈட்டியெறிதல்** - எஸ்.கௌரிசங்கர் (ஹாட்லிக் கல்லூரி),

**தடியூன்றிப்பாய்தல்** - வை.லலிதகுமார் (ஹாட்லிக் கல்லூரி).

**4X100 அஞ்சல்** (நெல்லியடி ம.ம.வித்தி.).

**4X400 அஞ்சல்** (நெல்லியடி ம.ம.வித்தி.).

### பெண்கள்

**100மீற்றர்** - எம்.மேரி அனுஷியா (மெதடிஸத பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**200 மீற்றர்** - எம்.மேரி அனுஷியா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

**100மீற்றர் தடைதாண்டல்** - எஸ்.சோபனா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

### கரபந்தாட்டம்

**17வயதுப்பிரிவு ஆண்கள்** - உடுப்பிட்டி அ.மி.க. **19வயதுப்பிரிவு ஆண்கள்** - உடப்பிட்டி அ.மி.க.

### மென்பந்து கிரிக்கெட்

**19வயதுப்பிரிவு** - உடுப்பிட்டி அ.மி.க, விக்னேஸ்வராக் கல்லூரி.

### வலைபந்தாட்டம்

**19வயதுப் பிரிவு** - மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை.

### உடற்பயிற்சிப் போட்டி

**19வயதுப் பிரிவு ஆண்கள்** - ஹாட்லிக் கல்லூரி. **19வயதுப் பிரிவு பெண்கள்** - வட இந்து மகளிர் கல்லூரி.

### சதுரங்கப் போட்டி

**15வயதுப்பிரிவு பெண்கள்** - நெல்லியடி ம.ம.வித்தி. **15வயதுப் பிரிவு ஆண்கள்** - ஹாட்லிக் கல்லூரி.

**19வயதுப்பிரிவு பெண்கள்** - மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை. (3-70-203)

யாழ்..நகரில் புதியதோர் உதயம்

மங்களகரமான

# புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் பார்த்திப வருஷம் வைகாசித் திங்கள் 26 ஆம் நாள் இன்று (09-06-2005) வியாழக்கிழமை காலை 6.00 மணிமுதல் 8.15 மணிக்குள் வரும் சுபமுகூர்த்தத்தில -

மகாசில்க்ஸ் ஸ்தாபனத்தின் கிளை நிறுவனமான

## கவுஸ் ஒவ் செலெக்ஷன்





என்னும் புடைவை விற்பனை ஸ்தாபனம் ஒன்றை யாழ்.பெரிய கடைவீதி, 75B, இலக்கக் கட்டடத்தில் ஆரம்பிக்கப்படுகின்றது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். ஆகவே, அத்தருணம் எமது அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், உறவினர்கள் அனைவரையும் வருகைதந்து திறப்பு விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

- உரிமையாளர்

**கவுஸ் ஒவ் செலெக்ஷன்,**

**இல.75B, பெரிய கடை வீதி, யாழ்ப்பாணம்.**

**சுபமுகூர்த்தப் பட்டுப் புடைவைகளுக்கும் மற்றும் சல்வார், சோலிக்கிற், ஸ்கேட் அன் பிளவ்ஸ், சூட்டிங் சேட், சிறுவர்களுக்கான ஆடைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய மகத்தான ஸ்தாபனம் இது.**

(C/43240)(50-15-34)

---

சிவாச்சார்ய திலகம்

இரத்தினசுவாமி குருக்கள்

டாக்டர் சோ.சுப்பிரமணியக் குருக்கள் ஆகியோரின் பாதார வந்தனத்துடன்

## பிரம்மோபதேச அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் வைகாசித் திங்கள் 26 ஆம் நாள் [09.06.2005] வியாழக்கிழமை கடகலக்கினமும் புனர்பூச நட்சத்திரமும் கூடிய பகல் 9.45 மணி முதல் 10.29 மணி வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

ஸ்ரீமாமாங்கப்பிள்ளையார் ஆலயகுரு சு.இரத்தினசாமி குருக்கள் பூரனானந்தக் குருக்கள் கெங்காதசரோஜினி தம்பதிகளின்

யாழ். சுன்னாகம் கந்தரோடை அருளானந்தப்பிள்ளையார் ஆலய பிரதமகுரு இ.சோமேஸ்வரக் குருக்கள் விமலாதேவி தம்பதிகளின்

**பௌத்திரனும்**

எமது புத்திரனுமாகிய

**செல்வன் பூரணசீதசுபமாநீசர்மாவிற்கு**

ஸ்ரீ சித்திர வேலாயுத பெருமானின் திருவருளோடும் குருவருளோடும் கூடி இருப்பதனால் யக்ஞோபவித தாரண பிரம்ம உபதேசம் நிகழ பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்களது குடும்ப சமேதரராய் வந்து ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

மஹாராஜ ஸ்ரீ. பூர்ண சந்திரானந்தக் குருக்கள் தம்பதிகள், பிரம்மஸ்ரீ. பூர்ண சுதாஹர குருக்கள் தம்பதிகள், பிரம்மஸ்ரீ. கோ.பாலசுப்பிரமணிய சர்மா தம்பதிகள், பிரம்மஸ்ரீ. கை.பாலசுப்பிரமணிய சர்மா தம்பதிகள், பிரம்மஸ்ரீ. ச.பாலசந்திரசர்மா தம்பதிகள், பிரம்மஸ்ரீ. சோ.வாகீஸ்வர குருக்கள் தம்பதிகள், பிரம்மஸ்ரீ. ப.ஜெயக்குமார குருக்கள் தம்பதிகள், பிரம்மஸ்ரீ. ப.சிவசங்கர குருக்கள் தம்பதிகள், பிரம்மஸ்ரீ. சோ.தேவசேனாபதி குருக்கள்.

ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி தேவஸ்தானம்,
கோப்பாய் வடக்கு, கோப்பாய். (36245) (39-16-13)

தேவஸ்தான பிரதமகுரு சிவாச்சார்ய இளஞ்சுடர்,
பூர்ண சீதுச்சந்திர குருக்கள், சரஸ்வதிதேவி தம்பதிகள்.

---

### புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
### புலோலி கிழக்கு, பருத்தித்துறை
### கேள்வி கோரல் - வெதுப்பகம் குத்தகைக்கு வழங்கல்

சங்கம் தனக்குச் சொந்தமான வெதுப்பகத்தைக் குத்தகைக்கு வழங்கத் தீர்மானித்துள்ளது. பெற்றுக்கொள்ள விரும்புவோர் சங்க நிபந்தனைகளுக்கு அமைவாகப் பெற்றுக்கொள்ளலாம். நிபந்தனைகளையும் மேலதிக விவரங்களையும் சங்கப் பிரதம காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

கேள்வி கோரல் முடிவு திகதி:- 18.06.2005

புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

பொது முகாமையாளர்,
புலோலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

(சி 43256) (39-13-16)

---

## 19ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 12 02 1925



விண்ணில் 10 06 1986

## அமரர் தம்பு கதிரவேலு

(ஓய்வுபெற்ற அதிபர்
கம்பர்மலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை)

அன்பின் பிறப்பிடமே
அறிவின் திருவுருவே - நீங்கள்
எங்களைப் பிரிந்து சென்று
பத்தொன்பது ஆண்டுகள் சென்றதையா!
எத்தனை ஆண்டுகள் ஓடிப்போனாலும்
அப்போதும் உங்கள் நினைவு
நீங்காது நிலைத்திருக்கும்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

திதி: திருதியை 09-06-2005

(36106) (54-19-17)

நிருவத்தம்பை, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

உங்கள் நினைவில் வாழும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

## இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு

## Muthayamal Educational Institutions

RASIPURAM - 637 408, NAMAKKAL - (DT) TAMILNADU. www.muthayammal.com



இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது **ANNA (Engineering) UNIVERSITY - PERIYA UNIVERSITY** ஆகியவற்றின் பட்டதாரி **(Degree Courses)** நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் **A/L** சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவியரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலாண்டுகள் | உட்பிரவேச தகைமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Information Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc.Biochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc.Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths,Chemistry,Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S. | 3 Years | Pass in All Subjects in any Discipline |

2005 A/L மாணவர்கள் pending results உடன் இணைய முடியும்

**O/L** மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் **Kaveri Polytechnical College**ல் சேர்ந்து 3 வருட **Diploma**வை பூர்த்திசெய்து, மேலும் 3 ஆண்டுகளில் **Engineer** ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் pending results முறையில் ஜூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியை தொடங்க வாய்ப்பு

**Call: 0777-767818 / (011)4512591**

For prospectus and application forms

**SCHOLARS INFORMATION CENTER**
2nd Floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06.

email : peter@scholars-info.com

---

## பாலங்கள் புனரமைப்பு

வரணி,ஜூன் 8

பருத்தித்துறை - கொடிகாமம் வீதி முளளிப் பிரதேசத்தில் அருகருகே உள்ள இரண்டு பாலங்கள் ஒரே சமயத்தில் திருத்தும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி அதி கார சபையின் பராமரிப்பில் இவ் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடந்த இருபது வருடங்களுக்கு முன்னர் யுத்த அனர்த்தங்களால இங்குள்ள ஒரு பாலம் சேதமடைந்திருந்தது. இருந்தும் அருகே ஒரு தற்காலிக பாலம் ஒன்று அமைக்கப்பட்டு வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (8-170)

## நூல் அறிமுகம்

குருநகர்,ஜூன் 8

புலம்பெயர்ந்து பிரானஸில் வாழும் கவிஞர் எமிலியானுஸ் ஜோய் வெளியிட்டுள்ள 'அந்தக் கரையில்' கவிதை நூல் கடந்த ஞாயிற்றுக் கிழமை குருநகர் மவுண்கார்மேல் மண்டபத்தில் குருநகர் சென். ஜேம்ஸ் கல்வி முன்னேற்றக் கழகத்தின் ஏற்பாட்டில் வெளியிடப்பட்டது.

'தெரிதல்' ஆசிரியர் அபேசுராசா தலைமையில் நடை பெறற இந்த விழாவில எஸ். ஏ.அழகராஜா, கு.இராயப்பு, வி.ஜே. கொன்ஸ்ரன்ரைன் ஆகியோர் மதிப்பீட்டு உரை களை நிகழ்த்தினர். (ஓ-51)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 02 02 1954



மறைவு 10 05 2005

## திருமதி வரப்பிரகாசம் மேரிகிறேஸ்
(கவுஸ்) (லில்லி)

சொந்த வசிப்பிடம்: பலாலி வடக்கு

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து
நாமெல்லாம் நல்வாழ்வு வாழ நாடி நின்ற
எம் தெய்வமே! ஆயிரம் உறவுகள்
இருந்தாலும் அம்மா என்று ஆசையுடன்
அழைத்து மகிழ உறவொன்று இல்லையே அம்மா

எங்கள் அம்மாவின் இறுதிநிகழ்வில் கலந்துகொண்டு பலவழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் மூலமும் நேரிலும் கலந்துகொண்டும் அஞ்சலி செலுத்திய பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றிகளைக் கண்ணீர் மல்கத் தெரிவித்துக்கொள்வதுடன்

இன்று (09.06.2005) வியாழக்கிழமை காலை சென்.தோமஸ் தேவாலயத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். இந்த அறிவித்தலை நாம் உங்களை நேரில் வந்து அழைத்ததாக நினைவுகூர்ந்து நிகழ்வுகளில் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தற்போதைய முகவரி:
ஹாட்லிக் கல்லூரிமுன்பாக, கல்லூரி வீதி, பருத்தித்துறை.

கணவர்: பா.வரப்பிரகாசமும் பிள்ளைகளும் (36289)(50)

# வடக்கு - கிழக்கு பட்டதாரி பயிலுநர்களுக்கு மூப்பு அடிப்படையில் நிரந்தர நியமனம்

## மாகாண பிரதம செயலரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூன்9

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் அனைத்து பட்டதாரி பயிலுநர்களுக்கும் மூப்பு அடிப்படையில் நிரந்தர நியமனம் வழங்கவேண்டும். நிரந்தர நியமனத்திற்காக வடக்கு - கிழக்கில் நடத்தப்பட்ட பரீட்சையை உடன் இரத்துச் செய்ய வேண்டும்.

இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண பட்டதாரி பயிற்சி ஒன்றியம் வடக்கு - கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ்.ரங்கராஜனுக்கு அவசரக் கடிதம் ஒன்றைக் கடந்த திங்கட்கிழமை அனுப்பிவைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள பட்டதாரி பயிலுநர்களை ஆள்சேர்ப்புச் செய்யு முகமாக மாகாண பொதுச்சேவை ஆணைக் குழு செயலாளரினால் கடந்த ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி நடத்தப்பட்ட பரீட்சையை உடன் ரத்துச் செய்யவேண்டும். 1999ஆம் ஆண்டு 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு பணிவழங்கும் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்ட பட்டதாரிகள் பயிற்சியின் பின்னர் நேர்முகப் பரீட்சை மூலம் நிரந்தர நியமனம் செய்யப்பட்டனர்.

ஆனால், 2004 இல் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்டவர்களை 'நுண்மதி' பரீட்சை என்று கூறி வித்தியாசமான ஒரு பரீட்சையை - அதாவது இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையை விட இலகுவில் கிரகிக்க் முடியாத - ஒரு பகுதியினருக்குச் சாதகமான பரீட்சையை நடத்தியுள்ளமை உடல் உளரீதியாகப் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் வடக்கு - கிழக்கு தவிர்ந்த எப்பாகத்திலும் இவ்வாறான 'நுண்மதி' பரீட்சை மாகாண சபைகளால் நடத்தப்படவில்லை. மாகாண பிரதம செயலாளர் என்ற வகையில் வடக்கு - கிழக்கு தமிழ் - முஸ்லிம் மக்கள் பாதிக்கப்படாத வகையில் அனைத்துப் பட்டதாரி பயிலுநர்களையும் மூப்பு அடிப்படையில் உள்வாங்க வேண்டும்.

தங்களால் நடத்தப்பட்ட பரீட்சையை இரத்துச் செய்து பட்டத்தின் தன்மை, பட்டப்பின் படிப்பு டிப்ளோமா மற்றும் பிறதகுதி விதிகளின் அடிப்படையில் நேர்முகப்பரீட்சை மூலம் சகலரையும் உள்வாங்க வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்தின் பிரதி, மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர், மாகாண பொதுநிர்வாக அமைச்சு செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ஓ-185-15)

## முட்கம்பியில் சிக்கி மாணவர் காயம்

தென்மராட்சி,ஜூன்9

இராணுவத்தினரின் முட்கம்பிவேலியில் சைகிள் சிக்கியதால் அதனைச் செலுத்திச் சென்ற பாடசாலை மாணவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு பெருங்குளம் சந்தியில் இடம்பெற்றது.

கல்வயலைச் சேர்ந்த பீசாரங்கன் (வயது-13) என்பவரே இதில் காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

(ஓ-117)

## பாடநூல்களின் இறுதித்தொகுதி குடாநாட்டை வந்தடைந்தது

வலிகாமம்தெற்கு,ஜூன்9

கடந்தவாரம் இலங்கைப்பாடநூல் திணைக்களத்தால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள இலவச பாடநூல்களுடன் இவ்வாண்டுக்கான பாடசாலை மாணவர்களுக்குரிய இலவச பாடநூல் விநியோகம் யாவும் முடிவடைந்துள்ளதாகப் பாடநூல் விநியோகம் தொடர்பாக பிரதி ஆணையாளர் ஜனாப் கச்சி முகம்மது அறிவித்துள்ளார்.

இரண்டாவது தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பமாகிவிட்ட பின்னும் புதிய கல்விச் சீதிருத்தத்துக்கான பாடநூல்கள் வடபகுதி மாணவர்களுக்கு போதியளவு விநியோகிக்கப்படவில்லை. இதனைச் சுட்டிக்காட்டி வலயக் கல்விப் பணிப்பாளர்கள் அறிவித்ததைத் தொடர்ந்து கடந்த வாரம் ஒரு தொகுதி பாடநூல்களைத் திணைக்களம் அனுப்பிவைத்திருந்தது.

மேற்படி பாடநூல்கள் விநியோகத்தின் மூலம மாணவர்களின் பாடநூல் தேவைகள் ஓரளவு பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் மட்டத்தில் திருப்தி தெரிவிக்கப்பட்டது.

உடுவில் கல்விக் கோட்டப்பாடசாலைகளுக்கான பாடநூல்கள் யாவும் கடந்த திங்கட்கிழமை மருதனார்மடம் கோட்டக் கல்வி அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. (ஓ-152)

## மிதிவெடி அகற்றும் பணியில் ஒன்பது மோப்ப நாய்கள்

யாழ்ப்பாணம்,ஜூன்9

குடாநாட்டில் மிதிவெடி அகற்றும் பணியில ஈடுபடுத்தவென ஆஸ்திரேலியாவிலிருந்து ஒன்பது மோப்பநாய்கள் கொண்டுவரப்பட்டுள்ளன. மிதிவெடிகளை அகற்றும்போது தவறுதலாக ஏற்படும் வெடிவிபத்துகளில் மிதிவெடி அகற்றும் ஊழியர்கள் காயமடைகின்றனர். இதனைத் தவிர்ப்பதற்காகவே மிதிவெடிகளை அடையாளங்காண மோப்பநாய்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுவதாக கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் கூறினர்.

இந்த நாய்கள் இராணுவத்தினரின் மிதிவெடி அகற்றும் பிரிவினரிடம் பயிற்சிக்காக ஒப்படைக்கப்பட்டன என்றும் -

அதன் பின்னர் அந்த நாய்கள் அரியாலை பகுதியில் மிதிவெடி அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-ரி)



சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு முதலுதவிச் சிகிச்சைப் பெட்டிகளைச் சர்வதேச கெயர் நிறுவனம் வழங்கி வருகிறது. பருத்தித்துறை முனைக்கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கென அதன் நிர்வாகிகளிடம் முதலுதவிச் சிகிச்சைப் பெட்டி ஒன்று கையளிக்கப்படுவதைப் படத்தில் காணலாம். *(படம்: வடமராட்சி செய்தியாளர்)*

## மீள்கட்டுமானம் தொடர்பாக கற்கோவளத்தில் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்9

கற்கோவளம், புனித நகர் பகுதிகளுக்கான சுனாமி அனர்த்தத்திற்குப் பின்னரான மீள கட்டுமானச் செயற்பாடுகள் குறித்த ஒருங்கமைப்புக் கூட்டம் சமீபத்தில் கற்கோவளம் பொது மண்டபத்தில் நடைபெற்றது.

சுனாமி அனர்த்தத்தின்பின் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் செயற்படுத்தப்படும் நிரந்தர வீட்டுத் திட்டத்திற்கு பயனாளிகளைத் தெரிவுசெய்யும்போது கிராம சேவையாளர் ஊடாகக் காணியை உரிமைப்படுத்தும் காணி உறுதி கேட்கப்படுவது தொடர்பாகவும் அதனால் மக்கள் அடையும் சிரமங்கள் தொடர்பாகவும் -

தற்காலிக வீடுகளில் வசிக்கும் மக்கள் எதிர நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் இதில் ஆராயப்பட்டன.

இக்கலந்துரையாடலில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர், மாதர் சங்கத்தினர் விளையாட்டுக் கழகத்தினர், கிராம முன்னேற்றச் சங்கத்தினர், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினர், கிராம சேவையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஓ-204)

## 'அருளானந்தம்' ஒலிநாடா வெளியீடு

வலி.தெற்கு,ஜூன்9

கந்தரோடை அருளானந்தப் பிள்ளையார் ஆலயத்தின் மீது பாடப்பெற்ற 'அருளானந்தம' ஒலிநாடா மற்றும் இறுவட்டு வெளியீடு அண்மையில் ஆலயமண்டபத்தில் நடைபெற்றது.

கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை அதிபர் க.செல்வக்குமாரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் இறுவட்டு ஒலிநாடாவினை ஓய்வுபெற்ற அதிபரும் மூத்த எழுத்தாளருமான சி.சிவசரவணபவன் (சிற்பி) வெளியிட்டார்.

பிரம்மஸ்ரீ ம.தாணுநாதக்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து ஓய்வுபெற்ற மாவட்ட நதிபதி விகடகவி மு.திருநாவுக்கரசு வலி.தெற்குப் பிரதேச செயலர் சி.திருவாகரன், ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் இசை ஆசிரியர் சி.சிவஞானராசா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கந்தரோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது லண்டனில் வசித்து வருபவருமான செல்லத்துரை மகேந்திராசா இந்த ஒலிநாடா, இறுவட்டை வெளியிட்டுள்ளார்.

(ஓ-152)

## கவனயீனத்தால் ஏற்பட்ட ஆபத்து

தென்மராட்சி,ஜூன்9

மிருசுவில் வடக்கில் பாடசாலை மாணவர் ஒருவர் கவனயீத்தால் குண்டுசியை விழுங்கினார்.

இதே இடத்தைச் சேர்ந்த ஏகாம்பரநாதன் நஷாந்தன் (வயது -12) என்ற மாணவரே குண்டுசியை விழுங்கியவராவார்.

இவர், சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைககப்பட்டார்.

பாடசாலைக் கண்காட்சிக்காக இவர் ஆக்கப்பொருள் தயாரித்த வேளையில் வாயில் வைத்திருந்த குண்டுசியைத் தவறுதலாக விழுங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஓ-117)

## வீட்டுக்குள் உறங்கிய குழந்தையின் தங்கச் சங்கிலி பட்டப்பகலில் திருட்டு

யாழ்ப்பாணம்,ஜூன்9

பட்டப்பகலில் வீட்டினுள் நுழைந்த திருடன் அங்கு உறங்கிக்கொண்டிருந்த ஒன்றரை வயதுக் குழந்தை அணிந்திருந்த தங்கச்சங்கிலியை அபகரித்துக்கொண்டு தலைமறைவானான்.

பருத்தித்துறை தம்பசிட்டி, கல்லூரி வீதிப் பகுதியில் சமீபத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் சுமார் ஒன்றரைப் பவுண் தங்கச் சங்கிலி திருட்டுப்போயுள்ளது.

குழந்தையை உறங்கவைத்துவிட்டு தாய் வீட்டின் பின்பகுதியில் வேலைகளைக் கவனித்துக்கொண்டிருந்தார் என்றும் -

அவ்வேளையிலேயே இந்தத் திருட்டுச் சமபவம் இடம்பெற்றதாகவும் - தொிவிக்கப்பட்டது. சங்கிலியிணைக்கப்பட்டிருந்த 'பென்ரன்' குழந்தைக்கருகில் இருந்து எடுக்கப்பட்டது.(ஓ-15)

## மழவை வீதியை புனரமைக்க கோரிக்கை

வலி.மேற்கு,ஜூன்9

சங்கானை, தொட்டிலடி மழவை வீதி குன்றும் குழியுமாக மோசமான நிலையில் காணப்படுகின்றது. கடந்த பல வருடங்களாக திருத்தப்படாமல் இருக்கும் இந்த வீதியை புனரமைக்க வேண்டுமென்று இப்பகுதி மக்கள் வேண்டுகோள்விடுத்துள்ளனர்.

பல்லசுட்டி, வடலியடைப்பு, பனிப்புலம் தொட்டிலடி ஆகிய இடங்களிலுள்ள மக்கள் இவ்வீதியினாலேயே சங்கானை அரசினர் வைத்திய சாலைக்குச் சென்றுவருகின்றனர்.

இவ்வீதியினால் மழைகாலங்களில் போக்குவரத்தை மேற்கொள்ள முடியாதுள்ளதாக இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஆகவே, மழை காலம் வருவதற்கு முன்னர் இந்த வீதியை திருத்தியமைத்தால்தான் நோயாளர்கள் மழைகாலத்தில் வைத்தியசாலைக்குச் சென்றுவரமுடியும் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

(ஓ-175)




## கூட்டுறவுச் சங்கக் களஞ்சியத்தில் பாவனைக்குதவாத கோதுமை மா

தென்மராட்சி,ஜூன்9

தென்மராட்சியில் செயற்படும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஒன்றின் களஞ்சியத்திலிருந்து பாவனைக்குதவாத கோதுமைமா கண்டுபிடிக்கப்பட்டது.

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினரும் விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவினர் இணைந்து சமீபத்தில் நடத்திய திடீர் பரிசோதனையின் போது பாவனைக்குதவாத 100 மூடைகள் கோதுமைமா சிக்கியது. இதன் பெறுமதி சுமார் ஒன்றரை லட்சம் ரூபாவாகும்.

அடுக்கிவைக்கப்பட்டிருந்த இந்த மூடைகளில் இருந்த மாவில் புழுக்கள் காணப்பட்டன என்றும் -

அடிப்பகுதியில் இருந்த மூடைகள் கறையான்களால் அரிக்கப்பட்டிருந்தன என்றும் -

இதனையடுத்து 100 மூடைகள் மாவையும் அழித்துவிடும்படி உத்தரவிடப்பட்டதாகவும்- சுகாதாரத் திணைக்கள அதிகாரி ஒருவர் தொிவித்தார். (ஓ)

## ஆக்கத்திறன் கண்காட்சி

சாவகச்சேரி,ஜூன்9

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் மாணவர்களின் ஆக்கத்திறன் கண்காட்சி அண்மையில் அதிபர் வ.கயிலேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இக்கல்விக் கண்காட்சியின் தொடக்க நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனை ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா கலந்து கொண்டு நாடாவை வெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். கண்காட்சியில் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபா அ.கயிலாயபிள்ளை கலந்துகொண்டார். (ஓ-31)

## கியூமெடிக்கா - இலங்கை
சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்

**வெற்றிடங்கள்:**
- பிள்ளைகள் இல்ல மேற்பார்வையாளர். (Matron) (அனுபவமுள்ளவர்) 50 வயதிற்கு மேல்
- உதவிக்கணக்காளர் (Accounts Assistant) (அனுபவமுள்ளவர்)

நிர்வாகி,
**கியூமெடிக்கா இலங்கை,**
பிள்ளைகள் இல்லம், மானிப்பாய்.
(36309)(26-14-15)



## திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★ விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்
போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090, 077-3086939, 0777-246117, 077-6018467 (43005)(26-14-15)

தொடர்பு: [illegible],
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22, சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.


## சைக்கிள் யாருடையது?

யாழ்ப்பாணம், ஜுன்9

ஓட்டுமடம், மானிப்பாய் வீதியில் கவனிப்பாரற்றுக் கிடந்த சைக்கிள் ஒன்று கண்டெடுக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ்பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன ப.நந்தகுமார் என்பவரே மேற்படி சைக்கிளைக் கண்டெடுத்து அரசியல் துறையினரிடம் ஒப்படைத்துள்ளார்.

இந்த மாணவனின் செயலுக்கு அரசியல் துறையினர் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துள்ளனர். மேற்படி சைக்கிளின் உரிமையாளர்கள் உரிய ஆதாரம் காட்டி சைக்கிளைப் பெற்றுக்கொள்ளுமாறு அரசியல்துறையினர் கேட்டுள்ளனர். (ஜ-202)


## கடை வாடகைக்கு

யாழ். காங்கேசன்துறை வீதியும் நாவலர் வீதியும் சந்திக்கும் இடத்திற்கு அருகாக உள்ள கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு: **விதுசா பிறிண்ட்,**
551, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
(36305)



## Dialog GSM டயலொக்

எந்நேரமும் உன்னுடன்...

100/=, 400/=, 1000/= விலைகளில் கையடக்கத் தொலைபேசி அட்டைகளையும் Sim இணைப்புகளையும், மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள -

சகல விதமான தொலைபேசி அட்டைகளையும் இணைப்புகளையும் (Connection) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவும் சகல தபால் அலுவலக சேவைகள் துரித தபால் சேவைகள் உள்நாட்டு வெளிநாட்டுப் பொதிகள் (Parcel) சேவைகள்

WESTERN UNION பணப் பரிமாற்றம்

உலகின் எப்பாகத்தில் இருந்தும் ஒரு சில நிமிடங்களில் பணத்தைப் பெற்றுக்கொள்ளவும். இன்னும் பல சேவைகளையும் ஒரு கூரையின் கீழ் பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**Sri Murugan**
**Tele Communication & Agenc Post Office,**
303, K.K.S. Road, Jaffna.
T.P.: 021 222 5392, Fax: 222 3214
(சி-43268) (24-14-15-26)


## கேள்வி அறிவித்தல்

### வலயக்கல்வி அலுவலகம் - வலிகாமம்

கிழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்வி வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரினால் 2005ஆம் ஆண்டு ஜுன் மாதம் 16 ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே முற்பகல் 10.30 மணிக்குத் திறக்கப்படும். அச்சமயம் விரும்பும் கேள்விதாரர் அல்லது அவரால் அங்கிகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கலாம்.

| தொ. இல. | பாடசாலையின் பெயரும் வேலை விவரமும் | மீளளிக்கப்படாத வைப்புப் பணம் | மீளளிக்கப்படும் வைப்புப் பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|---|
| 01 | யா/யூனியன் கல்லூரி வகுப்பறை திருத்த வேலை. | 250/- | 4550/- | எம் 9 |
| 02 | யா/சுழிபுரம் விக்ரோறியாக் கல். வகுப்பறை திருத்த வேலை. | 250/- | 2500/- | எம் 9 |
| 03 | யா/இணுவில் மத்திய கல். மாடிக்கட்டட மிகுதி வேலை. | 250/- | 3500/- | எம் 9 |
| 04 | யா/இராமநாதன் கல். கணனி அறை திருத்தியமைத்தல். | 250/- | 1500/- | எம் 9 |
| 05 | யா/பண்டத்தரிப்பு ஜசிந்தா றோ.க. த.க.பாட.விஞ்ஞான ஆய்வுகூடம், நூல் நிலையம், வகுப்பறைகள் அமைத்தல். | 250/- | 24185/- | எம் 7 |

01. (அ) மேற்படி முதல் நான்கு வேலைகளுக்கும் இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் 09 உம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவுசெய்துகொண்டவர்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றவர்களாவர். ஐந்தாம் இலக்க வேலைக்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தின் 07உம் அதற்கு மேற்பட்ட தரத்திற்கும் பதிவுசெய்துகொண்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கத் தகுதிபெற்றவர்களாவர்.

(ஆ) பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தங்களால் முதல் நான்கு வேலைகளையும் செய்துமுடிக்க முடியுமானால் தங்கள் பாடசாலைக்குரிய கேள்விப் பத்திரங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம். ஐந்தாம் இலக்க வேலைக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் விண்ணப்பிக்க முடியாது. பாடசாலை அபிவிருத்திச் சங்கத்திற்கு முதலாம் பந்தி (அ) இல் குறிப்பிட்ட சட்டதிட்டமும் மீளளிக்கக்கூடிய, மீளளிக்க முடியாத வைப்புப்பணமும் விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

02. கேள்விப்பத்திரங்களில் பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர்க்கப்பட்ட கேள்வித்தொகை பெறுமதி சேர்வரி (VAT) 15% சேர்வரி சேர்க்கப்படாத கேள்வித்தொகை என்பன தனித்தனியாகக் குறிப்பிடல் வேண்டும்.

03. மேற்படி வேலைக்கான கேள்விப் பணத்தை வலிகாமம் கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரின் வங்கிக் கணக்கில் வைப்புச் செய்து அல்லது இக்காரியாலயத்தில் நேரடியாகச் செலுத்தி 2005-06-09ஆம் திகதியிலிருந்து 2005-06-15ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை வலிகாமம் கல்வி அலுவலகப் பாடசாலை வேலைகள் கிளையில் பொறியியலாளரிடம் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்திசெய்து மூலப்பிரதியும் எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப்பத்திர இணைப்பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனத்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தக்காரரின் முத்திரை இடப்பட்டு மருதனார்மடத்திலுள்ள வலிகாமம் வலயக்கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் திகதி மு.ப.10 மணிக்கு முன்னர் இடப்படல் வேண்டும். மேற்குறிப்பிட்ட காலத்திற்குப் பிந்தய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

05. தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர் தெரிவுசெய்யப்படும் திகதியிலிருந்து 03 மாத காலத்திற்குள் அனைத்து வேலைகளையும் பூர்த்திசெய்து கையளிக்கவேண்டும். எதுவித காலதாமதங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. சரியாக நிரப்பப்படாத பிழைகள் கூடிய தெளிவற்ற கேளவிப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

06. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்வையிடுவதுடன் மேலதிக விவரங்களையும் பாடசாலை வேலைகள் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மருதனார்மடம்,
சுன்னாகம்.
06.06.2005 (சி-43264)(26-14-15)

**திரு.ப.விக்னேஸ்வரன்,**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் செயலாளர் திரு.எம்.கே.ஜீவகதாஸ் அவர்களின் அருமை மாமி

**திருமதி பசுபதிப்பிள்ளை பொன்னாச்சிப்பிள்ளை**

அவர்கள் மரணமடைந்ததையிட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்நத அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அறவழிப் போராட்டக் குழு,
கைதடி நுணாவில், சாவகச்சேரி.
(36315)(26-14-15)

தலைவர், இயக்குநர் சபை,
உறுப்பினர்கள்,
ஊழியர்கள்.

## கண்ணீர் அஞ்சலி

### கந்தசாமி அருளானந்தம்
(கிராம அலுவலர்)

எமது பிரதேச செயலகத்தில் கிராம அலுவலராகக் கடமையாற்றும் **கந்தசாமி அருளானந்தம்** அவர்களின் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை.

பிரதேச செயலரும்,
நலன்புரிச் சங்க உத்தியோகத்தர்களும்,
ஊழியர்களும். (36314)(46-14-15-26)

## ஓராண்டு நினைவலைகள்



தோற்றம்: 1927.04.03

மறைவு: 2004.05.21

திதி: 09.06.2005

எங்கள் தெய்வமே உங்கள்
எச்சங்கள் மண்ணில் வாழும் வரை
உங்களின் நினைவுகள் என்றும்
எம் நெஞ்சில் நிலைத்திருக்கும்.

அமரர்
### மருதர் நாகலிங்கம்
(கூட்டுறவுப் பரிசோதகர்)

பாரதி லேன்,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம்.

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.** (36293)(51-)

## முதலாம் வருட இதய அஞ்சலி



அமரர் **இரத்தினசாமி துரைராஜா**

அன்னை மடியில் 10-11-1926 — ஆண்டவன் அடியில் 21-06-2004

**ஆண்டுகள் ஒன்று சென்றாலும்**
**ஆறவில்லை எங்கள் துயர்**

நாளை (10-06-2005) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அ.மி.பாடசாலை ஒழுங்கை,
வல்வெட்டித்துறை.
(36298)(46-14-15-26)

**மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்.**



தமிழக ஓவியர் புகழேந்தியின் ஓவியக்கண்காட்சி நேற்று வடமராட்சியில் இடம்பெற்றது. அதன் ஆரம்பநிகழ்வில் மாவீரரின் திருவுருவப்படத்துக்கு அவரது தந்தை சுடரேற்றுவதையும், யாழ். மாவட்ட நிதர்சனப் பொறுப்பாளர் அப்பன் மங்களவிளக்கேற்றுவதையும், வடமராட்சி கல்விக்கழகப் பொறுப்பாளர் எஸ்.புஸ்பராஜ் கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதையும், கண்காட்சியைப் பார்வையிட்ட மாணவிகளில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம. (படங்கள்: கரவெட்டிச் செய்தியாளர்)



யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஓவியக்கண்காட்சியின் ஆரம்பத்தில் தமிழக ஓவியர் புகழேந்தி, யாழ். ஓவியர் இராசையா ஆகியோர் சுடரேற்றுவதையும் யாழ். பல்கலை துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் கண்காட்சியைத் திறந்துவைப்பதையும் கண்காட்சியைப் பார்வையிடுபவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: பிரபா)

# வலி.மேற்குப் பிரதேச சபையின் கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

வலி.மேற்கு,ஜூன்9

தேசிய கலை இலக்கியப் பெருவிழாவை முன்னிட்டு பிரதேச செயலக ரீதியாக பாடசாலைகள் மட்டத்திலும் திறந்த போட்டிகளாகவும் இலக்கியம் சம்பந்தமான பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன.

வலி.மேற்குப் பிரதேச செயலகத்தினரால் நடத்தப்பட்ட போட்டிகளின் முடிவுகள் பின்வருமாறு:-

**குறுநாடகம்** - க.நல்லதம்பி (அராலி)

**குழுநடனம்** - சங்கானை மாவடி அறநெறி பாடசாலை.

**கட்டுரை (சிரேஷ்ட பிரிவு)**

து.உதயகௌரி (விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம்), அ.யோகினி (வட்டு, மத்தியகல்லூரி), மரஞ்சனி (மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலை).

**கட்டுரை - கனிஷ்ட பிரிவு**

செ.சோபிகா (வட்டு.மத்திய கல்லூரி), உ.சுகிர்தா (விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்), செல்வி மோ.மைதிலி (வட்டு.மத்திய கல்லூரி).

**கவிதை (திறந்த போட்டி)** - து.உதயகௌரி (சுழிபுரம்), செ.பஞ்சநாதன்(சங்கானை), க.நல்லதம்பி (அராலி மேற்கு)

**நாட்டார் பாடல் சிரேஷ்ட பிரிவு** - ஏ.நிலானி (விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்), க.ஐஸ்வரியா (விக்ரோறியாக் கல்லூரி சுழிபுரம்).

**நாட்டார் பாடல் திறந்த போட்டி** -க.நல்லதம்பி (அராலி), செ.பஞ்சநாதன் (சங்கானை).

**சிறுகதைப் போட்டி** - து.உதயகௌரி (சுழிபுரம்), சி.அனோஜன் (சங்கானை), பு.தனுஜா (சங்கானை),

**சித்திரம் சிரேஷ்டபிரிவு**

செ.சதீஸ்குமார் (வட்டு. இந்துக் கல்லூரி), செல்வன் வ.சண்முகராசா (வட்டு.மத்திய கல்லூரி), செல்வன் கி.அரவிந்தன் (மூளாய் சைவப் பிரகாச வித்தியாசாலை)

**சித்திரம் கனிஷ்ட பிரிவு**

செல்வன் கே.நிருஜன் (வட்டு.இந்துக் கல்லூரி), ஜெ.ஹஜக் கிரிவன் (வட்டு.இந்துக் கல்லூரி), வி.கவிதன் (வட்டு.இந்துக் கல்லூரி).

**சித்திரம் (திறந்த போட்டி)**

ம.கணேசநாதன் (சங்கானை), த.நிரோஜினி (சங்கானை), கி.நிரஞ்சன் (சங்கானை). (ஒ-175)

## போட்டிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூன் 9

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச் சேவையின் வாகனச்சாரதி பதவிக்கு ஆட்சேர்ப்பு செயவதற்கான திறந்த போட்டிப் பரீட்சை எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ்.சென்மேரிஸ் வித்தியாலயத்திலும் வண்ணை நாவலர் வித்தியாலயத்திலும் இதற்கான பரீட்சை மண்ட பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (ஒ-7)

# தமிழக ஓவியரின் கண்காட்சி நேற்றையதினம் வடமராட்சியில்

கரவெட்டி, ஜூன்9

தமிழக ஓவியர் புகழேந்தியின் ஓவியக் கண்காட்சி நேற்று கரவெட்டி அரசடி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் நடைபெற்றது.

இதில் ஆரம்ப நிகழ்வாக மாவீரர் லெப்டினன் பூபாலின் உருவப்படத்திற்கு அவரது தந்தை வல்லிபுரம் வேலாயுதம் ஈகைச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார்.

அதைத் தொடர்ந்து மங்கள் விளக்கினை ஓவியர் புகழேந்தி, பாடசாலை அதிபர் ஐ.நடராசா, யாழ். நிதர்சனப் பொறுப்பாளர் அப்பன், வடமராட்சி முன்பள்ளி அதிகாரி துரை சத்தியசீலன் ஆகியோர் ஏற்றினர். வடமராட்சிக் கல்விக் கழகப் பொறுப்பாளர் எஸ்.புஸ்பராஜா நாடாவை வெட்டி கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து ஓவியக் கண்காட்சி ஆரம்பமானது. வடமராட்சி பாடசாலை மாணவாகள், ஆசிரியர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள், பொது மக்கள் கண்காட்சியைப் பார்வையிட்டனர். (ஒ-70)

# யாழ். வைத்தியசாலைக்கு சிற்றூழியர்கள் நியமனம்

யாழ்ப்பாணம்,ஜூன்9

யாழ். போதனா வைத்தியசாலையில் சிற்றூழியர்கள் நியமனம் மேற்கொள்ளப்படவுளளது. இதற்கான பணிப்புரையை சுகாதார அமைச்சு வைத்தியசாலை நிர்வாகத்திடம் வழங்கியுள்ளது.

வைத்தியசாலையில் தொடர்ந்து நிலவி வரும் சிற்றூழியர் பற்றாக்குறையினை நீக்குமாறு வைத்தியசாலை நிர்வாகம் சுகாதர அமைச்சிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது. இதனைத் தொடர்ந்து அமைச்சு 50 ஊழியர்களை நியமிப்பதற்கு இணக்கம் தெரிவித்திருந்தது.

அதன் பின்னர் அந்த ஊழியர்களை உள்வாங்குவது சுகாதார அமைச்சா? வைத்தியசாலை நிர்வாகமா? என்ற இழுபறிநிலை காணப்பட்டுவந்தது.

தற்போது இந்த இழுபறிநிலை நீக்கப்பட்டு 50 ஊழியர்களையும் சுகாதார அமைச்சே நியமிக்கவுள்ளது.

இதற்கான பணிப்பை அமைச்சு நிர்வாகத்திடம் வழங்கியுள்ளதுடன், எதிர்வரும் முதலாம் திகதிக்கு முன்னர் நியமிக்கப்படவுள்ள ஊழியர்களின் பெயர் விவரங்களை அறிவிப்பதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ-13)

## வாராந்த நிகழ்வு

தொல்புரம்,ஜூன் 9

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை, பண்பாட்டுப் பேரவை நடத்தும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய மாணவரின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ஒ-119)


இரண்டாம் வருட நினைவலைகள்



தோற்றம் 14-05-1941

மறைவு 02-06-2003

அமரர் தம்பு நாகராசா

திதி: திருதியை

ஆண்டுகள் இரண்டு ஆனபோதும் ஆறவில்லை எம்மனம்
நீண்டதோர் இடைவெளி வந்தும் நினைவுகள் மாறவில்லை
ஆத்மா சாந்தி அடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.

கைதடி. (36310)(50-14-17-42) - குடும்பத்தினர்.



13 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்ந்தது 24 11 1970



மறைந்தது 09 06 1992

லெப்டினன்ட் வேந்தன்/கில்மன்

(சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி)

வேலாயுதபிள்ளை வரதன்

(பளை மகாவித்தியாலய உயர்தர வகுப்பு மாணவன்)

(36330)(52-17-45)

மண்மீட்புப் போரினிலே
மரணித்த மறவனே!
தாய் மண்ணை மீட்க,
தமிழன் மானம் காக்க,
தமிழீழத்தாய் மடியில் – வித்தானாய்
வித்தான உன்மேலே
விருட்சங்கள் பல
வெற்றிகளும் பல...

"திருவதிகை", அளவெட்டி.

என்றும் உன் நினைவுகளுடன்: அப்பா, அம்மா, அக்கா, அத்தான், மருமக்கள்.

# நயினை உற்சவத்தையொட்டி விசேட படகுச்சேவை

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை கரம்பன் கண்ணகை அம்மன் இறங்குதுறையில் இருந்து நயினாதீவிற்கு விசேட படகுச் சேவைகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. தற்சமயம் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்கள் ஊர்காவற்றுறை கரம்பன் கண்ணகை அம்மன் இறங்குதுறையிலிருந்து காலை 9.30 மணிக்கு புறப்படும் படகு எழுவைதீவு, அனலைதீவு ஊடாக நயினாதீவு சென்றடைந்து, அங்கிருந்து மீண்டும் பிற்பகல் 2.30 மணிக்கு புறப்பட்டு அனலைதீவு, எழுவைதீவு ஊடாக ஊர்காவற்றுறையை வந்தடைகிறது. கரம்பன் கண்ணகை அம்மன் இறங்குதுறையூடாக நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயத்திற்கு செல்லும் பக்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் பட்சத்தில் ஊர்காவற்றுறையில் இருந்து நேரடியாக நயினாதீவிற்கு சென்று திரும்ப மேலும் படகுச் சேவைகளை நடத்த ஒ[illegible]குகள் செய்யப்பட்டுள்ளதுடன, விசேட தினங்களான சப்பரத் திருவிழா [illegible]த்திருவிழா, தீர்த்தத் திருவிழா போன்றவற்றின்போது பல படகுகளை [illegible]சவையில் ஈடுபடுத்தத் தயார்நிலையில் உள்ளதாக அனலைதீவு கிராம[illegible]வை அ[illegible]வடிவழகையன் தெரிவித்தார். இவற்றைவிட பக்தர்கள் புங்குடுதீவு கு[illegible]டுவான் இறங்குதுறையூடாகவும் தாமதமின்றி நயினாதீவிற்குச் சென்[illegible]வருவதற்கு விசேட படகுச் சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஒ-116)

## தேவை

தனியார் நிறுவனமொன்றிற்கு அலுவலகப் பணியாளர் தேவை. ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தேசிய அடையாள அட்டையின் தெளிவான நிழற் பிரதியுடன், தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம்: **2610,**

**C/o. உதயன், யாழ்ப்பாணம்.**

(8/43241) (42-114-45-26)

## நல்லூரில் தொடர்மாடி வீடுகள்

அதிசயம்;
ஆனால் உண்மை
வீடு ஒன்றின் விலை
ரூபா 28 லட்சம்
மட்டுமே!

தயா ஏஜென்சி
இல.3, நவீன சந்தை
(மேல்மாடி), யாழ்ப்பாணம்.
தொலைபேசி தொடர்பு இரவு 7.00 மணிக்குப் பின் மட்டுமே
T.P: 0777 - 283795

(36016)(54)

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ



## புதுமனைப் புகுவிழா அழைப்பு

*அன்புடையீர்!*

நிகழும் பார்த்திப வருஷம் வைகாசித் திங்கள் 27ஆம் நாள் (10-06-2005)
வெள்ளிக்கிழமை காலை 6.17 மணி முதல் 7.53 மணி வரையுள்ள (பழைய நேரம்)
மிதுன லக்கின சுபமுகூர்த்த வேளையில்,

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

**"குக இல்லம்"**

எனும் புதுமனையில் பிரவேசஞ்செய்ய எல்லாம் வல்ல இறைவன் அருள் கைகூடியுள்ளதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகைதந்து விழாவைச் சிறப்பித்து மனையை ஆசீர்வதித்தேகுமாறும் எம்மை மகிழ்வித்து வாழ்த்துக்கூறியருளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்.

☞ இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

142/33, பூநாறிமரத்தடி லேன்,
தாமரை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

**திரு.திருமதி பத்மநாதன்
இந்திரஜெயந்தி தம்பதியினரும்
பிள்ளைகளும்.** (36327)(26-14-45)

## முதலாவது பிறந்த தின வாழ்த்து




**இராமநாதபுரம், கிளிநொச்சியைச் சேர்ந்த
தவக்குமார் – விஜயா
தம்பதிகளின் புத்திரி
சுதர்மிதா (சுமி)**

இன்று (09.06.2005) வியாழக்கிழமை தனது முதலாவது பிறந்த தினத்தை அவரது இல்லத்தில் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றார். இவரை இவரது பெற்றோர், அக்கா மதுமிதா மற்றும் மாமன்மார், அத்தைமார், மச்சிமார், மச்சான்மார், அம்மம்மா, அப்பப்பா, சித்திமார், சித்தாமார், சுவிஸ் சின்னத்தை, உதயா ஆகியோர் பல்கலையும் கற்று பெருவாழ்வு வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

*தகவல் : அம்மம்மா பூரணம்.*

(C-43271) (53)

## சொற்பொழிவு

தொல்புரம்,ஜூன்9
யாழ்.கொழும்புத்துறை துரையப்பா வித்தியாசாலையில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிககு வித்தியாலய அதிபர் எம்.மகேந்திரம் தலைமையில் சமயச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

இதில் இளைப்பாறிய அரச ஊழியர் 'சிவஞானச் செல்வா' சி.சி.வரதராசா 'ஆலய வழிபாடும் சமய சமூகத் தொண்டுகளும்' என்ற தலைப்பில் சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.(ஒ-119)

## மரியாயின்சேனை ஆண்டு விழாப் போட்டி

யாழ்.மறைமாவட்ட மரியாயின் சேனையின் 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.கொமிற்சியம் கட்டுரை, கவிதைப் போட்டிகளை நடத்தவுள்ளது. கட்டுரைப் போட்டி 'சேனை பங்கின செல்வம்', 'சேனை வழி அன்பின் வழி', 'தேவதாயின் தலைமையில் இறைவழி' ஆகிய தலைப்புகளிலும், கவிதைப்போட்டி 'சேனை வீராங்கனை எடல குயின்', 'அன்னையின் அடிச்சுவட்டில்' ஆகிய தலைப்புகளிலும் நடைபெறும். இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் தமது ஆக்கங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் கொமிற்சியம் மரியாயின் சேனை, ஆயர் இல்லம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு ஆன்ம இயக்குநர் றெஜி ராஜேஸ்வரன் அடிகளார் கேட்டுள்ளார்.
(ஒ-204)

உ

ஓம் கணபதி துணை



## அரியாலை நீர்நொச்சித்தாழ்வு ஸ்ரீசித்தி விநாயகர் தேவஸ்தான கும்பாபிஷேக தின சங்காபிஷேகமும் (1008)

## மணவாளக் கோலத் திருவிழாவும்

மேற்படி உற்சவம் நிகழும் பார்த்திப் வருடம்
வைகாசித் திங்கள் 26ஆம் நாள்
இன்று (09-06-2005) வியாழக்கிழமை
காலை 9.30 மணிக்கு விசேட கிரியைகளுடன்
ஆரம்பமாகிக் காலை 10.30 மணிக்குச்
சங்காபிஷேகம் நடைபெறும்.
மாலை 6.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று,
பஞ்சமுக விநாயகர் பூந்தொட்டியில் வீதிவலம் வருவார்.
*விநாயக அடியார்கள் அனைவரும் வருகைதந்து
எம்பெருமானின் திருவருள் பெற்று உய்வீர்களாக.*

(36307)(26-14-45) **உபயகாரர்.**

# University of Jaffna

## INVITATION OF BIDS FOR PROVIDING CONSULTANCY SERVICES

1. Sealed bids are invited from qualified consultants/ consultancy firms for the consultancy service for the "Establishing of Cold Room at the Department of Biochemistry, University of Jaffna"
2. Forms for bidding can be purchased from Deputy Registrar/Administration, University of Jaffna until 22.06.2005 upon producing receipt for the payment of following fees in cash at the Shroff's counter University of Jaffna

Non - Refundable Rs 500/-
Refundable Rs.5000/-

3. Bids to be sent to reach Chairman Tender Board, University of Jaffna or deposited in the Tender Box kept at Registrar's Office, University of Jaffna not later than 3.00 p.m.on 27.06.2005
4. Further patriculars can be obtained from Deputy Registrar/Administration Tel. 021 222 6517 during office hours if necessary.

P.O.Box 57,
Thirunelvely,
Jaffna. 2005-06-07. (C/43270)

Registrar,
**University of Jaffna**

# மாவட்ட நீதிமன்றம், சாவகச்சேரி

## விவாகரத்து பின் முற்றாக்கும் கட்டளை

*பழனி நாகச்சந்திரா,*
வேரற்கேணி கந்தசாமி கோவிலடி,
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

- வழக்காளி

வழ.இல:- 381/ மணநீக்கம் எதிராக,

*பழனி நாகச்சந்திரா பெண் வசந்தகுமாரி*
மே/பா சி.விஜயகுமாரி, அக்கராயன்
அபிவிருத்தி நிறுவகம், ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.

- எதிராளி

இவ்வழக்கு 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி மாவட்ட நீதிபதி திரு.பா.சுப்பிரமணியம் முகதாவில் விளக்கத்திற்கு எடுக்கப்பட்டபோது வழக்காளி சார்பில் சட்டத்தரணி செ.பாலகிருஷ்ணன் அவர்கள் சமுகமாய் இருக்க, எதிராளி சமுகமளிக்கவில்லை. ஆனால், அழைப்பாணை உதயன் பத்திரிகையில் 06.02.2005ஆம் தினம் பிரசுரிக்கப்பட்ட போதும் எதிராளி மன்றில் சமுகம் கொடுக்காதபடியால் வழக்காளியால் மன்றில் 2005.02.25 அளிக்கப்பட்ட சாட்சியத்தையும் பிராதினையும் பிராதுடன் அணைக்கப்பட்ட 6394 ஆம் இலக்கம் கொண்ட திருமண அத்தாட்சிப் பத்திரத்தையும் நன்கு பரிசீலனை செய்து, எதிராளி வழக்காளியை வளம் உறுவுறுப்புச் செய்துள்ளார் எனக் கண்டு வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையேயான 2004ஆம் ஆண்டு மாசிமாதம் 05ஆம் திகதி நடைபெற்ற திருமணத்தை இத்தால் இரத்துச் செய்து தீர்ப்பு அளிக்கப்பட்டது. இதற்கு அமைய பின்னுறுதித்தீர்வை பதியப்படுகின்றது. ஒருமுக விளக்கத்தின்போது எதிராளி மன்றில் சமுகமாயிராதபடியால் பின்னுறுதித் தீர்வையின் பிரதியை எதிராளிக்குச் சேவிக்கும்படியும் தீர்வை பதியப்படுகின்றது.

25.02.2005 வரை
ஒப்பம்
வழக்காளியின் சட்டத்தரணி. (36175) (42-14-45-26)

ஒப்பம்
**மாவட்ட நீதிபதி.**

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
22 - 05 - 1945



மறைவு
22 - 05 - 2004

**அமரர் கதிரித்தம்பி சீவரத்தினம்**

திதி: 09-06-2005

ஆண்டு ஒன்று சென்றாலும்
ஆறாது நம் துயரம்
*உங்கள் ஆத்மசாந்திக்காக
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

சம்பந்தர் கடையடி,
கரவெட்டி. (36335)(26-14-45)

**மனைவி,
பிள்ளைகள்.**

# REQUEST FOR PROPOSAL

**Hiring of Off - road-Vehicles**

**Closing Date: 14th of June 2005**

The Sub-Delegation of the International Committee of the Red Cross (ICRC) in Kilinochchi is searching for companies and individuals willing to rent off-road vehicles for use in its assistance programmes.

Type of vehicles requested

a) Station wagon (e.g. Toyota Landcruiser Hard Top)
b) Pickup
c) Minibus (e.g. Toyota Hiace)

**Rental period**

**01st of July 2005 - open ended (several months)**

Rental conditions

all Inclusive (driver, fuel, oil, maintenance costs, insurance) possibility to affix Red Cross emblem on the vehicle availability of replacement vehicle in case of breakdown owner's liability in the event of theft of goods, accident or damage

Rental of the vehicle on an unlimited mileage basis;
Wages of the driver (if the vehicle is to be rented with a driver)
Type of Insurance for the vehicle and payment of insurance premiums;
Responsibility for maintenance costs and in all cases, oil and fuel;
Interested parties are invited to submit their bids in a sealed envelope until 14th of June 2005 to the following address;

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**
**Subdelegation Kilinochchi,**
**Iranaimadhu Junction,**
**Kilinochchi.**
(C/43280)(26) Phone: 071237 56 97 / 071 229 66 80

# கரும்புலிகள் நினைவுத்தூபிக்கு குமாரபுரத்தில் அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம்,ஜுன்9

பரநதன குமாரபுரம் கிராமத்தில் அமைக்கப் படவுள்ள கரும்புலிகள் நினைவுத் தூபிக்கு அடிக்கல் நடும் நிகழ்வு சமீபத்தில் இடம்பெற்றது.

பரந்தன் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் ப.நாகேந்திரம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரை மாவீரர் ரெஜினோல்டின் தந்தை பெ.இராமசாமி மற்றும் ந.மகேந்திரன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அதனைத் தொடர்ந்து கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்களப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.ம.பத்மநாதன், விளையாட்டு உத்தியோகத்தர் ப.ஆனந்தராஜா, மருந்தக உரிமையாளர் கண்ணன் ஆகியோர் இணைந்து கரும்புலிகளின் நினைவுத் தூபிக்கு அடிக்கல் நட்டனர். இந்த நிகழ்வில் ஏராளமானவர்கள் கலந்துகொண்டனர்.

(ஓ)

## அரசியல் நிலைமையை விளக்கக் குழு அமைப்பு

ஜெயபுரம்,ஜுன்9

முழங்காவில் பிரதேசத்தில் இன்றைய அரசியல் நிலைமையைப் பொதுமக்களுக்கு விளக்கும் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காகக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் தலைவராக இரணைமடு மாதா நகர் பாடசாலை அதிபர் அ.கி.ஜெயசீலனும் உபதலைவராக பூநகரி வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் பொ.தங்கராசாவும் செயலாளராக குமுழமுனை தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் இ.நவரத்தினமும் தெரிவு செய்யப்பட்டனர்.

பல்வேறு தரப்புகளிலிருந்தும் 13 உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

(ஓ-29-202)

## வேளாண் நிறுவன கிளை திறப்பு

கிளிநொச்சி,ஜுன்9

மன்னார் கருங்கண்டல் பகுதியில் வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனத்தின் கிளை ஒன்று திறந்துவைக்கப்பட்டுள்ளது.

இதன் திறப்பு விழா கடந்த 5 ஆம் திகதி மன்னார் மாவட்ட விதைநெல் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் பூராசா தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் தமிழீழத் தேசியக்கொடியை நிறுவனத்தின் மன்னார் மாவட்டப் பொறுப்பாளர் செழியன் ஏற்றிவைத்தார். கட்டடத்தை மன்னார் பிரதேச செயலர் திருமதி ஸ்ரானி டிமெல் திறந்துவைத்தார். (ஓ-202)

# சாயி சிந்தனை

## புனிதமான எண்ணங்கள்



மனித குல முன்னேற்றத்துக்கு மனவளர்ச்சியும், இதயத் தூய்மையும் அவசியம். மனிதனின் நடத்தை அவன் மனதைப் பொறுத்தே அமையும். மனம், எண்ணங்களைச் சார்ந்து இருக்கிறது. ஆகையால் எண்ணங்கள் தான் மனிதனுடைய நடத்தைக்குக் காரணமாக அமைகின்றன. எண்ணங்கள் நிறைவெய்துவதே மனித வாழ்க்கையாகப் பரிமளிக்கிறது. எண்ணங்கள் புனிதமாக இருந்தால் மனமும் புனிதமானதாக இருக்கிறது. மனம் புனிதமாகும்போது, நடத்தையும் பவித்திரமாக இருக்கும்.

ஆகையால், தூய்மைக்கும், தூய்மையற்றதற்கும் காரணம் எண்ணங்களே! மனதின் எண்ணங்கள் புலன்களை ஆட்டிப்படைக்கின்றன. ஆகையால் எண்ணங்களினால் ஏற்படும் விளைவுகளைப் புரிந்துகொள்வது மனிதனுக்கு மிக மிக அவசியம். மனிதனுக்கு ஓடுவது கடினம். ஓரிடத்தில் நிலைபெற்று இருப்பது சுலபமானது. ஆனால், மனதிற்கோ நிலையாக நிற்பது கஷ்டம். அங்குமிங்கும் ஓடுவது சுலபமான காரியம். மனதிற்கும், மனிதனுக்கும் இடையே உள்ள வித்தியாசம் இதுவே!

ஆதாரம்: சனாதன சாரதி.

# Vacancy - Immediate
## Drivers

The International Committee of the Red Cross, Kilinochchi Subdelegation, is seeking for highly competent, experienced **field Drivers,**

The candidate should have the following **qualifications:**

- Minimum of 3 years of driving experience, whereof three years with 4 Wheel-drive
- Excellent driving skills with a valid Sri Lankan driving licence (class A)
- Working experience with an NGO or an international organization
- Ability to hold basic conversations in English
- Mechanical knowledge will be an asset.

**Core responsibilities** include:

- Safe operation of a 4-wheel drive vehicle in all circumstances
- Carry-out small-scale maintenance works
- Accompanies expatriates during field trips
- Acts as a translator to expatriates whilst working in the field; interpret between the delegate and interlocutors.
- Ensures security of goods and persons transported in the vehicle at all times

**Employment Conditions.**

According to ICRC's National Scale and employment conditions

Suitable candidates are invited to submit their complete CVs (incl. photo copy of valid driving licence) to ICRC's office in Kilinochchi until **Wednesday, 15th of June 2005.** Qualified candidates will be contacted for interviews,

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**
Subdelegation Kilinochchi,
Iranaimadhu Junction,
Kilinochchi.
(C/43279)(26) Phone: 071 237 56 97 / 071 229 66 80

# REQUEST FOR PROPOSAL

**Wall-Construction works at Palai Hospital**

**Closing Date. 14th June 2005**

The Sub-Delegation of the International Committee of the Red Cross (ICRC) in Kilinochchi is searching for construction companies, willing to contract for perimeter wall construction at Palai Hospital.

**Bill of Quantities**

| | |
|---|---|
| Purpose of Wall: | Perimeter wall for Palai Hospital. |
| Quality of walls: | Full-height concrete-block work |
| Foundation Dimensions: | Length: 1655 ft / height: 2 ft / width: 1 ft |
| Wall Dimensions: | Length: 1655 ft / height: 4.5 ft |
| Reinforcement | Reinforced Concrete Posts will be constructed at intervals of 10 feet |

**Structure & Detail of the Proposal**

- Project start & end dates (plus duration)
- The proposal has to mention indication of guarantees
- All price indication are to denominated in local currency (LKR)
- Payment schedule (prepayments etc.)

Interested Companies and individuals are invited to submit their bids in a sealed envelope until **14th of June 2005** to the following address:

**INTERNATIONAL COMMITTEE OF THE RED CROSS**
Subdelegation Kilinochchi,
Logistics Department,
Iranaimadhu Junction,
Kilinochchi.
Phone: 071 237 56 97 / 071229 66 80
(C/43278)(26)

# உதவும் நாடுகளின் தலைமைகள் ஞாயிறு அமெரிக்காவில் கூடுகின்றன

## இலங்கை நிலைமை குறித்து விரிவாக ஆராயப்படுமாம்

வாஷிங்ரன், ஜூன்9

இலங்கைக்கு உதவி வழங்குவது தொடர்பில் விரிவாக ஆராய்வதற்கும், பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் ஆராய்ந்து பிரதி பபை வெளிப்படுத்துவதற்குமாக டோககி இணை யத் தலைமை நாடுகளின் முக்கிய ன கூட்டமொன்று அமெரிக்காவில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வாஷிங்ரனில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடர் ஹெல்கிஸன், ஜப்பானிய அரசின் விசேட சமாதான பிரதிநிதி யசூசி அகாஷி, வெளிநாட்டு உதவி வழங்குவதற்கான அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலாளர் நிக்பேர்ன்ஸ் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின விசேட பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

முக்கியமான இந்தக் கூட்டம் தொடர்பில் நோர்வே அனுசரணையாளர்கள் நேற்று இலங்கை அரசுக்கு அறிவித்துள்ளனர். (க-3)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

| | | | |
|---|---|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 685 | டிக்கட்டின் நிறம் - நீலம் | |
| திகதி | 07-6-2005 | செல்லுபடியாகும் தொடர் இல. | 4521437-453665 |

லக்கினம் மிதுனம்

வெற்றி இலக்கங்கள்

18 24 30 38

ஜக்பொட் பரிசு ரூபா.10,00,000/- வெல்லப்பட்டுள்ளது

இந்த வெள்ளிக்கிழமை ரூபா. 10,00,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1.இல | 3,35,580 | 10/- | 33,55,800/- |
| 2.இலக்கங்கள் | 30,731 | 20/- | 6,14,620/- |
| 1.இல லக்கினம் | 30,536 | 30/- | 9,16,080/- |
| 2.இல லக்கினம் | 2,842 | 100/- | 2,84,200/- |
| 3.இலக்கங்கள் | 824 | 500/- | 4,12,000/- |
| 3.இல லக்கினம் | 64 | 5,000/- | 3,20,000/- |
| 4.இலக்கங்கள் | 03 | 1,00,000/- | 3,00,000/- |
| 4.இலக்கங்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| மொத்தம் | 4,00,586 | - | 82,54,950/- |

மொத்த பரிசுத் தொகை ரூபா. 82,54,950/- தொடர் இல. 5475468 க்கு மேற்பட்ட நீலம் நிற டிக்கட்டுக்கள் 2005 மே 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33 சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

4527248-0-68

4529256-3-61

4531458-5-68

4527272-7-85

4533008-8-66


## கண்ணீர் அஞ்சலி

யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய இசை ஆசிரியை

திருமதி நா.சுகிர்தலிங்கம்

அவர்களின் அன்புத் தாயார்

திருமதி பாலசுப்பிரமணியம் நாகம்மா

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இசை ஆசிரியர் கழகம்
யாழ்.வலயம்

(36340)(21-15-17)

## G.G.Ponnambalam Q.C. Higher Education Scholarships

The G.G.Ponnambalam Q.C.Foundation is inviting applications for Higher Education Scholarships from students who have gained admission to Faculty of Medicine, University of Jaffna who commenced their studies on 17th January 2005. (28 th batch).

Two scholarships will be awarded this year and the amount of each award will be Rs.75,000 per year for the duration of the course. Continued funding will be contingent upon the recipient remaining in good academic standing at the beginning of each academic year.

Scholars will be selected by the Selection Committee of the Foundation. The decision will take both academic standing and need into consideration in making the award.

Application forms can be obtained by contacting the Executive Director of the Foundation, Professor C.Tissa Kappagoda, Ph.D, F.R.C.P at the mailing address or e-mail address given below.

Dr.C.Tissa Kappagoda,
Professor of Medicine
One Shield's Avenue,
TB 172, Bioletti Way,
University of California, Davis,
Davis,
California 95616,
U.S.A
e-mail: ctkappagoda @ ucdavis.edu.

☆ Completed applications must be received by the Executive Director by 15th July 2005

☆ Awards will be annonced in August 2005

(36345)(21

## கலாசாரம் பேணும் இளைஞர்களால் ஆபாசஒளிநாடாக்கள் அழிப்பு

சாவகச்சேரி,ஜூன்9

சாவகச்சேரியில் மாணவர்கள் சிலரிடமிருந்து ஆபாசப் படங்களைக் கைப்பற்றிய கலாசாரம பேணும் இளைஞர்கள் அவற்றை எரித்தழித்தனர்.

ஆபாசப் படங்கள் தொடர்பாகக் கிடைத்த முறைப்பாடுகளையடுத்து கலாசாரம் பேணும் இளைஞர்கள் விசாரணை நடத்திவந்தனர். இதனைத் தொடர்ந்து அவர்கள் தனியார் கல்வி நிறுவனங்களில் கற்கும் மாணவர்கள் சிலரை சந்தேகத்தின் பேரில் விசாரணைக் குட்படுத்தினர். இந்நிலையில் அந்த மாணவர்களிடமிருந்து ஆறு ஆபாசப் பட ஒளிநாடாக்கள் கைப்பற்றப்பட்டன. நேற்றுமுன்தினம் அந்த ஒளிநாடாக்கள் சாவகச்சேரி பஸ் நிலையமருகே பொதுமக்கள் முன்னிலையில் தீக்கிரையாக்கப்பட்டன. (ஒ-31)

## சமய சந்நிதிகளில்

வலி.தென்மேற்கு,ஜூன்9

பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த 4 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று, எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நற்கருணை வழிபாடு திருவிழாவும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்குத் திருப்பலிப் பூசையும் அதனைத் தொடர்ந்து திருச்சொரூபப் பவனியும் நடைபெறும். பண்டதரிப்பு பங்குத்தந்தை ம.பெ.ஞானரத்தினம் அடிகளார் திருப்பலிப் பூசையை நிறைவேற்றுவார். (ஒ-135)

★ ★ ★

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறும்.

எதிர்வரும் 21 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். (ஒ-28-204)

★ ★ ★

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை ஐங்கரன் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை 5.52 மணிக்கு நடைபெறவுள்ளது. பெருந்திருவிழா நாளைமறுதினம் சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெறவுள்ளது. (ஒ-204)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூன்9

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் உட்பிரகார சந்தான கோபாலர் திருக்கோயில் கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஒ-204)

## அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூன்9

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின அபிவிருத்தி பற்றிய கலந்துரையாடலும் வைத்தியசாலை அபிவிருத்திக் குழுத் தெரிவும் எதிர்வரும் 12ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்.அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்துகொள்வர்.(ஒ-202)


## நிரு அழகு நிலையம்



அழகுக் கலை சம்பந்தப்பட்ட அனைத்துப் பயிற்சி வகுப்புகளும் நாளை (10-06-2005) வெள்ளிக்கிழமை ஆரம்பம்.

கொழும்பில் கூடிய கட்டணத்துடன் பயிலும் பயிற்சி நெறிகளைக் குறைந்த கட்டணத்துடன் வடமராட்சியில் பயில ஓர் அரிய சந்தர்ப்பம்.

செல்வி த.பாமதி,
சாமியன் அரசடி, கரவெட்டி.

(சி-43282) T.P.: 077 6235240.

## வேலையாள் தேவை

எமது வியாபார ஸ்தாபனத்துக்கு.

★ சிட்டை எழுதுபவர் (Bill Clerk) ★ கணக்காளர் (Accountant) ஆகியோர் தேவை.

☞ மின்சாரப் பொருள்கள் விற்பனையில் அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது. உடனே நேரில் வரவும்.

யாழ்ப்பாண மின்னகம்

6, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி43283)(29-14-15-26) ☎ 222 2353


## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர்

திரு அருணாசலம் - சண்முகலிங்கம்

அவர்களின் அன்புத் தாயார்

திருமதி அருணாசலம் சிவகாமி அம்மாவின்

மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்
கிளை: நல்லூர் ப.நோ.கூ.சங்கம்.

(36354)
(21-17-15)

## மனம் நெகிழ் மூன்றாண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12 - 09 - 1996



மறைவு 13 - 06 - 2003

செல்வன் சிவானந்தம் மதிமுகன்

(தரம் 1 மாணவன் கிளி/பளை ம.ம.வி.)

திதி: திருதியை

ஆனதோ ஆண்டுகள் மூன்று ஐயா இன்று
போனதோ புகுந்ததோ பொன்னும் காலமே - அன்று
காதல் மகனாய் களிப்புற்ற காலம் கனவாக
சாதல் காட்டிய சாலங்கள் நனவாக
நெஞ்சுருகி நெக்குருகி தாய் உருகி தந்தைதான் உருகி
குஞ்சு நீயுருகி நின்றதையே குலத்தோர் கண்டு குமுறி
உருகுகின்றார்

பிறப்புளதேல் இவ்வுலகில் இறப்புண்டு என்றே பேசுகின்றோம். இறப்புளதேல் ஏன் பிறப்பில்லை என்றே பெரிய கேணியானை பிரார்த்திக்கின்றோம்.

-அப்பா, அம்மா, தங்கை
சாம்பவி குடும்பத்தினர்.

*முகவரி:* லிங்கநேய,
நாகர்கோவில் வீதி,
எழுதுமட்டுவாழ்.

(36356)(32-14-15-26)

## பிறந்தநாள் நினைவு அஞ்சலி

தோற்றம் 1946 - 06 - 09



மறைவு 2001 - 01 - 28

அமரர் வல்லிபுரம் மாணிக்கலிங்கம்

அப்பா,

அணைந்தும் அணையாத தீபமே!
உங்கள் பிறந்தநாளில் எங்கள்
இதய அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றோம்.

மா.குமரேஷ்,
566/3, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

(36349)
(21-17-15)

மனைவி,
பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

திருமதி

மாருதப்புரவீகவல்லி பாலசுப்பிரமணியம்

மாதகல், பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த திருமதி மாருதப்புரவீகவல்லி பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (08.06.2005) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் மாதகல், நுணசை முருகமூர்த்தி கோயில் தர்மகர்த்தா கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் அவர்களின் துணைவியாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2005) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதகல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.பாலசுப்பிரமணியம் (கணவர்)
தர்மகர்த்தா.

மாதகல்,
நுணசை முருகமூர்த்தி கோயில்.

(36355)(21-14-15)

# தமிழ்மக்கள் பொறுமை இழக்கும்போது நாங்கள் தீர்க்கமான முடிவை எடுப்போம்!

## ஊடகவியலாளர்களிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

கிளிநொச்சி,ஜூன்9

தமிழ்மக்கள் பொறுமை இழக்கும்போது அவர்களைக் காவல்காப்போரும் பிரதிநிதிகளுமான விடுதலைப் புலிகள் தீர்க்கமான முடிவுகளை எடுப்பது தவிர்க்க முடியாதது.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தெரிவித்த சில விடயங்கள் வருமாறு:-

❑ *கேள்வி:* விடுதலைப் புலிகளுடன் ஏனைய தமிழ்க்கட்சிகளையும் பொதுக்கட்டமைப்பில் இணைத்துக் கொள்ளவேண்டும் என இந்தியா இலங்கைக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. அது குறித்து.....?

○ *பதில்:* இந்திய அரசின் அதிகாரபூர்வமான அறிக்கையாக இது இன்னமும் எமக்குக் கிடைக்கவில்லை. தெற்கு ஊடகங்களில் வந்த செய்திகள்தான் இத்தகவலை வெளியிடுகின்றன. இந்திய அரசு சார்பாகவும் அதிகாரிகள் சார்பாகவும் பல்வேறு செய்திகள் வெளிவந்துள்ளன.

விடுதலைப் புலிகளை தமிழ் மக்கள் ஏகப் பிரதிநிதிகளாக அண்மையில் தெரிவுசெய்துள்ளனர். ஜனநாயக வழிமுறை மூலமாக எல்லாக் கட்சிகளும் இணைந்து விடுதலைப் புலிகளையே ஏகப்பிரதிநிதிகளாக முன்வைத்து தேர்தலில் தங்கள் தீர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

இவற்றை எல்லாம் அறியாததுபோல அறிக்கைகள் வருவதைப் புரிந்துகொள்ள முடியாமல்தான் இருக்கின்றது.

❑ *கேள்வி:* ஆழிப்பேரலை ஏற்பட்டு ஆறு மாதங்கள் ஆகிவிட்டன. வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமை எப்படியிருக்கின்றது?

○ *பதில்:* மிகமோசமான நிலையில் இருக்கின்றது. மூன்று கட்டங்களாக அவர்களுக்கான பணிகளை வகுத்தோம். முதலாவது உடனடி மீட்பு நடவடிக்கை, உடனடி மனிதாபிமான உதவிகள், இரண்டாவது அவர்களை தற்காலிக இடங்களில் குடியமர்த்தி அடிப்படை வசதிகளை வழங்குவது. மூன்றாவதுதான் மிக முக்கியமான பாரிய வேலைத்திட்டமாகும். அதாவது, அவர்களை நிரந்தர இடங்களில் குடியமர்த்துவதும் அவர்களுக்கான தொழில் முயற்சிகளை - தொழில் கட்டுமானங்களைக் கட்டியெழுப்புவதும்.

முதலாவது 2 கட்டப்பணிகளை இங்குள்ள நிறுவனங்கள் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் மக்களின் உதவியோடு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடாகவும் ஏனைய சர்வதேச நிறுவனங்களுடாகவும் - எங்களுடைய மக்களின் பூரண ஒத்துழைப்போடும் நாங்களும் இணைந்து மிகச் சிறப்பாகப் பூர்த்தி செய்துள்ளோம்.

ஆனால், 3 ஆம் கட்டப் பணிகளைத் தொடக்க முடியாதுள்ளோம். ஏனெனில், பாரிய சர்வதேச உதவிகளை முடக்கும் வகையில் இலங்கை அரசு எந்தத் தீர்மானத்துக்கும் வராமல் இழுத்தடிக்கின்றது. இந்தப் போக்கால் சர்வேதச உதவிகள் முடங்கிபுள்ளன. ஆகவே, இது மிகவும் நெருக்கடியான நிலையைத் தந்துள்ளது.

❑ *கேள்வி:* இன்றுள்ள நிலையில் விடுதலைப் புலிகள் பொறுமையிழந்துள்ளன்ரா?

○ *பதில்:* விடுதலைப் புலிகள் பொறுமையிழந்துவிட்டார்கள் என்பதைவிட தமிழ் மக்கள ஒட்டுமொத்தமாகப் பொறுமையிழந்துவிட்டார்கள் என்றே கூறவேண்டும்.

தமிழ் மக்கள் பொறுமைஇழக்கும்போது தமிழ் மக்களைக் காவல்காப்போரும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளுமாகிய விடுதலைப் புலிகள் சில தீர்க்கமான முடிவுகளை எடுப்பது தவிர்க்க முடியாதது என நான் கருதுகின்றேன் - என்றார் தமிழ்ச்செல்வன். (ஐ-3-202)

# காயங்கேணிப் படுகொலை: கருணா குழுவில் இருவர் கைது!

மட்டக்களப்பு,ஜூன்9

மட்டக்களப்பு, வாழைச்சேனை - வாகரை வீதி காயங்கேணியில் கடந்த 6 ஆம் திகதி நண்பகல் 19 வயது இளைஞர் கடத்தப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டு வீதியில் வீசப்பட்ட சம்பவம் தொடர்பாக கருணா குழுவைச் சேர்ந்த இரண்டு பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரும் பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இறால் - ஓடையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சசிகரன் என்பவர் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்துகொண்டிருந்தபோது ஆயுதமுனையில் கடத்தப்பட்டு, மாலையில் கைககள் கட்டப்பட்ட நிலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட வாழைச்சேனைப் பொலீஸார் அப்பிரதேச மக்கள் கொடுத்த தகவல்களின் அடிப்படையில் மாங்கேணியைச் சேர்ந்த தியாகராசா ஜேசுதாஸ் (வாணன்) மற்றும் தம்பிராசா தருமராசா (ஏகலைவன்) ஆகிய இருவரையும் சந்தேகத்தின் அடிப்படையில் கடந்த 6 ஆம் திகதி மாலை கைதுசெய்து விசாரணை நடத்தினர்.

இவர்கள் மீதான விசாரணை முடிவடைந்தையடுத்து கொலைக் குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபர்களாக அடையாளம் காணப்பட்ட இருவரும் நேற்றுமுன்தினமிரவு மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிவான் எம்.எச்.எம். அஜ்மீர் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவரது உத்தரவின் பேரில் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (க-8)

# ஆட்சி கவிழ்ந்தாலும் ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பில் மிக உறுதி!

## கட்சிக்காரர்களிடம் அடித்துக் கூறுகின்றார்

கொழும்பு,ஜூன்09

அரசிலிருந்து ஜே.வி.பி விலகி ஆட்சி கவிழ்ந்தாலும் பரவாயில்லை, பொதுக் கட்டமைப்பை கைச்சாத்திட்டே தீருவேன்.

- இவ்வாறு அடித்துக் கூறியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியமான - தமக்குப் பெரிதும் நம்பிக்கைக்குரிய - பிரமுகர்களை கடந்த திங்கட்கிழமை இரவு அழைத்து ஜனாதிபதி நீண்ட நேரம் மந்திராலோசனை நடத்தினார்.

அமைச்சர்களான அனுர பண்டாரநாயக்கா, சரத் அமுனுகம, திஸ்ஸ வித்தாரண பிரதி அமைச்சாகளான டிலான் பெரேரா, மகிந்தானந்த அளுத்கமகே, சாலிந்த திஸாநாயக்க, ஜயதிஸ்ஸ ரணவீர தயாஸ்ரித்த திஸேரா, ஜகத் புஷ்பகுமார், மேல்மாகாண முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரே ஆகியோரையே ஜனாதிபதி அன்றிரவு தமது மாளிகையில் சந்தித்தார்.

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான தமது நிலைப்பாட்டை இந்தச் சந்திப்பில் எடுத்துக் கூறிய ஜனாதிபதி, ஆட்சி கவிழும் என்பதற்காக தாம் எடுத்த - நாட்டுக்கு நல்லது தருகின்ற - முடிவைத் தாம் மாற்றிக் கொள்ளப் போவதில்லையென்றும் அங்கு அறுதியிட்டுக் கூறினார் எனத் தெரியவந்தது.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படுவது நல்லதுதான் என்றாலும், அதனால் அரசு கவிழ்ந்து விடக்கூடாதென்பதால் அரசைப் பாதுகாக்கும் வகையில் ஜனாதிபதி செயற்பட வேண்டுமென்று அங்கு அமைச்சர்கள் சுட்டிக் காட்டினராம். (க-3)

# பொதுக்கட்டமைப்பு என்ற பெயரில் தமிழர்களுக்கு முழு நாட்டையும் தாரைவார்த்துக் கொடுக்க முடியாது

## அத்துரலிய ரத்ன தேரர் நாடாளுமன்றில் உரை

கொழும்பு,ஜூன்9

நாட்டின் 13 வீதமே உள்ள தமிழர்களுக்கு பொதுக்கட்டமைப்பு என்ற பெயரில் முழு நாட்டையும் தாரைவார்த்துக் கொடுக்கமுடியாது என்று ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் வண. அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார்.

சபாநாயகரின் அனுமதியுடன் விசேட உரை ஒன்றை நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஆற்றும்போதே இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

அரசும், புலிகளும் செய்துகொண்ட சமாதான உடன்படிக்கையின்பின் புலிகள் பொருளாதார ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் தம்மை விருத்திசெய்து கொண்டுள்ளனர்.

இப்பொழுது ஆழிப்பேரலை அனர்த்த மறுசீரமைப்பு என்ற வகையில் ஆயிரம் கிலோ மீற்றர் கரையோரப் பிரதேசங்களைப் புலிகளுக்குத் தாரைவார்த்துக் கொடுக்க முனைகின்றனர்.

இதனைச் சட்டரீதியாகவே கொடுப்பதுதான் பொதுக்கட்டமைப்பு. நாட்டின் 13 வீதமே உள்ள தமிழர்களுக்கு பொதுக்கட்டமைப்பு என்ற வடிவில் முழு நாட்டையும் தாரைவார்த்துக் கொடுக்க இடம்கொடுக்க முடியாது.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பின் புலிகள் விமானத் தளங்களை அமைத்துவிட்டனர். இப்பொழுது திருகோணமலையிலும் விமான ஓடு பாதைகளை அமைத்துவருகின்றனர். ஒரு யுத்தத்திற்குத் தயாராகி வருகின்றனர்.


1983ஆம் ஆண்டில் வடக்கில் 23 ஆயிரம் சிங்களவர்கள் இருந்தனர். இப்போது ஒருவருமே இல்லாமல் விரட்டியடிக்கப்பட்டனர்.

இதேபோன்று திருகோணமலையில் இருந்தும் சிங்களவர்களை வெளியேற்றுவதே புலிகளின் திட்டம்.

ஜனாதிபதிதான் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு தொடர்பான ஒப்பந்தம் செய்யப்போகிறார் எனக் கூறுகின்றார். நாடாளுமன்றத்திற்குத் தெரியாமல் ஜனாதிபதி தன்னிஷ்டப்படி எதையும் செய்துவிட முடியாது. இதுவரை புலிப் பயங்கரவாதிகள் 114 இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளைச் சுட்டுக்கொன்றுள்ளனர். இதனை ஜனாதிபதி அறியமாட்டாரா?

எங்களிடம் எந்தவிதமான ஆயுதமும் இல்லை. ஆயுதம் ஏந்திப் போராடவும் நாம் தயாராக இல்லை. இது ஒரு பௌத்த நாடு. நாட்டின் எந்தப் பகுதியிலும் புத்தர்சிலைகளை அமைக்கவும் பௌத்த தர்மத்தை போதிக்கவும் எமக்கு உரிமையுண்டு. அதைத் தடுக்க எவராலும் முடியாது.

நாட்டின் இறைமையையும், பௌத்தமதத்தையும் பாதுகாக்கும் நோக்குடன் எமது உறுப்பினர் வண. ஓமல்பே சோபித தேரர் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றார். எமது நியாயமான கோரிக்கையை முன்வைத்து நாம் அமைதிவழிப் போராட்டத்தைத் தொடந்து நடத்துவோம், அதற்கான நியாயம் கிடைக்கும்வரை இந்த நாடாளுமன்றத்தையும் பகிஷ்கரிக்கின்றோம் - எனக் கூறிச் சபையில் இருந்து அவர் வெளியேறினார். அவருடன் இருந்த இரண்டு பிக்கு உறுப்பினர்களும் சேர்ந்து நேற்று வெளியேறிவிட்டனர்.




ஆனால், அவர்கள் வெளிநடப்புச் செய்து அரைமணி நேரத்தில் ஜாதிக ஹெல உறுமய அதிருப்தியாளர்களான வண. உடுவே தம்மாலோக்க தேரரும், வண. புண்ணியானந்த தேரரும் சபைக்குள் வந்து தமது ஆசனங்களில் அமர்ந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

# இலங்கையில் நீதியரசர்கள் சரியான நீதியை வழங்குகிறார்களா என மக்களுக்குச் சந்தேகம்!

## நாடாளுமன்றில் ராஜித விசனம்

நீதியரசர்களுக்கு அதிக கொடுப்பனவுகள் ஜனாதிபதியின் வீட்டிலிருந்தோ அன்றி பிரதமர், நிதியமைச்சர் போன்றோரின் வீடுகளிலிருந்தோ வழங்கப்படுவதில்லை. அது மக்களின் வரி மூலம் பெறப்படும் பணத்தில் இருந்தே கொடுக்கப்படுகிறது. அந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்ளும் நீதியரசர்கள் சரியான நீதியை வழங்குகிறார்களா என்பதே மக்களின் கேள்வியாகும்.

- இப்படி விசனத்தோடு சுட்டிக் காட்டுகின்றார் ராஜித சேனாரத்ன எம்.பி.

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் பிரதம நீதியரசர்,உயர் நீதிமன்ற நீதியரசர்கள், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் கொடுப்பனவுகளை அதிகரிப்புத் தொடர்பான திருத்தச சட்ட மூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார். அவர் மேலும் இது பற்றிக் கூறியதாவது:

இலங்கை நீதிமன்றங்களில் வழங்கப்படும் தீர்ப்புகள் அடிப்படை மனித உரிமைகளை மீறும் வகையில் அமைந்துள்ளன. இந்த நீதிமன்றங்கள் மீது நம்பிக்கை இழந்துள்ள பொது மக்கள் சர்வதேச நீதிமன்றத்தை நாடிச் செல்கின்றனர். இலங்கையின் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளில் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன எனச் சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

இது இந்த நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் கிடைத்த ஓர் அபகீர்த்தி என்றே கருத வேண்டும். இதுவரை நான்கு வழக்குகளுக்கு இப்படித் தீர்ப்புக்கிடைத்துள்ளது. மக்கள் இன்று இலங்கையின் நீதித்துறை மேல் நம்பிக்கையிழந்து விட்டனர்.

ஜெனிவாவில் உள்ள சர்வதேச நீதிமன்றில் அதிகூடிய வழக்குகள் உருகுவே நாட்டிலிருந்தே கிடைத்துள்ளன. இன்று அதற்கு அடுத்த கட்டமாக இலங்கையே திகழ்கின்றது. ஜெனீவாவில் உள்ள சர்வதேச ஆணைக்குழுவும் எமது நீதித்துறை பற்றி விமர்சித்துள்ளது. இதிலிருந்து என்ன தெரிகிறது? எமது நீதிமன்றங்களில் உரிய நீதி கிடைக்கவில்லை என்பதே அதுவாகும்.

இப்படியான ஒரு போக்கை எப்படித் தடுப்பது? இதற்கு யார் பொறுப்பு? - என்ற கேள்வி எழுந்துள்ளது.

அண்மையில் மேன்முறையீட்டு நீதிமன்றுக்குச் செல்லாமல் இரண்டு வழக்குகள் சர்வதேச நீதிமன்றில்தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இங்குள்ள மேன்முறையீட்டு நீதிமன்றம் உரிய தீர்ப்பை வழங்காது என்பதை சர்வதேச நீதிமன்றம் தெளிவாக தெரிந்து கொண்டுள்ளது என்பதே உண்மை. இதனாலேயே நாம் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணையொன்றைக் கொண்டுவந்தோம் - என்றார் அவர்.(க-8)

## விற்பனையாளர்கள் தேவை

எமது புத்தகசாலையில் விற்பனையாளராகப் பணிபுரிவதற்கு ஆண்கள் தேவைப்படுகின்றனர். ஆர்வமுள்ளோர் 10.06.2005அம் திகதிக்கு முன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி,
**ஸ்ரீலங்கா புத்தகசாலை,**
*234, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.*
T.P:. 021 222 2573. (43464)(07-26-15-42)

## மூத்த அமைச்சர்களுடன் ஜனாதிபதி மந்திராலோசனை

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுமுன்தினம் கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்கள பலரையும் சந்தித்து முக்கிய பேச்சுகளை நடத்தியுள்ளார். நேற்றுமுன் தினம் நண்பகல் விருந்துபசாரத்துடன் நடைபெற்ற இந்தப் பேச்சுகளின் போது அமைச்சர்களான சரத் அமுனுகம, டி.எம்.ஜயரத்ன, சீ.பி.ரத்னாயக்க உட்படப் பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்டனர். உத்தேசப்பொதுக் கட்டமைப்பு விடயம் குறித்தே இந்தச் சந்திப்பின போது முக்கியமாக ஆராயப்பட்டிருக்கிறது. பொதுக்கட்டமைப்பு தொடர்பில் மாநாயக்க தேரர்களுக்கு அளிக்கப்படும் விளக்கங்கள் குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டதாக அறியவந்தது. (க-8)

## ஆராதனைவிழா

இராமநாதன் நுண்கலைக் கழக கவின் கலை மன்றத்தின் ஏற்பாட்டில் சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் ஆராதனை விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நுண்கலைக் கழகத்தின் இசைத் துறை தியாகராஜா ஆராதனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ஜ-202)

உ

வல்வெட்டித்துறை தீருவில் வயலூர்
முருகன் ஆலய
**மஹாகும்பாபிஷேகப் பெருவிழா**

*முருகன் அடியார்களே!*

மேற்படி வயலூர் முருகன் ஆலய மஹாகும்பாபிஷேகம் நாளை (10.06.2005) வெள்ளிக்கிழமை காலை 6 மணிமுதல் 6.45 மணிவரை உள்ள இடப லக்கின சுபமுகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது. இன்று (09.06.2005) வியாழக்கிழமை காலை 7 மணிமுதல் மாலை 5 மணி வரை எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

பிரதிஷ்டாகுரு:- **சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகர சிவாச்சாரியார்** (சிவன் கோயில், வல்வை)

சர்வ சாதகம்:- **சிவஸ்ரீ தாணு. மகாதேவ சிவாச்சாரியார்** (இணுவில்)

இவர்களுடன் பல சிவாச்சாரியார்கள் இணைந்து கும்பாபிஷேகத்தைச் சிறப்பிப்பார்கள். இந்நிகழ்வுகள் யாவும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தென்றல் யாழ். சேவையினூடாக நேரடி அஞ்சல் செய்யப்படும்.

*அனைவரும் வாரீர்! திருவருள் பெறுவீர்!!*

**- தர்மகர்த்தாவும் உபயகாரர்களும்.**

(36328)(32-15-42-46)

உ

## புதிய வேல் மிக்சர் ஸ்தாபனத் திறப்பு விழா

அன்புடையீர்,

நிகழும் பார்த்திப வருடம் வைகாசி 27 ஆம் நாள் (10.06.2005) வெள்ளிக்கிழமை காலை 6 மணிமுதல் 10.45 மணி வரையுள்ள சுபவேளையில் எமது புதிய வேல் மிக்சர் ஸ்தாபனத் திறப்பு விழா நடைபெறவுள்ளது. அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விற்பனை நிலையம்:
**57, கே.கே.எஸ். வீதி,**
**கொக்குவில்**
**(கொக்குவில் சந்திக்கும் பூநாறி மரத்தடிக்குமிடையில்).**

உரிமையாளர்:
**அ.பார்த்திபன்**
T.P.: **077-6701461**

## வேல் மிக்சர்
## (Vel mixture)

இந்திய முறைப்படி இயந்திரம் மூலம் 25 ஆண்டுகளுக்கு மேல் அனுபவமுள்ளவர்களின் கைவண்ணத்தில் உருவான மிக்சர், நெய்பூந்தி, பூந்தி லட்டு, மைசூர்பாகு, பகோடா, காராச்சோட், ரிச் கேக், பட்டர் கேக், Wedding Boxes கேக், பருத்தித்துறை வடை, மஸ்கட் ஆகியவற்றை (மங்களகரமான வைபவங்களுக்கும்) முன்கூட்டியே ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

*விற்பனை நிலையம்:*
**960, கே.கே.எஸ். வீதி,**
**நாச்சிமார் கோவிலடி,**
**யாழ்ப்பாணம்.**

*உற்பத்தி நிலையம்:*
**57, கே.கே.எஸ். வீதி,**
**கொக்குவில்.**
**T.P.: 077-6701461**

(36296)(42-14-15)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான பார்த்திப வருஷம் வைகாசித் திங்கள் 27ஆம் நாள் (10.06.2005) வெள்ளிக்கிழமை காலை 7.22 மணி முதல் 9.22 (பழையநேரம்) மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**சச்சிதானந்தன்**
**(சுதா)**
அவர்களுக்கும்



எமது புத்திரி
திருநிறை செல்வி
**துகிர்தா**
**(துகிர்)**
அவர்களுக்கும்

இறையருள் கூடி திருமணஞ்செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் மணமகள் இல்லத்தில் நடைபெறவுள்ள திருமாங்கல்யதாரண வைபவத்திற்கு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து அங்கு நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*தங்கள் நல்வரவை இனிதே நாடும்*

**திரு.திருமதி சாந்தகுமார் தெய்வநாயகி**
"ரிசிகேஷம்"
சிவன் வீதி, புத்தூர்.

**திரு.த.மயில்வாகனம்** (இளைப்பாறிய அதிபர்)
"அன்பு இல்லம்",
நீர்வேலி மத்தி, நீர்வேலி.

(இருவீட்டார் அழைப்பு) (36306)(42-15-46)

## விற்பனைக்கு

### புதிய DTH (DIRECT TO HOME) SYSTEM

| DISHTV | | FREE CHANNELS | |
|---|---|---|---|
| ESPN | | SUN TV | |
| STAR SPORTS | | பொதிகை | 11,500/= |
| ZEE SPORTS | | DD SPORTS | இலிருந்து |
| EURO SPORTS | 19,500/= | உட்பட | |
| SUN TV | | 35 CHANNELS | |
| JEYA TV | | | |
| BBC WORLD | | | |
| உட்பட | | | |
| 120 CHANNELS | | | |

**EURO BOX, ALBABOX, TOP FIELD, TECHONOSAT SUN CREATE, SERITAL, ZENEGA உட்பட எல்லா வகையான ரிசீவர்களும் விற்பனைக்குண்டு. EURO STAR, NUCLEUS, BAND, KUBAND DISH களும் LNBF களும் விற்பனைக்குண்டு.**

**EURO STAR உற்பத்திகளின் யாழ்.வன்னி மாவட்ட முகவர்கள்.**

(36311)(42-15-14)

**ஜமுனா ஸ்ரோர்ஸ்,**
**மெயின் வீதி,**
**நெல்லியடி.**
**tele: 226 3970, 0777 730332**

## எவரெஸ்ட் மூலிகை இருமல் பாணி

+ நூறு வீதம் இயற்கையானது
+ பக்கவிளைவு அற்றது
+ பாரம்பரிய மற்றும் சித்த பேரறிஞர்களின் ஏட்டுப் பிரதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டது.
+ ஆயுர்வேத திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றது.
+ சகலவிதமான இருமலுக்கும் சிறந்த நிவாரணி

அவதானிப்பு:
தொய்வு நோய் உள்ளவர்கள்
தொடர்ச்சியாகப்பாவித்துவரும்போது.
தொய்வு நோயிலிருந்து விடுதலை
பெறுகின்றனர்.




"உணவே மருந்து
மருந்தே உணவு"

தயாரிக்கும் இடம் :
**எவரெஸ்ட் சித்த மருந்தகம்**
**வட்டு .வடக்கு, சித்தன்கேணி.**

(36300)(51-19-15-42-46)

## மோ.சைக்கிளிலிருந்து தூக்கி வீசப்பட்டு இருவர் காயம்!

தென்மராட்சி,ஜூன்9

வீதியை விட்டு விலகிய மோட்டார் சைக்கிள் பள்ளத்தில் இறங்கியதால் அதில் பயணித்த இருவர் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் மந்துவில் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றது.

இந்த விபத்தில் மந்துவில் கிழக்கைச் சேர்ந்த சின்னவன் பிரபாகரன் (வயது 23), நடராஜா டினோசன் (வயது 18) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். இவர்கள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

(ஐ-117)

## கும்பாபிஷேகம்

வலி.தெற்கு,ஜூன்9

சாவற்கட்டு அத்திக்குழி சாமுண்டாதேவி உடனுறை ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் ஆலய ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் ஆலய மஹா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இன்று வியாழக்கிழமை காலை 6 மணிதொடக்கம் மாலை 5 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ள மஹாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 24 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். (ஐ-152)

★ ★ ★

வலி.தெற்கு,ஜூன்9

வல்வெட்டித்துறை தீருவில் வயலூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான மஹாகும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை ஆறு மணிமுதல் 6.45 மணிவரைக்குள் நடைபெறவுள்ளது.

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக் கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன. இன்று வியாழக்கிழமை காலை 6 மணிதொடக்கம் மாலை 5 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துவார்கள்.

கும்பாபிஷேகத்திலன்று நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சேமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளின் அருளுரை இடம்பெறும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். (ஐ-152)

## சுனாமி பாதிப்பு: உணவு முத்திரை விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜூன்9

குடாநாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண முத்திரைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இந்த முத்திரைகள் 49 ஆயிரம் பேருக்கு விநியோகிக்கப்படவுள்ளன.

மே 3ஆம் வாரம் முதல் 10ஆம் வாரம் வரையும் இந்த முத்திரைக்கான நிவாரணப் பொருள்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

முத்திரைகள் யாவும் யாழ். செயலகத்தினூடாக ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. அவை கிராமசேவையாளர்களூடாக சம்பந்தப்பட்டவர்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்த விநியோகத்தை கிராம சேவையாளர்கள் துரிதமாக நிறைவேற்றுமாறு யாழ் செயலக பிரதித் திட்டமிடற்பணிப்பாளர் கேட்டுள்ளார். (ஐ-13)

## கவிதைத் தொகுதி நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜூன்9

கவிஞர் சூரிய நிலாவின் 'சூரியக் குளியல்' கவிதைத் தொகுதியின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 230 மணிக்கு யாழ். மறைக் கல்வி நடுநிலையத்தில் நடைபெறவுள்ளது.

கவிஞர் கு.ரஜீபனின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆசியுரையை பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் அருட்தந்தை றூபன் மரியாம்பிள்ளையும், வெளியீட்டுரையை கவிஞர் கல்வயல் வே.குமாரசாமியும், ஆய்வுரைகளை கவிஞர் சோ.பத்மநாதன், யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர் இ.குமரன் ஆகியோரும் நயப்புரையை மதுரகவி காரை எம்பி. அருளானந்தனும் நிகழ்த்துவர்.

முதற்பிரதியை வைத்திய கலாநிதி லயன் வை. தியாகராஜா பெற்றுக்கொள்வார். (ஐ-202)


**HND**

**புதிய பிரிவுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

Higher Natic nal Diploma கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் என்பதால் உங்கள் பதிவுகளிற்கு முந்திக்கொள்ளுங்கள். மேலதிக விபரங்களிற்கு

இயக்குநர்
IIS CITY CAMPUS
#181, Navalar Road,
Jaffna.
☎ 2228060

**நாதன்ஸ் சினிமா** ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
குளிரூட்டப்பட்டது.
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
உங்கள் பிரகாஷ்ராஜ், நவதீப், தேசா ஜெயராம், ஸமிக்சா மற்றும் பலர் நடித்த
**அறிந்தும் அறியாமலும்** (ரீகல்)
கா.நே.: 10.30,2.30,6.30,9.30. (பு.நே.)

**நாகம்ஸ் சினிமா சுன்னாகம்**
57 ஆவது நாளாக
ரஜினி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடித்த
காட்சிகள்:
11.00. 3.00. 7.00 (பு.நே.)
கடைசிவாரமாக
13 ஆம் திகதி முதல்
**ஜித்தன்**



**சந்திரமுகி** (ரீகல்)

**ராஜா யாழ்ப்பாணம்**
புதிய வெளியீடு
லேடி சுப்பஸ்ரார் விஜயசாந்தி, லக்ஸ்மி, சுஜாதா, நிழல்கள்ரவி நடித்த
**சூர்யா** (ரீகல்)
ஆக்ஷன் படம்.
காட்சி நேரம்: 10.30,2.30, 6.30, 9.30 (பு.நே.)



உ
துணையம்

**புதுக்கடை திறப்பு விழா**

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் வைகாசி மாதம் 26ஆம் நாள் (09.06.2005) வியாழக்கிழமை காலை 9.40 மணிமுதல் காலை 10.20 மணிவரையுள்ள கடகலக்கின சுபவேளையில்
இல.132, டாம் வீதியில் இயங்கிவந்த ஈஸ்வரன் றேடர்ஸ் என்னும் எமது நிறுவனம்

**ஈஸ்வரன் றேடிங்கோ**

எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு201B, டாம்வீதி,கொழும்பு-12 எனும் இடத்தில் புதிதாக ஆரம்பிக்கவுள்ளது.

ஈஸ்வரன் றேடிங்கோ,
இல 201 B, டாம் வீதி,
கொழும்பு - 12. T.P:0114-714312

உரிமையாளர்,
ஊழியர்கள்.

**யாழ்.கொழும்பு- கிளிநொச்சி போக்குவரத்துச் சேவையின் முன்னோடிகள்** (C/43271)

பொதிகள் பொறுப்பேற்கும் இடங்கள்:

இல. 201 B, டாம் வீதி,
கொழும்பு - 12.
T.P:0114-714312.0777 674119.

இல.69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:021 - 222 2813.021 - 222 3590. 021 - 222 3048.



உ

**திறப்பு விழா அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பார்த்திப வருடம் வைகாசித்திங்கள் 26ஆம் நாள் (9.6.2005) வியாழக்கிழமை பிற்பகல் 1.10மணி முதல் 1.46 மணியளவில் (புதிய நேரம்) கன்னிலக்கின சுபமுகூர்த்ததில்

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

**வீனஸ் உழவு இயந்திர உதிரிப்பாகங்கள்**

**VENUS TRACTOR PARTS**

என்னும் ஸ்தாபனத்தை இறைவன் திருவருள் துணைகொண்டு ஆரம்பிக்கவுள்ளதால் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், உழவு இயந்தர உரிமையாளர்கள், பாவனையாளர்கள, வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகை தந்து ஆதரவு நல்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மானிப்பாய் சந்தி,
பொன்னாலை வீதி,
மானிப்பாய்.

T.P. 077 6567399

S.T. அரவிந்தன்.

(36363)(16-13-33-38-56)


## 5ஆம் ஆண்டு நினைவுகள்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 1984 - 04 - 13 |  | 2000 - 06 - 04 |

### சிவசுப்பிரமணியம் நந்தகுமார் (நந்தன்)

எங்கள் முன் சில ஆண்டுகள்
இறைவன் காலடியில் ஐந்து ஆண்டுகள்
இன்னொரு ஜென்மம் என்றிருந்தால்
உன் அன்பிற்காகவே தவமிருப்போம்.

உன் துயரால் வாடும்:
அம்மா,
கோண்டாவில். (36365)(16-13-33-38) அண்ணாமார்கள்.

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது



நந்தாவில், கொக்குவிலைச் சேர்ந்த

### திருமதி சரஸ்வதி செல்வராசா

அவர்களின் 10-06-2005 வெள்ளிக்கிழமை அன்று நடைபெறவிருந்த 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக்கொள்ளவும்.

★ இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு நாம் மிக மனம் வருந்துகின்றோம்.

நந்தாவில்,
கொக்குவில். (36360)(16-13-33-38)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### செல்வி இராசேந்திரம் கார்த்திகாயினி



*(தரம் 10, மாணவி -இராமகிருஷ்ண வித். கொக்குவில்)*

யாழ்ப்பாணம், திருநெல்வேலியைச் சேர்ந்த இராசேந்திரம் (திருநெல்வேலி ஸ்ரோர்ஸ் -உரிமையாளர்) - யுவராணி தம்பதிகளின் அருமைப் புதல்வி கார்த்திகாயினி நேற்றுமுன்தினம் (7.6.2005) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா பத்தினிப்பிள்ளை (வட்டுக்கோட்டை) - தங்கம் கந்தசாமி (தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (9.6.2005) வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொக்குவில் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஆடியபாதம் வீதி,*
*ஊனமுற்றோர்*
*சங்க ஒழுங்கை,*
*திருநெல்வேலி.*

(C/43285)(16-13-33)

தகவல்:
இராசேந்திரம்
(தந்தை).

### தம்பிப்பிள்ளை விக்னேஸ்வரராசா

*(இளைப்பாறிய ஆசிரியர்)*

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சம்பியன் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை விக்னேஸ்வரராசா அவர்கள் நேற்று (08.06.2005) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் தம்பிப்பிள்ளை (ஆசிரியர்) - நாகம்மா தம்பதிகளின் மூத்த மகனும் கோகிலாதேவி, தவதேவி, சண்முகானந்தராசா (லண்டன்), நடராசா (லண்டன்), சிவானந்தராசா (கனடா), கலாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் பேராசிரியர் கா.குகபாலன் (புவியியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற புஸ்பநாதன் (சுமிதா ரேட் சென்ரர், கொழும்பு), விஜயா (லண்டன்), கல்யாணி (லண்டன்), தேன்மொழி (கனடா), சுந்தரலிங்கம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.06.2005) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சம்பியன் ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

(36366)(16-13-33)

தகவல்:
குடும்பத்தினர்.

# நயினாதீவில் அடியார் ஒருவரின் தாலிக்கொடி அபேஸ்!

யாழ்ப்பாணம், ஜூன் 9

நேற்று நயினை நாகபூசணியின் கொடியேற்றத் திருவிழாவின்போது நெரிசலின் மத்தியில் அடியார் ஒருவருரின் தாலிக்கொடி திருடப்பட்டிருப்பதாக முறைப்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

வேலணை துறையூரைச் சேர்ந்த பழனி பராசக்தி (வயது 60) என்ற வயோதிபமாதுவின் சுமார் ஏழு பவுண் பெறுமதியான தாலிக்கொடியே திருடப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக உற்சவகால பொலீஸ் பிரிவில் முறையிடப்பட்டிருக்கிறது.

இதேவேளை -

உற்சவத்துக்கு வருகை தரும் அடியார்கள் தங்கள் உடைமைகளைப் பத்திரப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று உற்சவகால பொலீஸ் பிரிவின் பொறுப்பதிகாரி ஐ.பி.ராஜபக்ஷ யாத்திரிகர்களைக் கேட்டுள்ளார்.

உற்சவத்துக்கு நாடு முழுவதும் இருந்து பக்தர்கள் வருகை தரும்போது அவர்களோடு திருடர்களும் உள்நுழையலாம் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ-12-111)

# முத்தலிப் கொல்லப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்குத் திரும்பமுடியாமல் வன்னியில் தங்கி நிற்கின்றனர்.

இவர்கள் திரும்பிச் செல்வதற்கான ஹெலிகொப்டர் வசதியை வழங்கமுடியாது என அரசுத் தரப்புப் பின்னடித்து வருகின்றது.

அரசு இதுவிடயத்தில் தனது பொறுப்பை நிறைவேற்றத் தவறுமானால் தமது தரைப் படை, கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் உதவியோடு தாங்களே தங்கள் தளபதிகள் மற்றும் பொறுப்பாளர்களுக்கான சுய பாதுகாப்பை ஏற்படுத்திக்கொண்டு அந்தந்த இடங்களுக்கு அவர்கள் போய்ச் சேருவதற்கான நடவடிக்கைகளை எடுப்பர் என்று புலிகளின் தலைவர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பின்னணியில், ஹெலிகொப்டர் மூலமான உரிய போக்குவரத்து வசதியை வழங்காமல் அரசுத்தரப்பு மறுப்பதற்கான காரணம் குறித்து உள்வீட்டுத் தகவல்கள் வெளியாகியுள் ளன.

லெப்டினன்ட் கேணல் முத்தலிப் சுட்டுக் கொல்லப்பட்டதால் விடுதலைப் புலிகளின் தலைமை மீது அரச இராணுவத் தரப்பு - படைத்தரப்பு அதிகம் சீற்றமுற்றிருக்கின்றது.

இந்நிலையில் புலிகளின் தளபதிகளின் போக்குவரத்துக்கு ஹெலி மற்றும் பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்துமாறு படைத்தரப்பை நெருக்குவது அரசுத் தலைமைக்குக் கஷ்டமான காரியமாகும். ஆகவே, விவகாரம் கொஞ்சம் ஆறட்டும். அதன்பின்னர் போக்குவரத்து வசதியை ஏற்படுத்தலாம் என்ற செய்தி நோர்வேத்தரப்பு மூலம் புலிகளின் தலைமைக்குத் தெரியப்படுத்தப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது.

ஆனால், இந்தத் தகவல் புலிகளின் தலைமையை விசனத்துக்குள் ஆழ்த்தியிருப்பதாகத் தெரிகிறது.

தளபதிகள், பொறுப்பாளர்கள் தத்தமது மாவட்டங்களுக்கு உடனடியாகத் திரும்பாவிட்டால், ஏற்கனவே பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்து வரும் அவர்களின் கிழக்குப் பகுதியில் நிலைமை இன்னும் மோசமாகும் என்று புலிகள் கருதுகின்றார்கள் எனக் கூறப்பட்டது.

(ஐ-க)

# பதுங்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் உள்ள கோமாரிக் கிராமத்தில் அரசியல் பணிக்காகச் சென்றுவிட்டுப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள தமது முகாமுக்குப் போராளிகள் இருவரும் திரும்பிக்கொண்டிருந்த சமயம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நிராயுதபாணிகளாக வந்த அவர்கள் மீது துரோகிகள் பதுங்கியிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் குறித்துத் தாம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் நேற்றிரவு முறையிட்டுள்ளார்கள்.

போராளிகள் இருவரும் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளமை ஓர் அப்பட்டமான யுத்த நிறுத்த மீறல் என்று புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் தெரிவித்தார்.

படைத்தரப்பின் ஒத்துழைப்பு இன்றி இத்தகைய ஒரு தாக்குதலை யாராலும் நடத்த முடியாது. இத்தகைய தாக்குதல்கள் புலிகளைச் சீண்டி அவர்களை வலிந்து சண்டைக்கு இழுக்கும் முயற்சியாகும். விசேட அதிரடிப் படையினரின் ஆதரவுடனேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. எனினும், இராணுவத் தரப்பு இதனை மறுக்கும். அது அதனது வழமையான செயற்பாடு என்பது எமக்குத் தெரியும் - என்றார் அவர்.

(ஐ-[illegible])

# வழமைநிலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகங்கள் பிரதி அமைச்சரும், திருமலை அசம்பாவிதங்களை ஆராய்வதற்கென ஜனாதிபதியால் அமைக்கப்பட்டுள்ள குழுவின் உறுப்பினருமான டிலான் பெரேரா நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று நாடாளுமன்றத்தில் தொடர்ந்து இரண்டாவது நாளாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

திருகோணமலையில் மேலதிகமாகக் குவிக்கப்பட்டிருக்கும் அரச படையினரை வாபஸ் பெறுவது தொடர்பாகப் பொறுப்பான அமைச்சர்கள் பதிலளிக்கவேண்டும் எனக் கோரி தமிழ்க் கூட்டமைப்பினர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் ஆர்ப்பாட்டம் நடத்திக் குழப்பங்களை ஏற்படுத்தினர் என்பது தெரிந்ததே. அதனால் சபை நிகழ்வுகளும் இரண்டுமுறை ஒத்திவைக்கப்பட்டன.

நேற்று சபை கூடியபோது, பிரதி அமைச்சர் டிலான் பெரேரா திருகோணமலை நிலைவரம் தொடர்பாக விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

ஆனால், மேலதிகப் படைகளை வாபஸ் பெறுவது தொடர்பான எந்தப் பதிலையும் அவர் அளிக்கவில்லை.

இதனால் அவரது அறிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நிராகரித்தனர். தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் குதித்தனர். இதனால் சபையும் இரண்டுமுறை ஒத்திவைக்கப்பட்டது.

பொறுப்பான ஓர் அமைச்சர் திருமலை விடயம் தொடர்பாக உறுதியான பதிலை அளிக்கும் வரை போராட்டம் தொடரும் என கூட்டணியினர் விடாப்பிடியாக நின்றனர்.

இதன் எதிரொலியாக பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியே பதில் அளிக்கும் நிலை ஏற்பட்டது.

ஜனாதிபதியின் பதிலை சபையில் சமர்ப்பித்துப் பேசிய டிலான் பெரேரா கூறியதாவது:-

இராணுவத்தினரை அனுப்பி நாட்டில் பதற்ற நிலையை ஏற்படுத்துவது அரசின் நோக்கமல்ல. திருகோணமலையில் குண்டுவெடிப்புகளும், கொலைகளும், கடைஎரிப்புகளும் இடம் பெற்றன. இங்கு பீதி நிலை ஏற்பட்டதாலேயே அரச படைகளை மேலதிகமாக அனுப்பிவைக்க வேண்டியேற்பட்டது.

சகல இனமக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த வேண்டியது எனது (ஜனாதிபதி) கடமை. அதில் இருந்து தவறமுடியாது.

இப்பிரதேசத்தில் அமைதியை ஏற்படுத்த சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒவ்வொரு மணி நேரமும் அங்கு ஏற்படும் மாற்றங்களை நான் அவதானித்துவருகின்றேன்.

எனவே, அங்கு நிரந்தர அமைதியையும் இயல்பு நிலையையும் ஏற்படுத்த சகல தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இயல்பு நிலை ஏற்படும்போது படிப்படியாக திருகோணமலையில் குவிக்கப்பட்டிருக்கும் அரச படையினர் வெளியேற்றப்படுவர்.

இப்படி ஜனாதிபதி உறுதியளித்துள்ளார் என்று பிரதி அமைச்சர் நாடாளுமன்றத்தில் அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தமது ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டனர். சபை நிகழ்வுகள் தொடர்ந்தன. (ஐ-க)

# நயினை அம்மன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேவைகள், விசேட படகுச் சேவைகள், தொண்டர் சேவைகள் என்பன செய்யப்பட்டிருந்தன.

அமுதசுரபி அன்னதான சபையினர் இம்முறையும் அடியார்களுக்கு அன்னதானம் செய்தனர்.

அன்னை பூரணியின் திருவுருவப்படம் ஆயை வசந்த மண்டபத்தில் வைக்கப்பட்டு கொடியேற்றத்தையடுத்து பூசை முடிவில் மேளதாளங்களுடன் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு 'அமுதசுரபி' அன்னதான மண்டபத்தில் வைக்கப்பட்ட பின்னர் அன்னதானம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தொடர்ந்து அடியார்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இம்முறை குறிகாட்டுவானில் பயணிகளின் நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக கடற்படையினரும் தொண்டர்களும் பயணிகளை மண்டபத்தில் ஒழுங்குமுறையில் அமரச்செய்து படகுகளுக்கு அனுப்பிவைத்தனர். இதனால் வெய்யிலில் பயணிகள் வாடவேண்டிய நிலை தவிர்க்கப்பட்டது. அத்துடன் போக்குவரத்து கெடுபிடிகள் எதுவும் இன்றி அடியார்கள் தமது பயணத்தை மேற்கொள்ள முடிந்தது.

(ஐ-12-111)

# பொதுக்கட்டமைப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றுக்குப் பதில் சொல்லும் ஓர் ஏற்பாடு எனக் காட்டவைப்பதில் அரசுத் தரப்புத் தீவிரமாக இருக்கின்றது.

ஆனால், ஓர் அமைச்சின் கீழ் செயற்படும் கட்டமைப்பை ஏற்று, அதில் முக்கிய பங்கு வகித்துச் செயற்படப் புலிகள் அடியோடு விரும்பமாட்டார்கள் என்பது உறுதியாகத் தெரிகின்றது.

அதுமட்டுமல்ல. பொதுக்கட்டமைப்புத் திட்டத்தில் புலிகள் தவிர்ந்த ஏனைய தமிழ்க்கட்சிகள், குழுக்கள், தரப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதித்துவமும் இருக்கவேண்டும் என இந்தியா ஏற்கனவே இலங்கை அரசிடம் வலியுறுத்தியிருப்பதால் அந்த விடயத்தை ஒப்பேற்றுவதற்கு இந்த அமைச்சு ஒன்றின் ஊடான செயற்பாட்டுத் திட்டமுறைமையை அரசுத் தரப்புப் பயன்படுத்தக்கூடும் என்றும் புலிகள் சந்தேகிக்கின்றனர்.

அமைச்சு ஒன்றின் கீழ் பொதுக்கட்டமைப்பு இயங்குவதற்கு இடமளித்து - ஒப்புகொண்டு - பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் கைச்சாத்திட்டால், அதன் பின்னர் அந்த அமைச்சுப் பொறுப்பில் சிலவற்றை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவிடம் ஒப்படைத்து, அதன் மூலம் பொதுக்கட்டமைப்புச் செயற்பாட்டில் பிற தமிழ்க் கட்சிகளின் பங்களிப்பையும் தாம் உறுதி செய்திருக்கின்றார் என இந்தியாவுக்குக் காட்ட ஜனாதிபதி முயலலாம் என்ற சந்தேகம் இன்னும் புலிகளுக்கு இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இக்காரணத்தினால் பொதுக்கட்டமைப்புச் சுயாதீனமாக இயங்கும் ஓர் அமைப்பு என்பதையும், அது இலங்கை அரசின் எந்த அமைச்சின் கீழும் வராது என்பதையும் உறுதிப்படுத்தாமல் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான உடன்பாட்டில் புலிகள் கையெழுத்திட முன்வரமாட்டார்கள் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அது மட்டுமல்லாமல், பொதுக்கட்டமைப்பு ஏற்பாட்டுக்கு இணங்கியதன் மூலம், இலங்கையின் இறைமையைப் புலிகள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்ற பாணியில் அரசுத் தரப்புச் செய்யும் பிரசாரங்களும் புலிகளின் தலைமையைச் சீற்றத்தில் ஆழ்த்தியிருப்பதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இவ்விடயம் குறித்து விரிவாக ஆராய்ந்து, பொதுக்கட்டமைப்பை ஏற்பது இலங்கை நாட்டில் இறைமையை ஏற்றதாகாது என்பதைத் தெளிவுபடுத்திய பின்னரே பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் ஒப்பமிடப் புலிகள் இணங்குவர் எனக் கூறப்பட்டது.

அதற்கு அப்பால் இந்தப் பொதுக்கட்டமைப்புத் தொடர்பான இணக்க ஆவணத்தில் யார் ஒப்பமிடுவது என்ற பிரச்சினையும் இழுபறி நிலையைத் தோற்றுவிக்கலாம் எனத்தெரிகிறது.

இந்த உடன்பாட்டில் ஜனாதிபதி தவிர்ந்த வேறு யாரும் அரசுத் தரப்பில் ஒப்பமிட்டால், அந்த உடன்பாட்டுக்கும் அதில் ஒப்பமிட்டவருக்கும் எதிராக நீதிமன்றத்துக்கு யாரேனும் சென்று இடைக்காலத் தடை உத்தரவு வாங்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு எதிராக வழக்குப் போடமுடியாது என அரசமைப்புக் கூறுவதால் இந்த உடன்பாட்டில் அரசு சார்பில் ஜனாதிபதியே ஒப்பமிட்டால் நீதிமன்றங்களின் வீண் தலையீடுகளைத் தவிர்க்க முடியும் என அரசுத் தரப்புக் கருதுவதாகத் தெரிகிறது.

ஆனால், அரசுத் தரப்பில் ஜனாதிபதி மட்டத்தில் இது தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்டால் புலிகள் தரப்பில் தலைவர் பிரபாகரன் மட்டத்தில் அல்லது ஆகக் குறைந்தது அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மட்டத்திலாவது கைச்சாத்திடப்படவேண்டும். அதுதான் மரபு முறையாக இருக்கும் எனக் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆனால், இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சியோடு ஒப்பிடுகையில் முக்கியத்துவம் அற்ற இந்தப் பொதுக்கட்டமைப்பு விவகாரத்துக்கு, அவ்வளவு முக்கியத்துவம் அளித்து தலைவர் அல்லது அரசியல் பொறுப்பாளர் மட்டத்தில் அதில் ஒப்பமிடுவதைப் புலிகள் அடியோடு விரும்பவில்லை எனத் தெரிகின்றது.

எனவே, ஒப்பமிடுபவர் யார் என்ற பிரச்சினையும் இவ்விடயத்தில் சிக்கிப் போயுள்ளது.

இந்த இழுபறி விவகாரங்கள் குறித்து நேரில் பேசித் தீர்ப்பதற்காகவே நோர்வே அனுசரணைத் தரப்பின் சார்பில் அந்நாட்டின் தூதுவர் நேற்றுமுன்தினம் கிளிநொச்சிக்குச் சென்று புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனையும் ஏனையோரையும் சந்தித்துப் பேசினார் எனக்கூறப்பட்டது.

இந்த விடயங்களில் அவரது முயற்சி பெற்றி பெற்றதா, இந்த விவகாரங்கள் குறித்து அவரது வன்னிச் சந்திப்பில் ஆராயப்பட்டு இணக்க முடிவுகள் எட்டப்பட்டனவா என்பதெல்லாம் இன்னும் தெரியவரவில்லை. (க-ஐ)

# போராளிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்புலிகள் பயிற்சிக்காகச் சிலரைக் கடத்திச் சென்று கொண்டிருந்த சமயம் இந்தப் படகு கைதுசெய்யப்பட்டது என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்கள் பின்னர் திருகோணமலைப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. தமது போராளிகள் இருவர் கைதுசெய்யப்பட்டதை உறுதிப்படுத்திய எழிலன், ஏனையவர்கள் அவர்களுக்கு உதவியாகச் சென்றவர்களாக இருக்கலாம் என்று தெரிவித்தார்.

இதற்கிடையே, நேற்றுமுன்தினம் மூதூர் பகுதிக் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 56 முஸ்லீம் மீனவர்களைக் கடற்படையினர் கைது செய்தனர். பாதுகாப்பு வலயப் பிரதேசத்துக்குள் நுழைந்து மீன்பிடித்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களது 6 படகுகளும் கைப்பற்றப்பட்டன. மாலை 4 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

அவர்கள் அனைவரும் நேற்றுத் திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டனர். அவர்கள் அனைவரையும் சரீரப் பிணையில் செல்வதற்கு நீதிவான் அனுமதியளித்தார். (ஐ-க-12)


ஒற்றைத் தலைவலியா...?

எவ்வளவு காலமாக இருக்கிறது?
10 வருடம், 20 வருடம் அல்லது 30 வருடமா?
எவ்வளவு காலம் கஷ்டப்படுகிறீர்களென்பது பிரச்சினையில்லை.
எங்களிடம் நிரந்தரத் தீர்வு உண்டு.
மேலதிக விவரங்களுக்கு எழுதுங்கள்

FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES)
Level 5/ East Tower/1C, WORLD TRADE CENTER, COLOMBO - 01,
Phone: 5517897, 5551879, Fax: 5517756
E-mail: fppvtl@lankabellnet.com Website:www.fppvtl.org
A BOI Approved & ISo 9001 : 2000 Qms Certified Company.
(சி-42740)(15-17)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல.15 சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.(off stanly Rd)
Tele:- 0777222422 , 077 3151647
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING
QUICK BOOKS PRO + ACCPAC + MYOB
ஆரம்பம்:-11-06-2005/12-06-2005
Batch I :-10.30-12.30
Batch II :-01.30-3.00
80% OFF
காலம்:- 4மாதம்

கணக்கீடு
N.சதீஸ்
B.B.A. F.M.Spl
A/L 2006 - பிரிவு II
கம்பனி
ஆரம்பம்: 09.06.2005
Thu. 3 p.m.
பிரிவு I - Mon., Tue. 3 p.m.
புகழ் கல்வி நிலையம்
தாவடி றோட்,
மானிப்பாய். (36333)

IBMS
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு I 10.06.2005
பிரிவு II 12.06.2005
பகல் 10.00 மணி
Diploma Courses
Dip in Microsoft Office
Dip in Internet Technology
Dip in Desk Top Publishing
Dip in Hardware Engineering
Dip in Visual Basic Programming
Dip in Java Programming
தலைமை அலுவலகம்
# 410, K.K.S., Road, Jaffna.
கிளை நிறுவனங்கள்
NMMV Road, Nellindy.
Sangaththanai -Chavakachcheri

N.S.A. மானிப்பாய் வீதி, உடுவில்
A/L 2007 வர்த்தகம்
பிரிவு II
ஆரம்பம்: 10.06.2005 Fri. 4 p.m. (36332)
பிரிவு I நேர அட்டவணை
Acc.: N.சதீஸ் (Sat., Sun. 4 p.m.)
Eco.: E.G.வரன் (Sat., Sun. 3 p.m.)
B.St.: S.யசோ (Sat., Sun. 5 p.m.)

COMPUTER EXPRESS
Institute of Information Technology
இல. 15, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம். (off Stanly Rd.)
0777 222422, 077 3151647
அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
Batch IV-10-06-2005
Batch V -11-06-2005
Batch VI-12-06-2005
80% OFF
15-06-2005க்கு முன் பதிவு செய்து கொள்ளவும். (சி-43253)(16-38)

BRIGHTMAN
நாவலர் வீதி யாழ்நகர்.
A/L 2006 2007
GROUP CLASSES
PHY.: திரு.ஜெயசீலன்
CHE.: திரு.டயஸ்
ஆரம்பம்: 10.06.2005 Fri 6 p.m.
(36364)(16-38)

N.S.A. மானிப்பாய் வீதி, உடுவில்
O/L Day Class
பிரிவு II
ஆரம்பம்: 10.06.2005
Fri. 7 a.m.
(36331)(16-38)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.